Annual Subscription Rs. 6 2nd May 1937. Price 2 As.

# சுதேசமித்திரன்

Vol. 8 வாரப்பதிப்பு No 13

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



வஸந்த காலம்

எல்லாவற்றிற்கும் பின்னால் தோன்றியது

பாடாலி பாம்
சகல வலி நிவாரணி

எல்லாவற்றிற்கும் முன்னால் நிற்பது







ஆரோக்கியத்தின்
முக்கிய ஆதாரம்

# வுட்வர்ட்ஸ்
# கிரைப்வாடர்

இது குழந்தைகளை
நன்கு பாதுகாக்கின்றது

# WOODWARD'S
# GRIPE WATER

W. WOODWARD'S LTD., LONDON, ENGLAND



ஜெர்மனி கீல் கால்வாயில் படகு ஓட்டப் பந்தயம்.

நமது சிறுகதை

# மீட்சி

"கண்மணி நேரமாய்விட்டது, மோட்டார் காத்துக் கொண்டிருக்கிறது. புறப்படுவோம்" என்றார் என்னுருயிர் நாதர்.

அவருடன் நான் மோட்டாரில் ஏறி அவர் பக்கத்தில் உட்கார்ந்தேன். மோட்டாரும் புறப்பட்டது.

தனது கைக்கெடியாரத்தை நோக்கின எனது அன்பர், "மணி சரியாய் நாலேகால் ஆகிறது. இன்று ஞாயிற்றுக்கிழமையல்லவா? ராகு காலத்துக்கு முன் சபா ஹாலுக்குப் போய்ச் சேரவேண்டும். டிரைவர் வேகமாய்ப் போ" என்றார்.

என் காதலருக்குப் பக்கத்தில் சாய்ந்துகொண்டு அவரையே அன்புடன் நோக்கிக் கொண்டிருந்த நான், "மோட்டாரைவிட என் மனம் பதட்டமாய் ஓடுகிறது. தங்கள் இனிய கானத்தைக் கேட்க அவ்வளவு ஆவலுடன் இருக்கின்றேன்" என்றேன்.

சிறுவயதிலேயே பெயரும் புகழும் பெற்றவர் என்னுயிர்த் துணைவர். மிகுந்த இனிமையான சாரீரத்தைப் பெற்ற அவர் வெகு சீக்கிரத்தில் சங்கீத உலகத்தில் முன்னணிக்கு வந்தது ஒரு ஆச்சரியமுமன்று. அப்பொழுது சங்கீத பிரஹஸ்பதியாக விளங்கிய ஒரு பெரியாரிடம் அவர் கான வித்தையை அப்யஸித்தார். வாய்ப்பாட்டில் அவரை வெல்லக்கூடியவர் யாருமில்லையென்று எல்லாரும் மெச்சும்படி அவர் கச்சேரிகள் செய்தார். அவர் கீர்த்தி தென்னடெங்கும் பரவியது. அவரது இனிய குரலால் மயங்காத ஆடவராவது பெண்ணாவது இல்லையென்று சொல்லலாம். அவர் கச்சேரியென்றால் நல்ல பண வசூல். ஹாலில் இடமிருக்காது. சுருதி லயம் இரண்டிலும் அவரது பாண்டித்தியத்தை எல்லாரும் கொண்டாடினர்.

இப்படி பெயரும் புகழும் பெற்ற அவரை நான் முதல் முதல் சந்தித்தது இரண்டு வருடங்களுக்கு முன்னால். அப்பொழுது நான் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் இருந்தேன். என் தந்தை அங்கே ஒரு பிரபலமான நியாயவாதி. அவ்வூரில் பல்லாண்டுகளுக்கு முன்னர் குடியேறிப் பொருளீட்டிய தமிழ் பிரமுகர்களில் அவர் ஒருவர். செல்வத்தில் பிறந்த நான், என் பெற்றோர்களால் மிகவும் பிரேமையாக வளர்க்கப்பட்டேன். என்னைப் பற்றி நானே சொல்லிக்கொள்வது விரஸமாகத் தோன்றக் கூடும். எனினும் என் காதலரே சொல்லியிருக்கிறார் நான் பேரெழில் பெற்ற பெண்ணென்று.

சங்கீத திக்விஜயம் செய்த என் காதலர் இலங்கைக்கு வந்தார். என் தந்தையின் விருந்தாளியாய் எங்கள் வீட்டில் தங்கினார். என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டார். தானும் என்பால் தனது மனத்தைப் பறிகொடுத்தார். எங்களது மனநிலையையறிந்து கொண்ட எனது தந்தை எங்களது விவாகத்தைச் சிறப்பாய் நடத்திவைத்தார். ஆனந்தசாகரத்தில் மூழ்கிய நான், என் கணவருடன் இந்தியாவுக்கு வந்தேன்.

எங்களது இல்வாழ்க்கையின் இன்பத்தை வர்ணிக்க எனக்கு சக்தியில்லை. எங்களைப் போல் மனமொத்த தம்பதிகள் யாரும் இருந்திருக்கமாட்டார்கள் என்று நிச்சயம் கூறுவேன். என்னை மனையாட்டியாக அடைந்த தன் பாக்கியத்தை அவர் அடிக்கடி மெச்சிக்கொள்ளுவார். என்னுடைய அழகில் ஈடுபட்டு அவர் நான் வெட்கமுறும்படி என்னைப் புகழ்வார். "கண்ணாட்டி! உன்னழகே அழகு! உன்னை என் மனைவியாகப் பெற்ற என் பாக்கியமே பாக்கியம்" என்று கொஞ்சுவார்.

இப்படி ஒரு ஸமயம் அவர் ஸல்லாபித்தபொழுது நான் விளையாட்டாக "என் அன்பரே! எனக்கு ஒரு சந்தேகம்!" என்றேன்!

"என்ன அது பிரேமா!" என்று அவர் வினவினார். (என் பெயர் அதுதான்.)

"பிரேமா அழகாயிருக்கும் வரையில்தானே இந்த ஆசை வார்த்தைகளெல்லாம்? அவளது அழகு போய்விட்டால் அப்புறம்—!" என்றேன்.

"பைத்தியம்மாதிரி பேசாதே" என்று கூறிக்கொண்டே என் கன்னத்தை விளையாட்டாய்க் கிள்ளிய அவர், "நாளுக்குநாள் உன் அழகு என் கண்களுக்கு அதிகமாய்த்தோன்றுகிறதேயன்றிக் குறையவில்லை. அது ஒருகாலும் குறையாது. அப்படி அது கெடுவதைப் பார்க்க எனக்குக் கண்ணிருக்காது!" என்றார்.

செல்வத்தில் எங்களுக்கு யாதொரு குறைவுமில்லை. நான் வீட்டுக்கு வந்தபின் என் நாதரின் வரும்படி அதிகரித்தது. வாராவாரம் ஏதாவது கச்சேரியில் பாடாமல் அவர் இருந்ததில்லை. வெளியூர்களிலிருந்து அழைப்புகள் வந்தன. எங்கு சென்றாலும் அவர் என்னையழைத்துக்கொண்டு போகாமல் இருக்கமாட்டார். "கச்சேரியில் முதல் ச்ரோதா நீதான். நீயன்றி என் கச்சேரி சோபிக்காது" என்று அவர் என்னைத் தன்னுடன் அழைத்துச் செல்லுவார்.

அந்தோ! இனி கூறப்படும் சம்பவங்களை நினைக்குங்கால் பகவானுக்கே எங்களதுலைப் பற்ற இனிமையான தாம்பத்யத்தைக் காணப் பொறுக்கவில்லைபோலும்!

ராகு காலத்துக்கு முன்னர் கச்சேரி ஹாலையடைய எண்ணங்கொண்ட என் பதி மோட்டார் ஓட்டியைத் தூண்ட, அவன் வேகமாய் வண்டியைச் சாலையில் திருப்பினான். அவ்வளவுதான் திடீரென மதங்கொண்ட யானையைப் போல் உயர எழும்பியது. படேரென்று ரஸ்தா ஓரத்திலிருந்த பெரிய ஆலமரத்தின் மேல்.........

பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது.

கொஞ்சங் கொஞ்சமாய் உணர்வு எனது உடம்பில் ஊறியபொழுது எனக்கு மிகுந்த அயர்வும் வலியும் தாங்க முடியாத வேதனையும் எழுத்தால் விவரிக்க முடியாது. என் கை கால்களை அசைக்க முடியவில்லை. முதுகில் பிரமாத வலி. கழுத்திலும் வாயிலும் ரண இசிவு. தாங்க முடியாத தலைவலி. ஏதோ ஒரு கொடிய நரகத்தில் உழல்பவள்போலிருந்தது என் நிலைமை.

எனக்கு நிதானமான புத்தி வருவதற்குப் பல மணிகள் பிடித்தன என்று நினைக்கிறேன். நான் ஒரு கட்டிலில் படுத்திருப்பதையும் என் உடம்பிலும் கழுத்திலும் முகத்திலும் பலமான கட்டுகள் கட்டியிருப்பதையும் உணர்ந்தேன்.

அப்பொழுது என் பக்கத்தில் நின்ற லேடி டாக்டர் என்னையன்புடன் நோக்கி, "அம்மா! கவலைப்படாதே! இனி யாதொரு பயமுமில்லை. உன் காயங்கள் சீக்கிரம் ஆறிவிடும். வேலைக்காரி உனக்குப் பால் கொண்டு வருவாள். கொஞ்சங் கொஞ்சமாய் அதை பருகிவிட்டு நன்றாய்த் தூங்கு" என்றாள்.

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று ஹீன சுரத்தில் வினவினேன்.

"இது ஸ்திரீகள் ஆஸ்பத்திரி. நான்கு நாட்களுக்கு முன் நீ இங்கு கொண்டு வரப்பட்டாய்" மோட்டார் விபத்தில் சிக்கிய உனக்கு ரண சிகித்சை செய்யப்பட்டது. நேற்று வரையில் உனக்குப் பிரக்ஞை வரவில்லை. உன் நிலைமை கவலைக்கிடமாயிருந்தது. இனி யாதொரு பயமுமில்லை. நிம்மதியாய் தூங்கு" என்றாள் லேடி வைத்தியர்.

மோட்டார் விபத்தென்றவுடன் பளிச்சென்று எனது முழு ஞாபகம் எனக்கு வந்தது. சொல்லொணாத பயம் என்னைக் கவர்ந்தது.

"ஐயோ! அவர் கதி என்ன?" என்று நான் வாய்விட்டுப் பரிதாபகரமாய் அலறினேன்.

"அம்மா! அழாதே! கடவுள் காருண்யமூர்த்தி உன் புருஷ



லாகூர் மதராஸிகள் சங்கத்தில் நடைபெற்ற டென்னிஸ் போட்டிப் பந்தயங்களில் கலந்துகொண்டவர்கள். (இடது பக்கமிருந்து) ஸ்ரீமான்கள் கே. ராமமூர்த்தி, வி. சங்கர், எஸ். ராமலிங்கம், வி. எஸ். பார்த்தசாரதி.

நம் மோட்டார் ஓட்டியும் உயிர் தப்பினார்கள். ஆனால் அவருக்குக் கழுத்திலும் முகத்திலும் மண்டையிலும் காயங்கள். ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்'' என்று அன்பு ததும்பிய குரலில் கூறினாள் லேடி டாக்டர். அப்பொழுது பணிப்பெண் ஒரு டம்ளரில் பால் கொண்டு வந்தாள். அதைப் பருகிவிட்டு நான் துயிலில் ஆழ்ந்தேன்.

மறுநாள் காலை லேடி டாக்டரும் மருத்துவப் பெண்ணும் என் கட்டிலருகே வந்தனர். நான் விழித்திருந்ததை யுணர்ந்த லேடிடாக்டர், "அம்மா. கண்களைமூடிக்கொள்ளுங் ... ங்கள் கட்டுகளை ... து மருந்து போட ... ம்'' என்றாள். நான் ... மூடிக்கொண்டேன். ... முகத்துக் கட்டுகளை ... பண் மெதுவாய் ... ாள். என் நெற்றி, ... கன்னம் இவற் ... த திராவகத்தால் ... துகளைத் தடவி ... க்டர்.

... மெதுவாய் ... ாத் திறந்து ... எதிரே நோக்கி ... தூரத்தில் ... மாண்டமான ... ல் என் முகம் பிரதி ... து. அதைப் பார்த்த ..., "ஐயோ!'' என்று கூச்சலிட்டேன். என்?

கண்ணாடியில் தென்பட்ட கோரமான முகம் என்னுடைய முகமா? அந்தோ! என்ன விகாரம்! என் முகத்தில் வீற்றிருந்த அழகுத் தெய்வம் எங்கே? மூதேவி குடிகொண்டிருப்பது போலல்லவா தோன்றுகிறது அந்த அவலக்ஷணம் பிடித்த முகத்தில்!

என்னுடைய மன நிலைமையையுணர்ந்த லேடி டாக்டர் "அம்மா வருத்தப்படாதே! நீ உயிர் தப்பினதே பெரிய காரியம். குலைந்துபோன உன்னழகைப் பற்றி நினைத்துக் கஷ்டப்படுவதில் என்ன பயன்? உன் கன்னத்து எலும்பு உடைந்துவிட்டபடியாலும் உன் நெற்றியில் பலத்த காயம்பட்டுவிட்டதாலும் உன் முகத்தின் அழகுக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது என்ன பண்ணுவது?'' என்றாள்.

என்னைப்பற்றி எனக்கு யாதொரு சிந்தனையுமில்லை. ஆனால் என்னழகு என் பிராணேசரை மகிழ்வித்தது அன்றோ? ஐயோ! நான் இனி என் செய்வேன்! யமனிடமிருந்து மீண்ட என் பதியை நான் எப்படிப் பார்ப்பேன்! என் முகத்தின் கோரத்தை அவர் கண்டு எப்படிச் சகிப்பார்? "ஜகதீசா! இதுவும் உன் சோதனையோ?'' என்று அழுதுகொண்டே மூர்ச்சையாய்ச் சாய்ந்தேன்.

எனக்கு மீண்டும் உணர்வு ...

என்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு என் கைகளைத் தடவிக் கொண்டிருந்ததை யுணர்ந்தேன். "அம்மா! அழுதழுது சோர்ந்துபோனால் உனக்கே கெடுதலல்லவா? உன் கணவனை நீ பார்க்க வேண்டாமா? நீ அலட்டிக்கொள்ளாமல் இருந்தால் இன்னும், ஒரு வாரத்தில் உன் பிரியமான நாயகரை நீ பார்க்கலாம்'' என்றாள்.

அவள் வார்த்தைகள் என்னை ஆயிரம் வாட்கள் கொண்டு வெட்டுவதுபோலிருந்தன. என் நாதரை இன்னும் ஒரு வாரத்தில் பார்ப்பதா! ஆ! அவர் தரிசனத்துக்கு நான் காத்துக்கொண்டிருக்கிறேன்! ஆனால், குரூபியான என்னை அவர் பார்க்க வேண்டிய நிர்ப்பாக்கியத்தின் கொடுமைதான் என்னே! ஐயோ! தெய்வம் என்னுயிரைக் கொண்டு போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!

ஒரு வாரம் சென்றது. லேடி டாக்டர் என்னிடம் மிகுந்த அன்பைக் காட்டினாள். என் காயங்கள் ஆறிவிட்டன. மெதுவாய் நான் நடமாடவும் ஆரம்பித்தேன். ஆனால், நான் ஒரு நடைப்பிணமேயன்றிப் பழைய அழகுடன் விளங்கின பிரேமா வல்ல. அந்தோ விதி!

என் கணவரின் காயங்கள் ஆறிவிட்டன என்று லேடி டாக்டர் தெரிவித்தாள். ஆனால், அவருக்குக் கடுமையான ஜுரமும் பின்னர் ஜன்னியும் கண்டுவிட்டனவென்றும் ஆஸ்பத்திரியில் வைத்தியர்கள் மிகவும் ஜாக்கிரதையாய் அவரைப்பரிசீலனைசெய்துவருகின்றனர் என்றும் அவள் கூறினதிலிருந்து தெரிந்தது.

நான் பதைபதைத்து, "ஐயோ! என் பிரிய பதியை நான் பார்க்க வேண்டுமே! அவருக்கு எந்த நிமிடத்தில் என்ன ஆபத்தோ தெரியவில்லையே!'' என்றுகூறி அழுதேன்.

"கவலைப்படாதே அம்மா! நாளைக்கு நீ உன் கணவனைப் பார்க்கலாம்'' என்றாள் லேடி டாக்டர்.

மறு நாள் நான் மோட்டாரில் ஏற்றப்பட்டேன். வண்டி ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கிப் புறப்பட்டது என்னுடன் கூட வந்த பணிப்பெண், "அம்மா, உங்கள் கணவருக்கு ஜன்னி குறைந்துவிட்டதாம். உங்கள் நினைவாகவே அவர் இருக்கிறாராம். நீங்கள் அவர் பக்கத்தில் இருந்தாலே போதுமாம். வியாதி பறந்துவிடும் என்று டாக்டர் சொல்லுகிறார்'' என்றாள்.

ஜெனரல் ஆஸ்பத்திரியையடைந்ததும் நான் என் கணவர் இருந்த அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். என் கால்கள் தள்ளாடின. என்னுள்ளத்தில் பயமும் சந்தேகமும் போராடின. என் கோரத்தைக்கண்டு என் காதலர் சகிப்பாரோ! என்மீது அவருக்குக்


# ஜெனித் திராக்ஷாஸவா

ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி "ஜெனித் திராக்ஷாஸவா'' தயாரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷயரோகத்தின் ஆரம்ப நிலையையும், காசம், இருமல் முதலிய ஈரல் நோய்களையும், ஜலதோஷம், சளி, அஜீர்ணம், மலச்சிக்கல், வாந்தி யெடுத்தல் முதலான நோய்களையும், தொண்டையைப்பற்றின சகல ரோகங்களையும் முழுவதும் குணப்படுத்தும். குழந்தைகளுக்கு உண்டாகும் கக்குவான் இருமலுக்குக் கைகண்ட மருந்து. இது வெகு ருசியுள்ள பானம். தினசரி உபயோகித்தால் குடலைச் சுத்தி செய்து பசியை அதிகரிக்கச் செய்கிறது. படுப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஜெனித் திராக்ஷாஸவாவைச் சிறிது பருகினால், காலையில் எழுந்து வேலை செய்வதற்கு வெகு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

ஒவ்வொரு நகரத்திலும், கிராமங்களிலும் கூட, இப்பொழுது ஜெனித் திராக்ஷாஸவா கிடைக்கும். தபால் மூலமாக இம்மருந்தை அனுப்புவதென்றால் அதிகச் செலவு ஆகும். நீங்கள் இருக்கும் இடத்திலேயே ஜெனித் திராக்ஷாஸவாவை வாங்கினால் உங்களுக்கு லாபமும் சௌகரியமும் உண்டு.

**ஜெனித் கெமிகல் ஒர்க்ஸ்,**

தேவகரன் கட்டடங்கள், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்.

**The Zenith Chemical Works,**

Deokaran Mansions, Princess Street, Bombay, No 2.

சென்னை ராஜதானிக்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் ஹோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—

**ஜே. பலாபாய் & கம்பெனி,**

260, சைனுபஜார் — மதராஸ்.



உத்தரவாதமான

பொன், வெள்ளி நகைகளுக்கும்,

பலவஹர் பட்டு ஜவுளி தினுசுகளுக்கும்

# ஸ்ரீ ஆண்டாள் ஜுவெல்லரிஸ் லிமிடெட்.

109, சைனு பஜார் ரோட், மதராஸ்.


காதல் நிலை பெற்றிருக்குமோ! ஐயோ! கஷ்டம்! இப்படியும் நான் பெண் பிறந்தேனே! என்னென்று சொல்லுவது! விவரிக்க இயலாத உணர்ச்சிகளுடன் நான் என் அன்பர் கிடந்த கட்டிலையடைந்தேன்.

அவரது முகம் கட்டுகளால் மூடப்பட்டிருந்தது. மிகவும் சோர்வுடன் கிடந்த அவர், "பிரேமா! என் பிரேமா! எப்பொழுது வருவாள்?'' என்று அழுத குரலில் மொழிந்தது என் காதில் பட்டது.

"நாதா! வந்து விட்டேன்! அழவேண்டாம்!'' என்று கூறிக்கொண்டே அவர் படுக்கையில் உட்கார்ந்து, அவர் கைகளை மெதுவாய், வருடினேன். கண்மணி பிரேமா! நீ வந்துவிட்டாயா? ஐயோ, உன்னைப் பார்க்கக் கொடுத்து வைக்காத பாவியாய் விட்டேனே நான்'' என்று மீண்டும் அழுதார் என் செல்வக் கண்ணாளர்.

"நாதா! அலட்டிக்கொள்ள வேண்டாம். தங்கள் முகம் கட்டுகளால் மூடப்பட்டிருக்கிறது. என்னைஎப்படிப்பார்க்க முடியும்? உடம்பு குணமாகட்டும். அப்புறம் நான் எங்கே ஓடிப்போகிறேன்'' என்றேன் என் விதியை நினைத்து எனக்குள்ளே வருந்தின நான்.

"கண்மணி! உனக்குச்சங்கதி தெரியாதா! மோட்டார் விபத்தினால் என் கண்கள் குருடாய் விட்டனவே! உயிர் மீண்டயான் உன்னழகை இனி எப்படிப் பார்த்து ஆனந்தப்படப் போகிறேன். நான் மகாபாவி'' என்று சொல்லிக்கொண்டே தலையணையில் சாய்ந்தார்.

விபத்தால் அழகைப் பறிகொடுத்த என்னை என் நாதர் பார்க்கச் சகியார் என்று கருணையுடன் ஈசுவரன் அவரது கண்களைப் பறித்தான்போலும். அந்தோ, கொடும் விதியே! இதுதானோ எங்கள் மீட்சி!!

நமது தொடர் கதை



# கரும்பூதம்

## அல்லது

# கள்வனைக் காதலித்த காரி

[திருச்சி ஸ்ரீமான் கே வி. எஸ். வாஸ், பி. ஏ. (ஆனர்ஸ்) எழுதியது.]

முன் கதைச் சுருக்கம்.

**பாஸ்கரம் பிரபு** விஜயபுரியில் மிகுந்த செல்வவந்தர். அவருக்கு, **கமலா, ஹிமாவதி** என்ற இரு பெண்களுண்டு. மூத்தவளான கமலாவுக்கும் குணசீலம் பிரபுவின் ஒரே குமாரன்

**ஜயந்தனுக்கும்** பீஜப்பூர் கிராமத்திலுள்ள மாளிகையில் விவாகம் நடைபெறப்போகிறது. பாஸ்கரம்பிரபு விவாகத்திற்கான நகைகளை எல்லாம் விஜயபுரியிலுள்ள தமது "மன்மத விலாஸ" மாளிகையில் வைத்திருக்கிறார். துப்பறியும் இலாகா போலீஸ் கமிஷனர்

**துளஸிதாஸ்** நகைகளைப் பாதுகாத்து வருகிறார். ஆனால் கரும்பூதம் பாஸ்கரம் பிரபுவைப்போல் நடித்து மன்மத விலாசத்திற்கு வந்து வைரமாலையைக் கவர்ந்து செல்லுகிறான்.

## அத்தியாயம்......2

## ஆரியபவனத்தில் ஆடம்பர விருந்து

**பா**ஸ்கரம் பிரபுவைப் போல் பகட்டாக நடித்து நவரத்ன மாலையைக் கவர்ந்து வந்த கரும்பூதம் விஜயபுரியின் தென்பாரிசத்திலுள்ள ஒரு பெரிய மாளிகையின் படிக்கட்டுகள் மீதேறி நின்றுகொண்டு தன்னை எவராவது தொடருகின்றார்களாவென்பதைக் கவனித்தான். அப்பொழுது பட்டப்பகலைப்போல் ரமணீயமாகக் காய்ந்துகொண்டிருந்த வெண்ணிலவில் வீதி முழுவதும் வெறிச்சென்றிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் மனித உருவங்களோ அல்லது மோட்டார், சைகிள் முதலான போக்குவரத்து வாகனங்களோ ஒன்றும் தென்படவில்லை. எவர் திருஷ்டியிலும் படாமல் திரும்பிவிட்டோமென்ற களிப்புடன் சிட்டியடித்துக்கொண்டே மாளிகையினுள் பிரவேசித்தான் கரும்பூதம். அடுத்த நிமிடத்தில் வாசற்புறக் கதவும் உட்புறமாகத் தாளிடப்பட்டுவிட்டது.

கரும்பூதம் முதன்முதலாகதான். சில நிமிடங்களுக்குப் பின்னர் அவன் பக்கத்திலுள்ள உடுப்பு அறையிலிருந்து வெளிப்பட்டுத் தாழ்வாரத்தையும் பணியாள் படுத்திருந்த கட்டிலையும் கடந்து இரண்டாவது மாடியிலிருக்கும் தனது பிரத்யேக அறையை நோக்கி நடந்தான். அவனைச் சற்று முன் பார்த்தவர்கள் இப்பொழுது மறுபடியும் திரும்பிப் பார்ப்பார்களானால், கட்டாயமாகத் திகைத்துப்போய்விடுவார்களென்றே சொல்லிவிடலாம். ஏனெனில், இப்பொழுது அவன் கட்டுத்தளராத ஒரு இளைஞனாகத் தென்பட்டான். பாஸ்கரம் பிரபுவைப்போல் நடிக்கையிலிருந்த மீசை, பட்டாடை, வெல்வெட்டு கச்சை முதலானவைகள் அவனிடம் காணப்படவில்லை. கொழுத்த பணக்காரர்களுக்குரிய மமதையும், கம்பீரமும் அவனுடைய நடையுடைபாவனைகளில் இப்பொழுது தோன்றவில்லை. மரப்பதுமைகளை வைத்து மனமகிழ்ந்து கொண்டிருக்கும் பச்சிளங் குழந்தைகளின் வதனங்களைப்போல் அவனுடைய முகத்திலும் ஆனந்தம் பொங்கியெழுந்து கொண்டிருந்தது. களவுத் தொழிலைக் கைகொண்டிருப்பினும் நல்லொழுக்கத்திலிருந்து சற்றும் பிறழாமல் நேர்மையாக நடப்பவனைப்போல் அவனுடைய நயனங்கள் களங்கமின்றிப் பிரகாசித்

தியாரின் அழகான பாட்டுகளிலொன்றை இனிமையாகப் பாடிக்கொண்டே தனது பிரத்யேக அறையை அடைந்தான் கரும்பூதம். அவனுடைய கரத்திலிருந்த நவரத்னமாலை நீலநிற விளக்கின் ஒளியில் ஜோதிமயமாகப் பிரகாசித்தது. "சபாஷ்! மிஸ்டர் துளஸிதாஸ், சபாஷ்!! கரும்பூதம் வந்தாலும் இன்று கவலையில்லையென்றல்லவா சொன்னீர்கள்? கரும்பூதம் எப்படிப்பட்டவனென்பதை இப்பொழுதாவது பிரத்யக்ஷமாகத் தெரிந்துகொண்டீர்களா? ஊம், போலீஸ்காவல்! போ...லீ...ஸ் காவலா? அது என்னை என்ன செய்யும்? இதுவரையில் நான் உங்களையும் உங்களுடைய சகாக்களையும்போல் எத்தனை புலிகளைப் பார்த்துவிட்டேன் தெரியுமா?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே கட்டிலின் மீது விரிக்கப்பட்டிருந்த படுக்கையில் படுத்தான் கரும்பூதம். அவ்வமயம் தாழ்வாரத்தில் உறங்கிக்கொண்டிருந்த பணியாள் எழுந்து வந்து உள்ளே பிரவேசித்தான்.

"யாரது? முகுந்தனா? என்ன விசேஷம்? உறங்கிக்கொண்டிருந்தவன் எதற்காக எழுந்து வந்தாய்?" என்று வினவினான் கரும்பூதம்.

"மாஸ்டர்! இரவு சுமார் பத்து மணிக்கு ஸ்டாண்டர்ட் பிரஸ் மானேஜர் கடையை மூடிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பும்பொழுது உங்களைப் பார்ப்பதற்காக வந்தார். நீங்கள் வெளியில் சென்றிருப்பதாக நான் தெரிவித்தேன். அவர் ஒரு கடிதமெழுதிக் கொடுத்து உங்களிடமளிக்கும்படிச் சொல்லிவிட்டுச் சென்றார்!" என்று கூறி ஒரு கடிதத்தைக் கரும்பூதத்தினிடமளித்தான் முகுந்தன். அக்கடிதத்தில் பின்வருமாறு

கடி

அன்பார் ஸ்ரீமான் சரத் களுக்கு:—

நலம்: தங்க வது அதுவே மணிக்குத் தங்களை வந்தேன். நீங்கள் சென்றிருப்பதாகப் பணி கூறினான். ஆகையால் இந்தக் கடிதத்தை எழுதி வைக்கின்றேன்.

சென்ற வாரத்தில் நாம் சந்தித்தபொழுது "மங்கள விலாசத்துக் கொலை மர்மம்" என்ற தலையங்கத்துடன் புதிய நாவலொன்றை எழுதிக்கொண்டிருப்பதாகவும் அது அனேகமாகப் பத்தாம் தேதிக்குள் முடிவடைந்துவிடுமென்றும் தாங்கள் கூறியது ஞாபகமிருக்கலாம். அதைப் பெற்றுக்கொண்டு போகவே இன்று வந்தேன். தங்களது நாவல்களைப் பொதுஜனங்கள் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்களென்பதைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை! எழுதிக்கொண்டிருக்கும் நாவலை எங்களது கம்பெனிக்கே கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நான் முகஸ்துதி செய்வதாகவும் தாங்கள் தயவுசெய்து எண்ணிவிடக்கூடாது. உண்மையில், உங்களுடைய நாவல்கள் வெளிவரத்தலைப்பட்ட பின்னர் வேறு புத்தகங்களை எவருமே வாங்குவது கிடையாது. அனுதினமும் உங்களுடைய நாவல்களுக்காக வந்து

**மனோரஞ்சனி**

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் **சம்சார சன்னியாசி** என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.



மர்மமாக வைத்திருந்த தனது இரகசியங்களையெல்லாம் கடைசியாகப் பெண்மணியொருவள் கண்டுபிடித்துவிட்டாளேயென்றெண்ணி மனம் புழுங்கினன் கரும்பூதம். சில விநாடிகள்வரையில் சலவைக்கற் பதுமைபோல் சமைந்து நின்ற சாத்சந்திரன் பேசுவதற்கு முயற்சித்தான்.

குவியும் ஆர்டர்களுக்கும் கணக்கில்லை.

அன்பரே! தங்களுடைய பேராதரவின் காரணமாக எங்களுடைய பிரசுராலயத்தின் கௌரவம் உச்சஸ்தானத்தை யடைந்துவிட்டது. அதற்காக நாங்கள் என்றென்றும் தங்களுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். தங்களுடைய கடைசி நாவலில் இதுகாறும் 20,000 பிரதிகள் செலவாகியிருக்கின்றன. அதற்கு முந்திய நாவலில் சுமார் 35,000 பிரதிகளுக்கு மேல் விற்பனையான விஷயம் தங்களுக்குத் தெரிந்ததே. ஆகையால் இப்பொழுது எழுதிக்கொண்டிருக்கும் நாவலையும் எங்களுக்கே கொடுத்து எமது கம்பெனியை ஆதரிக்கவேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,

என்றும் நன்றி மறவாத

பி. எஸ். கோபால்.

ஸ்டாண்டர்ட் பிரஸ்.

மேற்படி கடிதத்தைப்படித்து முடித்ததும் கரும்பூதம் முகுந்தனை நோக்கி "முகுந்தா! தாழ்வார அறையிலுள்ள மேஜையின்மீது ஒரு காகிதக் கட்டு வைத்திருக்கின்றேனல்லவா? அதைக்காலையிலெழுந்தவுடன் ஸ்டாண்டர்ட் அச்சு இயந்திர சாலையில் கொண்டுபோய்க் கொடுத்துவிடு!'' என்றான்.

"மாஸ்டர்! அந்த நாவலை எழுதி முடித்துவிட்டீர்களா''? என்று வினவினன் முகுந்தன்.

"ஆகிவிட்டது! அதைப் பெற்றுக்கொண்டு போகத்தான் கோபாலர் இங்கு வந்திருந்தார்! இன்னும் எவ்வளவோ கம்பெனிக்காரர்கள் எனது நாவலை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது அவர்களிடையிலிருக்கும் போட்டியில் கோபாலரோடு செய்து கொண்டிருக்கும் பழைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டுப் புதிய நாவலை வேறொருவருக்குக் கொடுத்தால் கட்டாயமாக 2000 ரூ. அல்லது 3000 ரூ. அதிகமாகக் கிடைக்கும். எனினும் இதுவரையில் ஆதரித்து வந்த கோபாலரை இப்பொழுது கைவிட்டுவிட என் மனம் இடம் கொடுக்கவில்லை. நமக்கு மனிதர்கள் பெரிதேயன்றிப் பணம் பெரிதில்லையல்லவா?'' என்றான் கரும்பூதம்.

"ஆமாம், மாஸ்டர்! கோபாலர் ரொம்பவும் யோக்யமான மனிதர்!'' என்றான் முகுந்தன்.

"ஆம்! எனக்கும் தெரியும்! எழுதி வைத்திருக்கும் நாவலைக் காலையில் அவரிடமே கொண்டுபோய்ச் சேர்த்துவிடு! இதோ பார், இந்தக் கடிதத்தில் என்னையும் எனது நாவல்களையும் பற்றி அளவு கடந்து போற்றியிருக்கிறார்! என்னுடைய புகழில் உனக்கும் பாத்தியமுண்டல்லவா? இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு என்னுடைய மேஜையில் வைத்துவிடு!'' என்று சொல்லிக் கரும்பூதம் கையிலிருந்த கடிதத்தை முகுந்தனிடமளித்தான். முகுந்தன் புன்முறுவலுடன் அதைப் பெற்றுக்கொண்டு அறையை விட்டகன்றான்!

நேயர்களே! இந்த சந்தர்ப்பத்தில் கதையின்போக்கிற்குக் கரும்பூதத்தின் பூர்வோத்திரங்களைப்பற்றிச் சில விஷயங்களைக் குறிப்பிட வேண்டியது அவசியமாக இருக்கின்றது. நமது கரும்பூதத்திற்குத் தற்சமயம் இருபத்து எட்டு வயதாகின்றது. எனினும், அவன் இருபது அல்லது இருபத்தொரு பிராயத்தைக் கடவாத இளைஞனாகவே காணப்பட்டான். சிற்றின்ப லீலைகளில் சற்றும் ஈடுபடாத பூரண பிரம்மசாரியான கரும்பூதம் நல்ல சரீரக் கட்டுடையவனாகவும், வசீகரத் தோற்றமுடையவனாகவு மிருந்தான். நிஷ்களங்கமான அவனது வதனத்தில் முல்லைச் சிரிப்பு மறையாமல் நர்த்தனம் செய்து கொண்டிருந்தது. வானக்கருமையுடன் ஜோதிமயமாகப் பிரகாசித்த விழிகளில் துடிதுடிப்பும் சுறு சுறுப்பும் பிரதிபலித்தன. விசாலமான மார்பகமும் தோட்களும் புராணகாலத்திய வில் வீரர்களின் அவயவங்களையொத்திருந்தன: சுருங்கக் கூறுங்கால் மன்மத ஸ்வரூபனை கரும்பூதம் உச்சி முதல் உள்ளங்கால்வரையில் ஒரு போர் வீரனாகவும், கருணையின் சிகரமாகவும், அன்பின் அ

2. டாக்டரே, நடுத்தர வயதினன் வாலிப சக்தியை இழப்பது சகஜம் தானே?

1. "மீண்டும வாலிபம் அடைவேனானல்''

3. மனைவி: "மீண்டும இருபது வயது இளைஞர்போ லிருக்கிறீர்களே''



"இரத்தக் கொதிப்பே உங்கள் வலுக்குறைவுக்குக் காரணம் கல்ஸானா சாப்பிடுங்கள்; புதிய வலுவு பெறுவீர்கள்''

கணவன். "கல்ஸானா சாப்பிட்டதிலிருந்து என் ஜீவசக்தி உயர்த்து விட்டது''




# வாலிப வலுவு

கல்ஸானா இரத்தநீகோசங்களுக்கும், தசைகளுக்கும் வலுவூட்டுகிறது: தேக உருப்புகள் ஒவ்வொன்றிற்கும் உரமளிக்கிறது; மீண்டும் தேகம் பூராவும் வாலிப சக்தி ததும்பும்படிச் செய்கிறது.

'தலைவலி, தசைச்சோர்வு, முதலிய நோய்களால் சதா நான் அவதிப்பட்டுக்கொண்டிருந்தேன் ஆனால் கல்ஸானா சாப்பிட ஆரம்பித்ததும் பல நோய்கள் மாயமாய் மறைந்துவிட்டன.'' என்று ஈபோவிலிருந்து (F. M. S.) மிஸ்டர் CH WS எழுதுகிறார்.

சொற்பகாலம் கல்ஸானா சாப்பிட்டால் வயோதிகத்தின் சின்னங்கள் தடைபட்டுவிடும். கல்ஸானா புதிய வாலிபமளித்து கல்யாண வாழ்விற்கு இன்பமூட்டுகிறது

தாமதிக்கவேண்டாம்! உங்களருகிலுள்ள மருந்து வியாபாரிகளிடமிருந்து ஒரு புட்டி கல்ஸானா மாத்திரைகள் வாங்கிக்கொள்க. விரைவில் நீங்கள் ஆரோக்கியமும், இளமையும் பெறுவீர்கள்.

# Kalzana

மேலான ஆரோக்கியமளிக்கும் உலோக உணவு கைபடாமல் தயாரிக்கப்படுவது.

தாரமாகவும், ஒழுக்கம் தவருது நேர்மையாய் நடப்பவனுகவும் தென்பட்டான். அவனை நேரில் பார்ப்பவர்கள் நள்ளிரவில் பல கொள்ளைகளை நடத்தும் கரும்பூதம் இவன் தானென்று ஆயிரம் முறை பிரமாணம் செய்தாலும் நம்பமாட்டார்களென்பது நிச்சயம்.

நமது கரும்பூதம் சிறந்த அறிவாளி. ஆங்கிலம், சமஸ்க்ருதம், தமிழ், ஹிந்தி இந்நான்கு பாஷைகளிலும் பாராட்டத் தகுந்த பாண்டித்யமுடையவன். கவிச்சக்கிரவர்த்தி பாரதியாரிடம் அவனுக்கு ஒரு தனிப் பிரமையுண்டு. அவருடைய கவிதைகளையும் காவியங்களையும் நமது கரும்பூதம் மனப்பாடம் செய்து வைத்திருந்தான். சித்திரம், சிற்பம், சங்கீதம், நடனம் முதலான கலைகளிலும் அவனுக்கு மோஹமதிகம். மேடைகளின் மீதேறி சரமாரியாகச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதில் நிகரற்றவனென்ற பட்டம் வெகு காலத்திற்கு முன்னரே அவனுக்குக் கிடைத்து விட்டது. இந்தியாவின் இணையிலாத் திலகங்களான பண்டித ஜவஹர்லால் நேரு முதலியோர்களைப்போல் பெரிய பெரிய கூட்டங்களைப் பூரணமாக வசியப்படுத்தும் சக்தி நமது கரும்பூதத்தினிடமும் பொருந்தியிருந்தது. பிறர் கூறுவதைப் பொறுமையுடன் கிரகித்துக்கொள்ளும் தன்மையும், எல்லாத் துறைகளிலும் எதிரிகளின் கண்டனத்திற்கு இடம் வைத்துக்கொள்ளாமல் சாமர்த்தியமாக விவாதிக்கும் திறமையும் அவனிடம் ஒருங்கே அமைந்திருந்தது மற்ருெரு விசேஷமாகும்! இவ்வளவு பெரிய மேதாவியை ஒரு கொள்ளைக்காரனென்று சொல்ல எவர்தான் மனந்துணிவார்கள்? எனினும், அவன் ஒரு கொள்ளைக்காரனே! நள்ளிரவில் பிறர் பொருளைக் கைப்பற்றும் ஒரு கள்வனே!

நமது கரும்பூதம் நடத்தையில் ஒரு கள்வனைப்போல் தென்படினும் உள்ளத்திலும் உதிரத்திலும் அவன் கள்வனல்லவென்பதை நேயர்களுக்குச் சொல்லவேண்டியது எம்முடைய கடமையாக இருக்கின்றது. ஏனெனில், அவனுடைய அந்தரங்க நடவடிக்கைகளையும், அவனுக்கும் இதர கள்வர்களுக்குமுள்ள பேதங்களையும் கூர்மையாகப் பரிசிலனை செய்து பார்ப்பவர்கள் அவனைப் பழித்துப் பேசமாட்டார்களென்பது எமது துணிபு. கரும்பூதத்திற்குக் களவாட வேண்டுமென்ற அவசியம் கிடையாது. களவாடும் பொருள்களையும் அவன் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளுவதில்லை. அவனுடைய பெட்டிகளில் சர்க்கார் காரியாலயங்களிலிருந்தும், ஏழைகளை இரக்கமின்றி நடத்தும் கர்விகளிடமிருந்தும் களவாடிவரப்பட்ட பல பொருள்கள் துருப்பிடித்துக் கொண்டிருக்கின்றன. அவனிடமிருந்து பெரும் பெரும் தொகைகள் அடிக்கடி தர்மசாலைகளுக்கும், சத்திரங்களுக்கும் பஞ்ச நிவாரணத்தின்பொருட்டும் போய்க் கொண்டிருக்கின்றன. சற்குணமுடைய சிலர்களின் இல்லங்களில் அவன் நுழைவதே கிடையாது. அப்படி நுழைந்தாலும் கவர்ந்துவரும் பொருளைச் சில தினங்களுக்குள் திரும்பவனுப்பிவிடுவது அவன் வழக்கம். களவை அவன் ஒரு கலையாகக் கருதி வந்தான். மனதிற்கு ஒரு ஊக்கத்தையும் உத்சாகத்தையும், பரபரப்பையும், துடிதுடிப்பையுமளிப்பதற்காக நமது கரும்பூதம் களவாடி வந்தானேயன்றிப் பிறர் பொருளைக் கைப்பற்றித் தான் சுகிக்கவேண்டுமென்ற நோக்கம் அவனுக்குக் கொஞ்சமும் கிடையாது. காவலாளிகளில்லாத வீடுகளிலிருந்து கணக்கற்ற ஆபரணங்களைக் கவர்ந்து வருவதைவிட ஆயிரம் போலீஸ் சேவகர்களுக்கு இடையிலுள்ள அற்பமான பொருள்களைக் களவாடி வருவதிலேயே அவனுக்கு ஆனந்தமதிகம்.

களவு தொழிலில் கைதேர்ந்தவனுன நமது கரும்பூதம் துப்பறி நாவல்கள் வரைவதில் பெரிய நிபுணன். அவனுடைய நூல்களிலெல்லாம் களவைக் கலையாகக்கொண்ட கொள்ளைக்காரர்களே கதாநாயகர்களாக இருப்பது வழக்கம். மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்தும் போலீஸ் சிப்பந்திகளின் படாடோபங்களையும் துப்பறி நிபுணர்களின் திறமையின்மையையும் ஆங்காங்கு பட்டவர்த்தனமாக எடுத்துரைப்பதில் நமது கரும்பூதத்திற்கு விருப்பமதிகம். சரத்சந்திரன் என்ற சொந்தப் பெயருடன் வெளியிடப்பட்ட முதல் நாவல் நமது கரும்பூதத்தை வானத்தில் தூக்கி வைத்துவிட்டது. சென்னை ராஜதானியிலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் அவனைப் பெரிதும் பாராட்டி மதிப்புரை வரைந்திருந்தன. சுமார் இரண்டு மாதங்களுக்குப்பின் நமது கரும்பூதம் மற்ருெரு நாவலை வெளியிட்டான். அந்த நாவல் கரும்பூதத்தின் உண்மைப் பெயராகிய சரத்சந்திரன் என்ற நாமதேயத்தை நாவல் உலகத்தில் என்றென்றும் மறக்கமுடியாமற் செய்துவிட்டது. இது முதல் நமது கரும்பூதத்திற்கு மாதந்தோறும் 400 அல்லது 500 ரூபாய்க்குக் குறையாமல் சராசரியாக வருமானம் கிடைத்துக்கொண்டு வந்தது. ராஜதானியிலுள்ள எல்லாப் பிரமுகர்களும் அவனுக்கு நெருங்கிய நண்பர்களானுர்கள். போலீஸ் இலாகா உத்தியோகஸ்தர்கள்கூடச் சிற்சில சந்தர்ப்பங்களில் சிக்கலான வழக்குகள் சம்பந்தமாக நமது கரும்பூதத்தின் ஆலோசனையைக் கேட்பதுண்டு. எல்லோரும் அவனை சரத்சந்திரனென்று அறிவார்களேயன்றிக் கரும்பூதமென்றறியார்கள்! கரும்பூதமும், சரத் சந்திரனும் ஒருவரேயன்றி இருவரல்லவென்னும் இரகசியம் உலகில் ஒருவருக்கும் தெரியாது. கரும்பூதத்தின் குணுதிசயங்களை இத்துடன் நிறுத்தி நமது கதையை மேலே தொடருவோம்.

* * * *

கட்டிலில் படுத்துச் சுருட்டுக் குடித்துக்கொண்டிருந்த கரும்பூதம் வாயிலிருந்து வெளிப்படும் புகை வளைந்து வளைந்து செல்லுவதை நோக்கியவாருகச் சிந்தனையிலாழ்ந்திருந்தான். அவ்வமயம் டெலிபோனின் மணி கிணுகிணுவென்றடித்தது. ஒருக்கால் கோபாலர் நாவல் விஷயமாகப் பேசுவதற்காக அழைக்கின்ருரோவென நினைத்து, டெலிபோனைக் கையிலெடுத்துக்கொண்டு "ஹலோ! யாரது பேசுகிறது?" என்று வினவினுன் கரும்பூதம்.

"அங்கு பேசுவது கரும்பூதம்தானே?" என்று டெலி



ஜகத்ரஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம் 125,6600. ஜனங்கள் போற்றுவது பரீஷை ஜெயம், ஜீவன விருத்தி. சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1 க்கு, ரூ 2. மாந்திரீக மருத்துவ ஆபீஸ், வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

# நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

## மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிருர். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 9அணு.

எல்லா முதல்தர கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

ஹோல் ஸேல் ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனு பஜார் ரோட், மதராஸ்.

போனின் மற்றொரு புறத்திலிருந்து கேள்வி பிறந்தது. அதைச் செவியுற்ற கரும்பூதம் நடுநடுங்கினான். அவனுடைய சரீரம் அச்சத்தினால் மயிர்க்கூச்சலிட்டது. ஒருவர் திருஷ்டியிலும் படாமல் தப்பி வந்துவிட்டோமென்று சற்று முன் வரையில் நினைத்துக்கொண்டிருந்த கரும்பூதத்தை டெலிபோனில் வந்த கேள்வி திடுக்கிடச் செய்துவிட்டது ஓர் ஆச்சர்யமல்ல! தவிர மேற்படி வினாவை விடுத்தது ஒரு பெண்ணைப்போல் தோன்றியதால், இவ்வளவு காலம்வரையில் மர்மமாக வைத்திருந்த தனது இரகசியங்களையெல்லாம் கடைசியாகப் பெண்மணியொருவள் கண்டு பிடித்துவிட்டாளேயென்றெண்ணி மனம் புழுங்கினான் கரும்பூதம். சில வினாடிகள் வரையில் சலவைக் கற்பதுமையைப்போல் சமைந்து நின்ற சரத்சந்திரன் கடைசியாகப் பேசுவதற்கு முயற்சித்தான். ஆனால் அவனுடைய நாவு நகர மறுத்துவிட்டது. இதற்கிடையில் "ஹலோ! ஹலோ!" என்று பத்துப் பதினைந்து முறை டெலிபோனில் அழைப்பு வந்துவிட்டது.

கரும்பூதம் தனது மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, "ஹலோ! யார் பேசுகிறது?" என்றான்.

"அங்கு பேசுவது கரும்பூதம்தானே? நான் திடீரென்று அழைத்ததால் கலவரமடைந்துவிட்டீர்களோ?" என்று மறுபடியும் வினவியது டெலிபோன் குரல்.

"ஆம்! அது பெண்தான்! தவிர, மிருதுவான இனிய த்வனியிலிருந்து அவள் பருவ மங்கையாக இருக்கவேண்டுமென்றும் நினைக்கின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அவளிடமிருந்து சாமர்த்தியமாகப் பேசித் தப்பித்துக்கொள்ள வேண்டும். இன்றேல், அடுத்த வினாடியில் கமிஷனர் துளஸிதாஸும் கான்ஸ்டேபிள்களும் இங்கு வந்துவிடுவார்கள். பொழுது புலர்ந்தால் சூரியனின் வெளிச்சத்தை மறுபடிச் சிறைச்சாலையில்தான் காணவேண்டும்!" என்று தனக்குள் பலவாறாகச் சிந்தித்துக்கொண்டே "ஹலோ! அங்கு பேசுவது யார்? உங்களுக்கு யார் வேண்டும்? கருப்பண்ணன் என்ற பெயருடையவர் இங்கு ஒருவருமில்லையே!" என்று தந்திரமாகப் பதிலளித்தான் கரும்பூதம். டெலிபோனின் மற்றொரு புறத்தில் கலகலவென்று ஒருவர் சிரிக்கும் சப்தம் கரும்பூதத்திற்குக் கேட்டது. அடுத்தாற்போல் "சபாஷ்! மிஸ்டர் கரும்பூதம், சபாஷ்!!" என்றாள் டெலிபோன் மாது.

கரும்பூதம் ஒரு பெருமூச்சு விட்டான். ஆனால் அவன் இன்னமும் நம்பிக்கையைப் பூராவாக இழந்துவிடவில்லை. குரலிலிருந்து அடுத்த முனையில் பேசும் பெண் மலையாள தேசத்தைச் சேர்ந்தவளாக இருக்கவேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டே, "அம்மணி! நீங்கள் தவறான நம்பரில் பேசுகின்றீர்களென்று நினைக்கிறேன். நீங்கள் சொல்லும்பெயருடையமனிதர் இங்கு இல்லை!" என்றான் கரும்பூதம்.

"நான் தவறான நம்பரிலா பேசுகிறேன்? சரி; இருக்கட்டும்! நீங்கள் நாவலாசிரியர் திரு சரத்சந்திரர் தானே? அதுவுமில்லையென்று சொல்லப் போகின்றீர்களோ?" என்று ஏளனம் செய்யும் குரலில் மீண்டும் வினவினாள் டெலிபோன் மாது.

"ஆம்! இங்கு பேசுவது சரத்சந்திரன்தான்!" என்று ஒப்புக்கொண்டான் கரும்பூதம்.

"அப்படியானால் நான் பேசுவது கரும்பூதத்துடனல்லவா?" என்றாள் மர்மப்பெண். அவளுடைய குரலில் கோபமும் பரிகசிப்பும் ஒருங்கே த்வனிப்பதைக் கேட்டு அஞ்சினான் கரும்பூதம்.

"என் மௌனம் சாதிக்கிறீர்கள்? என்னிடம் உண்மையை ஒப்புக்கொள்ளாவிடில் துப்பறி துளஸிதாஸும் போலீஸ் இன்ஸ்பெக்டர்களும் மறுநிமிடம் உங்களுடைய மாளிகையை முற்றுகையிடுவார்கள். பிறகு அவர்களிடமாவது இரகசியங்களை வெளியிடுகின்றீர்களாவென்பதைப் பார்க்கிறேன்!" என்று மறுபடியும் கண்டிப்பான த்வனியில் பேசினாள் மர்மப் பெண்.

(தொடரும்)


லக்ஸ் சலவையில் நீங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டுவது :



நிறைய லக்ஸ் நுரையை உண்டாக்கவும் (மெல்லிய வஸ்திரங்களுக்கு குளிர்ந்த ஜலமே வேண்டும்.



உடைகளை லக்ஸ் நுரையில் அழுக்குப் போகும்வரை மெதுவாக கசக்கவும். மெல்லிய வஸ்திரங்களை சீக்கிரம் சலவை செய்யவும்.



மும்முறை குளிர்ந்த ஜலத்தில் அலசவும்.



உலர்ந்த டவலில் சுருட்டி ஈரத்தைப் பிழிந்து காற்றோட்டமான இடத்தில் உலர்த்தவும். துண்ணிய உடைகளை வெய்யிலிலோ, உஷ்ணமான இடத்திலோ உலர்த்தவேண்டாம். மேலங்கிகளை கொடிகளில் உலர்த்துவது நலம்.




உங்களுடைய சகலவிதமான உடைகளுக்கும் லக்ஸ் உபயோகமானது. அதிநுட்பமான உடைகளையும் பத்திரமாகச் சலவை செய்யலாம்.

மலிவான மட்ட சோப்புகளும், சூடான தண்ணீரும், உங்கள் உடைகளைக் கெடுத்து, சாயத்தையும் மாற்றுகிறது. நூலிழைகளையும் கெடுக்கின்றன.

லக்ஸ் குளிர்ந்த ஜலத்திலேயே கரைந்து, உடைகள் கெடாத வண்ணம் சலவை செய்கிறது. இந்த சலவையில் அடித்துத் துவைக்க வேண்டியதில்லை யாதலால், மேலங்கி முதலியவைகள் உருமாறாமல் அழகாக இருக்கின்றன.

LUX லக்ஸ்




லக்ஸ் சுத்தமான தாவர எண்ணெகளினால் இந்தியாவில் செய்யப்பட்டது.

லக்ஸ் குளிர்ந்த ஜலத்திலேயே உபயோகிக்கலாம்.

X-LX 546/2-288A

LEVER BROTHERS (INDIA) LIMITED
TAMIL

தென்னிந்தியப் பிரமுகர்கள்



----By Courtesy, H. H. The Maharaja of Mysore

### மஹாமஹோபாத்யாய

# விரூபாக்ஷ சாஸ்திரிகள்

## (1873—1936)

(கே. எஸ். ஆர்.)

"மிகவும் துர்ப்பலமான பிராம்மண ஜன்மத்தை அடைந்து படிப்படியாகப் பிரம்மசர்யம் முதலான ஆச்ரமங்களில் புகுந்து அந்தந்த ஆச்ரமத்திற்குரிய ஸத்கர்மங்களைச் செய்துகொண்டு லௌகிக ச்ரேயஸ்களை ஆனுஷங்கிகமாகவெண்ணித் தமது க்ருதார்த்தை மட்டுமே முக்கியக் கருத்தாகக் கொண்டு கொஞ்சமேனும் ஒழுங்கு தவறாமல் நடந்து, தமது ஜீவன ரீதியை இதரர்கள் த்ருஷ்டாந்தமாகக் கொண்டு நடக்கும்படித் தமது ஆயுட்காலம் முழுதும் ஜீவனத்தை நடத்திவந்த அநேக மஹான்களுக்கு நமது பாரத பூமியானது ஜன்மமளித்திருக்கிறது. கலிகால மான்மியத்தினுலும், இதர தேசியர்கள் சம்பந்தத்தினுலும் அத்தகைய பெரியோர்களைக் காண்பது நாளுக்குநாள் அரிதாகி வருகின்றது. கலியின் ப்ரபாவம் தினே தினே அதிகரித்து வந்தும் காலத்தின் கோலத்திற்கு ஈடுபடாமல், பழைய பழக்க வழக்கங்களை நடத்திக் கொண்டு, மஹா வித்வான்களாக விளங்கி ஆதர்ச ஜீவியத்தை நடத்தியவர்களுள் பிரும்மஸ்ரீ ஹாநகல் விருபாக்ஷ சாஸ்திரிகளும் ஒருவர். 'சுசீனும் ஸ்ரீமதாம் கேஹே யோக ப்ரஷ்டோபிஜாயதே' என்று கீதையில் பகவான் அருளியிருக்கிறார். அந்த யோகப்ரஷ்டர்கள் யார் என்ற பிரச்னம் வருமானல் அதற்கு நமது சாஸ்திரிகளைப் போன்றவர்தான் என்று தாராளமாகப் பதில் கூறலாம். இப்படி அநேக ஸத்குணங்களும், ஆஸ்திக்யமும் கர்மானுஷ்டானமும், படிப்படியாய் ஆச்ரமங்களை யடைந்து அந்தந்த ஆச்ரமங்களுக்குத் தகுந்தவாறு நடந்துகொண்டு, பிரதியொரு மனிதனிடமும் ப்ரீதி விசுவாஸ கௌரவங்களுக்குப் பாத்திரராகி, மஹாபண்டிதராகவும், லோகத்திற்குத் தம்மால் இயன்றமட்டும் உபகரித்து, தமது காலமான பிறகும் ஆசந்திரார்க்க ஸ்தாயியான கீர்த்தியை நிலைநாட்டித் தாமும் க்ருதார்த்தத்தையடைந்த, பூர்வாஸ்ரமத்தில் மஹாமஹோபாத்யாய வித்யாநிதி வித்யாவாசஸ்பதி நியாய பஞ்சானன ஆஸ்தான மஹா வித்வான் தர்மாதிகாரி ஹாநகல் விருபாக்ஷ சாஸ்திரிகள் என்கிற ஸ்ரீஸ்ரீ வித்யாபிநவ நூஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளைப் போன்றவர்களைப் பார்ப்பதும் கேட்பதும் அரிது" என்று ஸ்ரீ மஹாமஹோபாத்யாய வெள்ளூர் சுப்பிரமண்ய கனபாடிகளின் புத்திரரும், பெங்களூர் ஸ்ரீசங்கர மடம் வித்வான் பிரம்மஸ்ரீ வி. எஸ். ராமச்சந்திர சாஸ்திரிகள் எழுதுகிறார்.

### பிறப்புவளர்ப்பு

பம்பாய் ஆதிக்யத்தைச் சேர்ந்த தாராவாடா ஜில்லாவில் ஹாநகல் தாலூகாவில் ஹாநகல் என்ற கிராமம் இருக்கிறது. இக்கிராமத்தில் அநேக காலமாகவே, வேதாத்யயனம் செய்து ச்ரௌத ஸூத்ரங்களை நன்றாக அப்யஸித்து, ச்ரௌத கர்மாக்களை அனுஷ்டிப்பதிலும் அனுஷ்டானம் செய்விப்பதிலும் மிக்க திறமை வாய்ந்த அநேக பிராம்மண குடும்பங்கள் இருக்கின்றன. இங்கு இன்னும் அக்நிஹோத்ரம் நடந்து வருவதுடன், ஸோமயாகம் முதலிய வைதிக கர்மாக்களைச் செய்து வைப்பதில் மிக்க சமர்த்தர்களான ச்ரௌதிகள் நிறைந்து இருக்கின்றனர். இக்கிராமத்தில் 1873-ம் வருஷத்தில் கிருஷ்ணபட்டர் என்ற வைதீகரின் மூன்று குமாரர்களுள் ஒருவராக நம் ஸ்ரீவிருபாக்ஷ சாஸ்திரிகள் பிறந்தனர். இதே கிராமத்தில் கிருஷ்ணபட்டருக்கு நெருங்கிய பந்துவான சிவபட்டர் என்பார் தீர்த்தாபாய் என்ற தமது ஸஹதர்மிணியுடன் இல்லறம் நடத்தி வந்தார்; இந்தத் தம்பதிகளுக்குப் புத்திரப்பேறு கிடைக்கவில்லை. சந்ததியின்மைக்கு வருந்திய இவர்கள் கிருஷ்ணபட்டரை அண்டினர். இவர்களது வேண்டுதலின் பிரகாரம் கிருஷ்ணபட்டரும் தமது புத்திரர்களுள் ஒருவரான விரூபாக்ஷரை இவர்களுக்கு ஸ்வீகாரம் செய்து கொடுத்தார். ஸ்வீகாரம் செய்து கொடுக்கப்படும் போது விரூபாக்ஷர் அதி பால்ய தசையில் இருந்தார்.

இவருக்குக் காலக்கிரமத்தில் தக்க ஸம்ஸ்காரங்கள் செய்து வைக்கப்பட்டன. ஏழாவது வயதில் உபநயனம் நடந்தது. பிறகு குலக்ரமமாக வந்த வேதாத்யயனத்தை இவர் ஹாநகல் கிராமத்திலேயே செய்து வந்தார். பிறகு 9-வது வயதிலேயே இவர் விவாகம் செய்விக்கப்பட்டார். ஆயினும் விவாகமானது இவரது வித்யாப்யாஸத்திற்குத் தடையாக ஏற்படவில்லை. 12-வது வயது வரை இவர் தமது கிராமத்திலேயே படித்துவந்தார். பின்பு பல்லாரி ஜில்லாவைச்சேர்ந்த ஹரபனஹள்ளிக்குப் போய் அங்கு ஒரு பெரியாரிடம்





குழந்தைகளின் நோயெனும்
இருளை நீக்க வந்துள்ள

பாஸ்கரனின் ப்ரப்ரபாதம்

நோயினல் வருத்தமுறும் குழந்தைகளை நோயினின்றும் மீட்டு ஆரோக்யத்தைப் பெருக்கச் செய்வது "பால பாஸ்கர"

குழந்தைகளைப் பீடித்து வருத்தமுறச் செய்யும் வியாதிகளில் ஈரல் குலைக்கட்டி என்னும் வியாதிகளே தக்க சிகிச்சையின்மையால் உயிருக்கே கேடுவிளைவிக்கின்றன. இவ்வியாதிகளை எந்நிலைமையிலும் தடுத்து குணத்தைக் கொடுக்க வல்லதென நிரூபிக்கப்பட்டுள்ள ஔஷதம் பால பாஸ்கர" இதர ஔஷதங்களால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சரியத்துடன் பலனைக் கருவதெனப் போற்றப்படுவது.

**பால பாஸ்கர**

குழந்தைகளின்
ஈரல் குலைக்கட்டிகளுக்கு
**அற்புத நிவாரணி.**

**ஆயுர்வேதாஸ்ரமம்,**
151 கோவிந்தப்ப நாய்க்கன் வீதி,
தபால் பெட்டி 287, மதராஸ்.

ஏஜண்டு:
மெஸர்ஸ்: அமர்சந்த், சோபா சந்த்.
கெமிஸ்ட்ஸ், மதராஸ்.

**இதயம்**
378 டிசைன் 64 பக்க நகை கேட்லாக்.
பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P. O. (சென்னை)

**SAVE YOUR EYE**



From ALL TROUBLES, even Cataract
Try 'SELLER'S LOTUS HONEY
—The nature's own remedy. Absolutely safe. Sure, world-wide reputed and Tested. At all Chemists. Literature Free
L. H. Seller, Samta, Bengal
Beware of imitation—Insist on SELLER'S

காவ்ய வியாகரண கிரந்தங்களைப் படித்தார். வியாகரணத்தில் கொஞ்சம் வாசித்த பிறகு தர்க்க சாஸ்திரக் கிரந்தங்களைத் தக்க பண்டிதர்களிடம் போய்ப் படித்தார். இவ்வாறு வியாஸங்கம் செய்யும்போது இவர் அநேகம் கஷ்டங்களுக்குஆளாகவேண்டி நேர்ந்தது. எவ்வளவோ தினங்கள் ஆகாரமில்லாமலும் நித்திரை இல்லாமலும் இவர் வியாஸங்கம் செய்ததுண்டு. என்ன சிரமம் ஏற்பட்டபோதிலும் இவருக்கு வித்யா விஷயத்தில் இருந்த சிரத்தை அளவிடற்கரியது. "வித்யாதுராணும் ந சுகம் ந நித்ரா" என்பது பெரியோர் வாக்கு.

ஸர் சேஷாத்ரி அய்யரின் பரிசயம்

இவ்வாறு தமது 21-வது வயது பரியந்தம் இவர்படித்து வந்தார். குடும்ப பாரமும் அதிகமாகிவிடவே இவர் இதற்காக ஒரு ஆச்ரயத்தை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவர் உடனே பெங்களூர் வந்து, அங்கு மைசூர் மஹாராஜாவின் ஆதரவில் நடத்தப்பட்டு வந்த "ஸ்ரீ சாமராஜேந்திர சம்ஸ்கிருத பாடசாலை"யில் தர்க்க சாஸ்திரத்தின் பெரிய கிரந்தங்களைப் படிக்கவேண்டி வந்து சேர்ந்தார். இச்சமயத்தில் தெய்வ கிருபையால் இவருக்கு பெங்களூர் ஸிடி மாஜிஸ்திரேட்டாக விருந்த வைத்திநாதய்யருடைய பரிசயம் ஏற்பட்டது. வைத்திநாதய்யரும் இவருடைய குணம், வித்யாப்யாஸத்தில் உள்ள கருத்து குடும்ப ச்ரமம் முதலியவைகளைக் கவனித்து இவருக்கு ஸஹாயம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டார். உடனே அவர் தமது நெருங்கிய பந்துவும் மைசூர் சமஸ்தான திவானாகவும் விளங்கிய ஸர் கே. சேஷாத்திரி அய்யரவர்களின் வீட்டில் புராண ப்ரவசனம் செய்ய இவருக்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்து, தமது பங்களாவில் இவரது வாசத்திற்கும் சௌகர்யங்கள் அமைத்துக்கொடுத்தார். ஸர் சேஷாத்திரி அய்யர் வீட்டில் புராண ப்ரவசனம் மூலம் கிடைத்த திரவிய ஸஹாயத்தினால் இவர் குடும்பத்தை சம்ரக்ஷித்தும், ஸ்ரீ மகாராஜா பாடசாலையில் தர்க்க சாஸ்திரமும் படித்து வந்தார். இதே சமயம் பாக்கியிருந்த வேத பாகத்தையும் அத்யயனம் செய்ய இவருக்கு சௌகர்யம் வாய்த்தது. அப்போது மைசூர் சிப் ஜட்ஜியாக விருந்த திவான் பஹதூர் ஏ. ராமச்சந்திரய்யரவர்கள் ஸ்ரீ (பிறகு மஹா மஹோபாத்யாய) வெள்ளூர் சுப்ரமண்ய சாஸ்திரிகளிடம் பஞ்சதசி முதலிய வேதாந்தக் கிரந்தங்களை வாசித்து வந்தார். தவிரவும் ஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள் ஸலக்ஷண கனாந்தமாக தைத்திரீய சாகையை அத்யயனம் செய்தவர். இவருக்கு ஸ்ரீ வெள்ளூர் சாஸ்திரிகளின் பரிசயம் ஏற்பட்டு அது பலத்தது; இவரிடம் அவர் தர்க்கம் படித்தார். அவரிடம் இவர் வேதாத்யயனம் செய்து வந்தார். இவருக்குத்தர்க்க கிரந்தங்களை வாசித்து, அவற்றைப் பிறருக்குப் போதித்து வந்ததனால் விசேஷ பாண்டித்யம் கிடைத்தது. பின்பு தாம் வேதாந்த சாஸ்திரத்தில் தேர்ச்சியடைய விரும்புவதாக இவர் திவான் அய்யரவர்களிடம் தெரிவிக்கவே, அவரும் இவரை உடனே சிருங்கேரிக்கு ஜகத்குருக்களிடம் சிஷ்யனாக விருக்கும்படி அனுப்பி வைத்தார்.

இந்நாளில் ஸ்ரீ சிருங்கேரி சாரதாபீடத்தில் ஸ்ரீ சச்சிதாநந்த சிவாபி நவந்ருஸிம்ஹபாரதீஸ்வாமிகள் பட்டாபிஷிக்தராக விருந்தார். இம்மகான் தர்க்க வேதாந்த பகுதிகளில் ஸம்பூர்ண பாண்டித்யத்தையடைந்து, விரக்த சிகாமணியாக விருந்ததுடன், அநேகம் சிஷ்யர்களுக்கும் பாடம் சொல்லிவந்தார்! இவர் ராஜயோகியும் மந்திரஸித்தருமாவார். இதே சந்தர்ப்பத்தில் இம்மகானிடம் திவான் ஸர் சேஷாத்ரி அய்யரின் ஸஹாயபலத்தினால் மீமாம்ஸா சாஸ்திரத்தில் மிக்க பயிற்சிபெற்ற பிரும்மஸ்ரீ (இப்போது மஹாமஹோபாத்யாய) நேமம் வைத்திநாத சாஸ்திரிகளும், திவான்பஹதூர் ராமச்சந்திரய்யரின் சகாயபலத்தினால் பிரும்மஸ்ரீ (பின்பு மஹாமஹோபாத்யாய) வெள்ளூர் சுப்பிரமண்ய சாஸ்திரிகளும், வேதாந்தபாகவியாஸங்கத்திற்காக வந்து சேர்ந்தனர். இம்மூவரும் ஒன்று சேர்ந்ததனால் விசேஷ நன்மை சம்பவித்தது. இவரும் சுப்ரமண்ய சாஸ்திரிகளும், பிரும்மஸ்ரீ நேமம் வைத்திநாத சாஸ்திரிகளிடம் பாட்டதீபிகை முதலான மீமாம்ஸா கிரந்தங்களைப்படித்தனர். இங்கு இவர் மூன்று வருஷகாலம் படித்து, கிரந்த காலக்ஷேபம் செய்து வந்தார். பித்ருவியோகம் காரணமாக இவர் குடும்பத்துடன் தமதூர் திரும்பநேர்ந்தது.

ஸ்ரீ சாரதா பீட ஸ்வாமிகளுக்குப் பாடம் சொல்லி வைக்கும் பாக்கியம்

அப்புறம் குடும்பபோஷணத்திற்காக ஒரு வ்ருத்தியை அபேக்ஷித்து வரும்போது, தாராவாடாவில் ஒரு பிரபல வக்கீலால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீசங்கராச்சார்ய ஸம்ஸ்கிருத கலாசாலையில் பிரதான உபாத்யாயராக நியமிக்கப்பட்டு, அநேகம் மாணவர்களுக்கு தர்க்க வேதாந்த கிரந்தங்களை ப்ரவசனம் செய்து வந்தார். தாரவாடா பாடசாலையில் இவரிடம் அங்கு முதல் கிளாஸ் மாஜிஸ்திரேட்டாகவும் தாசில்தாராகவுமிருந்த ஸ்ரீ நாராயண

(33-ம் பக்கம் பார்க்க)




# குழந்தைகளின்

## மிருதுவான சருமத்திற்கு

சந்தண வாசனையுடன் நாம கலக்கும் அவசியமான ஆயிலக்ஸ் டாவற்றிலும் ஆரோக்கிய மூட்டும் சத்துக்களிருக்கின்றன மைசூர் சந்தண ஸோப்பு முக்கியமாக குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்கு ஏற்றது. இந்திய தாய்மார்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் இதை அனுபவ பூர்வமாக அறிந்திருக்கின்றனர்.

**மைசூர் சந்தண ஸோப்பு**






**கவர்ன்மெல்ட் ஸோப்பு தொழிற்சாலை, பெங்களூர்**








**மதுரம்மிக்க மாங்காய்கள் மலிந்து தோன்றும் காலமிது**

உணவுக்கு உருசியையும் உடலுக்கு உறுதியையும் கொடுக்கவல்ல மாங்காய்களைக் கொண்டு

**ஊறுகாய்கள்**

போடுவதற்கு உகந்த காலம் இதுவன்றோ!

ஊறுகாய்கள் நறுமணங் கமழ்ந்து நாட்பட இருக்க வேண்டுமானால் **எல். ஜி.** பெருங்காயத்தை நிறைய உபயோகிக்க மறந்துவிடாதீர்கள். எந்தக்காயம் தமிழ் நாட்டில் பழமையானதோ எது தமிழர்களால் பட்டணங்காயமென்று சிலாகிக்கப்பட்டு வருவதோ, கணக்கில்லாத தங்க வெள்ளிப்பதக்கங்களைப் பெற்று ஒப்பும் உயர்வும் இன்றி விளங்குகின்றதோ அந்த **எல். ஜி.** பெருங்காயத்தை ஊறுகாய்களுக்கு உபயோகப்படுத்தி, ஜாடிகளில் நிரப்பிவைத்து, ஆண்டு முழுவதும் உணவுடன் சுவைத்துச் சுவைத்து இன்புறுங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி,**
பிரபல பெருங்காய வியாபாரிகள்.
தலைமை ஆபீஸ்:
பம்பாய் — சென்னை.
பிராஞ்சு:
கும்பகோணம்.




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது.

I

பல்லவி

நாததனும் அநிசம் சங்கரம்—நமாமிமே மனஸா சிரஸா (நாத)

அநுபல்லவி

மோதகர நிகமோத்தமஸாம வேதஸாரம் வாரம் வாரம் (நாத)

சரணம்

ஸத்யோஜாதாதி பஞ்சவக்த்ரஜ—ஸரிகமபதநீ வரஸப்தஸ்வர
வித்யா லோலம் விதளிதகாலம்—விமலஹ்ருதய த்யாகராஜபாலம் (நாத)

நாத தனும் —நாதத்தையே தம் சரீரமாயுடையவரும்;
மோதகர ... நிகமோத்தம ஸாம வேதஸாரம் —ஆநந்தத்தை யளிக்கும் வேதங்களில் சிரேஷ்டமான ஸாம வேதத்தின் உட்பொருளாயிருப்பவரும்;
ஸத்யோஜாத ஆதி பஞ்ச வக்த்ரஜ —ஸத்யோஜாதம் முதலான ஐந்து முகங்களிலிருந்து தோன்றிய
ஸரிகமபதநீ வரஸப்தஸ்வர வித்யா லோலம் —ஸரிகமபதநி என்ற சிறந்த ஸ்வரங்கள் ஏழின் சேர்க்கையாலும் ஏற்பட்ட ஸங்கித வித்யையில் மகிழ்ச்சியோடு ஈடுபட்டவரும்;
விதளித காலம் —யமனைக் கொன்றவரும்;
விமல ஹ்ருதய த்யாகராஜ பாலம் —நிர்மலமான மனத்தையுடைய தியாகராஜனை ரக்ஷிப்பவரும்; (ஆகிய)
சங்கரம் —சிவபெருமானை
மே மநஸா சிரஸா —என் மனத்தாலும் தலையினாலும்
அனிசம் —இடைவிடாமல்
வாரம் வாரம் —அடிக்கடி
நமாமி —வணங்குகிறேன்.

III

ஸ்ரீதியாகராஜஸ்வாமிகள் செய்தருளிய சுத்த ஸம்ஸ்க்ருதக் கீர்த்தனைகளில் இஃதொன்று. திருக்கடையூர் அம்ருத கடேசுவரரைப்பற்றிப் பாடியதென்று கூறப்படுகின்றதாயினும், பொதுவாகச் சிவபெருமானைப்பற்றிப் பாடியதாகவே கொள்ளத் தக்கதாயிருக்கிறது. இதில் சிவபெருமானை நாத ப்ரம்ஹமாகவே பாவித்து உபாஸிக்கிறார்.

நாததனும்:—ஆத்மன: ஆகாசஸ்ஸம்பூத:; ஆகாச சரீரம் ப்ரம்ஹ முதலிய ச்ருதி வாக்யங்களால் ஆத்மாவிலிருந்து ‘ஆகாசம் உண்டாயிற்று’ ‘ப்ரம்ஹத்திற்கு ஆகாசமே உடல்’ என்று தெரிய வருகிறது. ஆகாசத்தின் குணம், சப்தம் அல்லது நாதம். இதனாலேயே பகவான் நாதப்ரம்ஹம் என்றும் சப்த ப்ரஹம் என்றும் வழங்கப்படுகிறார். இந்த நாதத்தினின்றும் பரப்ரம்ஹத்தின் ஸ்வரூபத்தைக் குறிக்கும் பிரணவமென்ற ஓங்காரம் ஜனிக்கின்றது. ஓங்காரத்தின் பரிணாமங்களாக ஸப்த ஸ்வரங்களும் பிறக்கின்றன.

சங்கரம்:—சங்கரன் இன்பத்தை உண்டுபண்ணுபவர். நாதரூபியாயிருப்பவர், இன்பத்தை யுண்டாக்குபவரென்பதில் ஐயமென்ன?

நமாமி......சிரஸா:—நமஸ்கார விதி வருமாறு: கூப்பிய இருகைகள், சேர்த்த இருபாதங்கள், இருபுஜங்கள், நெற்றி, மார்பு இவை பூமியிற் படும்படி தண்டம் ஸமர்ப்பித்தல. இதையே ஸ்வாமிகள் “கர சரணயுமு நொஸலு புஜமுலு தாணி லோகிம் ரொக்ககலேதா” என்று ஒரு கீர்த்தனத்தில் விளக்கியிருக்கிறார்.

நிகமோத்தம ஸாம வேதஸாரம்:—கீதாசார்யன், ‘வேதானும் ஸாமவேதோஸ்மி’ என்று அருளிச் செய்திருப்பதனால் வேதங்களிற் சிறந்தது ஸாம வேதமென்பது தெளிவாகும். ஸாம கானத்தினால் பரமசிவனார் பரம திருப்தியடைகிறார் என்பது, கைலையைப் பெயர்க்க முயன்ற ராவணனை நசுக்கியபோது அவன் செய்த ஸாமகானத்தினால் திருப்தியடைந்து க்ஷமித்தார் என்பது முதலான விருத்தாந்தங்களினால் அறியலாகும்.

ஸாமவேதத்திற்கு மற்றொரு ஏற்றமும் உண்டு. ஸங்கித சாஸ்திரம் ஸாமவேதத்தினின்றும் பிரம்மாவால் திரட்டப்பட்டதாகும். ‘ஸாமவேதாதிதம்கீதம் ஸஞ்சக்ராஹ பிதாமஹ:’ என்ற சங்கீத ரத்னாகர ச்லோகத்தைக் கவனிக்கவும்.

(12-ம் பக்கம் பார்க்க)

# பிராட்காஸ்ட்

ரிகார்டின்

# மே மாத வெளியீடு!







ராமதாஸ் ராவ்

செம்பை
அபூர்வமான
பக்கவாத்தியங்களுடன்
**R. T. 2423**
சேதுலாராஸ்ருங்கார —பைரவி

சௌடய்யா

## செம்பையின் முந்திய ரிகார்டுகள்

R. T. 2410
ராமா நீயட [illegible] —[illegible]
R. T. 4003
சரவிருஹா —நாட்டை
ஸ்யாம சுந்தர —தன்யாசி
G. T. 4057
கனகசபை —சுருட்டி
G. T. 4057
இதுதானோ தில்லேஸ்தலம் —பீஹாக்

R. T. 4002
அம்பா நாது பாகம் 1 & 2 —தோடி
G. T. 4058
பராசக்தி மஹாமாயி —சாவேரி
ஹர சிவ சம்போ —[illegible]
R. T. 4081
சிவசிவ என ராதா —காமவர்த்தனி
நின்னு செப்பக —மாந்தரி

கும்பகோணம்—ராஜமாணிக்கம் பிள்ளை

மன்னார்குடி
ராஜகோபால பிள்ளை
G. R 2424
பக்கல நிலுபடி
—கரஹரப்ரியா
G. R. 2415
எடுலப்ரோதுவோ
—சக்ரவாகம்



G. R. 2426
பிடில் { ஸ்வாமிகி ஸரி —பியாகடா
G. R. 2408
ஸங்கீத ஞானமு —தன்யாசி }

குன்னகுடி
வெங்கடராமய்யர்
B. 2427
தில்லே தில்லே —பல்லவி
ஸர்வம்பிரஹ்ம மயம்
—ஜஞ்ஜுடி
B. 2412
முனுராவண —தோடி

# தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்.

313, எஸ்பிளனேட் - மதராஸ்.

10, கன்ஸிஸ்டரி
கட்டிடம்,
பிரண்ட் தெரு, கொலம்பு.

F. M. S & S S க்கு ஸோல் டிஸ்ட்டிரிப்யூட்டர்கள்:—
தி இன்டியன் பிலிம் ஏஜன்ஸி,
பினங்—சிங்கப்பூர்.

16, ராம்பார்ட்
ரோ போர்ட்,
பம்பாய்.

பஞ்சவக்த்ரஜ ஸப்தஸ்வர:—பராசக்தியும் பரமசிவனுமாக ஸப்தஸ்வரங்கள் உற்பத்தியாவதற்குக் காரணமாயிருந்தார்கள். பரமசிவனுக்கு ஐந்துமுகங்கள் (பஞ்ச வக்த்ரங்கள்); அவை முறையே ஸத்யோஜாதம், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம் என்பன. பராசக்தி தன் ஸ்வரூபமாக ஷட்ஜத்தையும் பஞ்சமத்தையும் பிறப்பித்தாள்; சிவபெருமானுடைய ஐந்து முகங்களினின்றும் ரிஷபம், காந்தாரம், மத்யமம், தைவதம், நிஷாதம் என்ற ஐந்து ஸ்வரங்கள் பிறந்தன. இவற்றோடு ஷட்ஜ பஞ்சமங்களைப் பராசக்தி சேர்க்க, ஸப்த ஸ்வரங்கள் உண்டாயின. எப்படி சக்தியில்லாமல் சிவமில்லையோ, அப்படியே, ஷட்ஜ பஞ்சமங்களின்றி ஸ்வரங்களில்லை. இந்த ஸப்த ஸ்வரங்களுக்கு ஸ, ரி, க, ம, ப, த, நி, என்ற ஸங்கேத அக்ஷரங்கள் ஏற்பட்டன.

(இங்கு ரிஷபமென்பதற்கு 'ரி' எனவும், மத்யமமென்பதற்கு 'ம' எனவும், பஞ்சமமென்பதற்கு 'ப' எனவும் நிஷாதமென்பதற்கு 'நி' எனவும் ஸங்கேத அக்ஷரங்கள் ஏற்பட்டதில், முதல் எழுத்துக்களே அமைந்தது பொருத்தந்தான். ஆனால், ஷட்ஜமென்பதற்கு 'ஷ' என வராமல் 'ஸ' என்று வந்ததும், காந்தாரம் என்பதற்குக் 'கா' எனத்தீர்க்க அக்ஷரம் வராமல் 'க' என ஹ்ரஸ்வ அக்ஷரம்வந்ததும், தைவதம் என்பதற்கு 'தை' என வராமல் 'த' என்று வந்ததும் ஏன் என்ற ஆக்ஷேபணையைச் சிலர் எழுப்புவதுண்டு. மற்ற ஸ்வர ஸங்கேதாக்ஷரங்களை உச்சரிப்பதற்கான முயற்சியைவிட 'ஷ' என்ற அக்ஷரத்தை உச்சரிப்பதற்கு அதிக முயற்சி வேண்டியிருப்பதனாலும், இதர ஸ்வர ஸங்கேதாக்ஷரங்களோடு சேர்ந்தார்ப்போல இந்த ஆதார ஸ்வர ஸங்கேதாக்ஷரத்தையும் உச்சரிப்பதில் இது அதிக ஸங்கடத்தை யுண்டு பண்ணுவதனாலும், செவிக்கும் விரஸமுண்டுபண்ணிவதனாலும் இது 'ஷ' என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால், ஸ்வர ஸப்தத்திற்கு ஆதாரமானதாயிருப்பதனாலும், இதர ஸ்வரங்களோடு சேர்த்தாற் போல் உச்சரிப்பதில் சௌகரியமாயிருப்பதனாலும் செவிக்கினிமை பயப்பதனாலும், ஆன்றோர்கள் ஷட்ஜத்திற்கு ஏற்ற ஸங்கேத அக்ஷரம் 'ஸ' என்பதேயாகுமென நிர்ணயித்தனர். இனி, காந்தாரம் என்பதற்கு 'கா' என்பதும் தைவதத்திற்கு 'தை' என்பதும் ஸங்கேதாக்ஷரங்களாயிருக்கவேண்டுமென்பது பின்வரும் காரணங்களால் மறுக்கப்படும். அப்பாஸத்திற்கு ஏற்பட்ட முறைகளில், ஆதாரஷட்ஜ முதல் தாரஷட்ஜம் வரையில் எட்டு ஸ்வரங்கள் பயன்படுத்தப்படுவதால், சதுரச்ர ஏகதாளமோ, சதுரச்ர த்ரிபுட தாளமோ, த்ரிச்ரமட்யதாளமோ, கண்ட ஜம்ப தாளமோ ஏற்றதாகக் கருதப்பட்டது. (இவற்றில் சதுரச்ர த்ரிபுட என்னும் ஆதிதாளமே முக்யமாகக் கருதப்படுகிறது.) அவ்வாறுயின், ஸரிகாமபதைநிஸ் என்று பிரயோகம் செய்யும்போது, தாள அக்ஷரங்கள் எட்டுக்கு ஸ்வராக்ஷரங்கள் பத்து, பொருத்தப் படுதல் சாத்தியமாகாது. அதனால், 'கா' 'தை' என்பவற்றிற்குப் பதிலாக அந்த அக்ஷரங்களின் இனங்களில் முதல் ஹ்ரஸ்வ அக்ஷரங்களான, க, த, என்பன பேரியோர்களால் பயன்படுத்தப்பட்டன. இந்த ரஹஸ்யத்தை யறியாதவர்கள் அனுவசியமான ஆக்ஷேபணையை எழுப்புவதில் நியாயமேயில்லை.

பஞ்ச முகங்களிலிருந்தும், முறையே ஸ்ரீராகம், வஸந்தம், பைரவம், பஞ்சமம், மேகம். என்ற ராகங்கள் உண்டானதாகவும், பார்வதியின் முகத்திலிருந்து நட்டநாராயணமென்ற ராகம் உண்டானதாகவும், இவை, சிசிர (மாசி-பங்குனி), வஸந்த (சித்திரை-வைகாசி) க்ரீஷ்ம (ஆனி-ஆடி), சரத் (ஆவணி-புரட்டாசி) வர்ஷ (ஐப்பசி-கார்த்திகை), ஹேமந்த (மார்கழி-தை) ருதுக்களில் பாடப்பட வேண்டுமென்றும் ஸோமேச்வரர் கூறுகிறார். மேற்கூறிய ஆறு ராகங்களும் ஒரு மதத்தின்படி புருஷ ராகங்களென வழங்கப்படுபவை என்பது இங்கு அறியத்தக்கது.

[ஸப்த ஸ்வரங்களும் உண்டான விதத்தைப்பற்றி வேறாக வழங்கும் ஒரு மதத்தைப்பற்றி மற்றொரு சமயம் வெளியிடுவோம்.]

ஸ்வர வித்யாலோலம்:—பரமசிவனால் நாதஸ்வரூபியென்று 'ராக ஸுதாரஸ' முதலாகிய கீர்த்தனைகளிலும் நாதோபாஸனத்தினால் சிறந்து விளங்கினரென்று 'நாதோபாஸன' முதலான கீர்த்தனைகளிலும் ஸ்வாமிகள் கூறுகிறார்.

விதளிதகாலம்:—காலனைபுதைத்தது மார்க்கண்டேயர் என்ற மகா பக்த சிரேஷ்டர் பொருட்டாகும். மார்க்கண்டேயர் வாலாறு பிரஸித்தமானதால் இங்கு விவரிக்கப்படவில்லை.

IV

## சித்த ரஞ்ஜனி

ஆதிதாளம்

இந்த ராகம் 72 மேளகர்த்தா [illegible] ஸரிகமபதநி-நிதபமகரிஸ என்ற [illegible] முறையின்படி 22வதான காஹரப்ரியையில் ஜன்யம். நிஷாதாந்திய ராகம். கைசிகீ நிஷாதங்கள் [illegible] நிக மோச் [illegible] டையுடையது. சதுச்ருதி ரிஷப, ஸாதாரண காந்தார, சுத்த மத்யம, சதுச்ருதி தைவத கா[illegible] [illegible]ரும், கானபாஸ்கரம் என்ற தெலுங்கு ஸங்கித க்ரந்தத்தில், ஸங்கித வித்வான் கே. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்[illegible] இதை 19-வது மேளமான ஜங்காரத்வனியில் ஜன்யமென்றும் ஸரிகரிகமபத-நிதபமரிகரிஸ என்ற நடையுடையதென்றும் கூறியிருக்கிறார். ஆனால் ஸம்ப்ரதாயமாக இந்தக் கீர்த்தனை முற்கூறப்பட்ட நடையிலேயே அமைத்துப் பாடப்பட்டு வருகிறது. அன்றியும், ஸ்வாமிகள் ஸப்த ஸ்வரங்களையும் ஆரோஹண க்ரமத்தில் வைத்துப் பாடியிருப்பதனால் முற்கூறப்பட்ட லக்ஷணமே இந்த ராகத்திற்குப் பொருத்தமாகுமென்பது தெளிவாகும்.

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனத்தில் பலஸ்வராக்ஷரங்கள் மிளிர்வதைக் கண்டிறுக.]

### பல்லவி

; * ரீ ; கா
; * நா ; த
நிஸ * ரீ ; கா
... * நா ; த
நிஸ * ரீ ; கா
... * நா ; த
நிஸ * ரீ ; ரீ
ந * மா ; மி
நிஸ *
... * (நாததனுமனிசம்)

| | | | | |
|---|---|---|---|---|
| காமாபா-பம | பா ; ; | மா | ; கா | கரிரிஸ |
| த னு-மனி | சம் ; ; | சங | ; க | ரம்... |
| காமாபா-பம | பா ; | தபமா | ; கா | கரிரிஸ |
| த னு-மனி | சம் ; | சங | ; க | ரம்... |
| காகமபா-பத | நித- | பதநித பாமா | ; கா | கரிரிஸ |
| த னு-மனி | சம் | ......சங | ; க | ரம்... |
| ஸரிகரிகா-மக | மா ; ; | கரி | கா ; | கரிரிஸ |
| மே......-மன | ஸா ; ; | சிர | ஸா ; | ...... |

### அனுபல்லவி

; * பா ; தா
; * மோ ; த
மா * பா ; தா
ம * வே ; த
நிஸ *
... * (நாததனுமனிசம்)

| | | | | |
|---|---|---|---|---|
| பா மா ;-மக | கரிஸரீ | ஸஸா | ; | ஸா ;-ரிக |
| க ர ;-நிக | மோ... | த்-தம | ; | ஸா ; |
| நிதபதநிதநீ | ; | தபமா ; | ; கா | கரிரிஸ |
| ஸா......ரம் | ; | வா ரம் ; | ; வா | ரம்... |

### சரணம்

; * பா பா ;
; * ஸத்யோ ;
; * ஸாரீ காமா
; * ஸாரீ காமா
நிஸ * பா தா ;
... * வித்யா ;
; * ப ம பா
; * வி ம ல
நிஸ *
... * (நாததனுமனிசம்)

| | | | | |
|---|---|---|---|---|
| மா ;-பா ; | தா | பதநிதபம | மா ; | காரீ |
| ஜா ; தா | தி | பம்...ச | வக்த் ; | ர ஜ |
| பாதா நீ | ; | தபமா ; | கா ; | கரிரிஸ |
| பாதா நீ | ; | வரஸப் ; | த ; | ஸ்வ ர |
| பாமா காகா | ; | ரிகா ரிஸா | ரிக | மகமா ; |
| லோ லம் | ; | விதளித | கா... | லம் ; |
| பாதா தா-பதநீ | நீ | நிததபமா | பா ; | மகரிஸ |
| ஸ்ருத ய-த்யா | க | ரா...ஜ | பா ; | லம்... |

ஹாஸ்யப்பகுதி



உடனே மாமா கையை ஓங்கினார், பளாரென்று ஒரு ஓசை கேட்டது.

# காணமற்போன சால்வை

(என். எஸ். ஸ்ரீநிவாஸன்)

“அங்கே போனேனே, அவாளோடே பேசிண்டிருந்தேனே, பேச்சு ஸ்வாரஸ்யத்தில் நீ சொன்னதை மறந்தே போய்ட்டேன் இன்னு சொல்லிப் பல்லை இளிச்சிண்டு வந்து நிற்காதீர்கள். இது ரொம்பவும் அவஸரமான வேலை. ஆகையால் துணியிலேயாவது ஒரு முடி போட்டு வைக்கிறேன்” என்று என்மேல் வேஷ்டியில் ஒரு முடி போட்டு எச்சரித்து அனுப்புவாள் என் மனைவி.

‘இது என்ன முடிச்சு வேஷ்டியில்? ஓகோ! வீட்டில் அவள் போட்டு அனுப்பினளே! ஆமாம்! எதற்காகப் போட்டாள்? ஞாபகத்துக்கே வரவில்லையே! மறுபடியும் போய் கேட்டுக்கொண்டுதான் வர வேண்டும்’ என்று போன இடத்தில் முடிச்சை வைத்துக் கொண்டு திண்டாடுவேன் நான். தெரிந்துவிட்டதா? அவ்வளவு ஞாபக சக்தி எனக்கு.

திவனூரில் ஸ்வாமிக்குக் கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடக்கப்போவதாய் வதந்தி எட்டியது. வெளியூர்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் கிளம்பினார்கள். நானும் என் நண்பனும் அதற்குப் போவதாய்த் தீர்மானித்தோம். மூட்டையைக் கட்டினேன்.

“என்ன? குளிர் காலமாச்சே! சால்வையையும் மூட்டையில் வைத்துக்கட்டுங்களேன்” என்றாள் என் மனைவி.

‘சால்வை எதற்கு? அதை எங்காவது வைத்துவிட்டு மறந்து வந்துவிடுவேன். இதோ தான் துப்பட்டி, ஜமக்காளம் எல்லாம் வைத்துக்கட்டியிருக்கேனே, போராதா?’ என்றேன்.

‘இருந்தாலும் குளிர்காலமாச்சேன்னு சொல்லறேன். அதெப்படி மறந்துவிடும்? மறந்துவிடறது இன்னு அதென்ன கெட்ட வழக்கம்? ஸொத்திலே அக்கறை வேண்டாமா? எடுத்துண்டு போங்கள்’ என்றாள்.

‘எதுக்கெடுத்தாலும் பிடிவாதமா? ஸரி, எடுத்துண்டு போய்த் தொலையறேன்’ என்றேன்.

‘ஆனால் அதையும் வெச்சுக் கட்டுங்களேன்? என்றாள்.

‘மூட்டையெல்லாம் நன்றாய்க்கட்டியாய்விட்டது. இனி அவிழ்த்துக்கட்டுகிறது என்றால் கஷ்டம். மேலேயே போர்த்துக்கொண்டு போய்விடுகிறேன்!’ என்றேன்.

‘ஸரி; ஜாக்ரதை!’ என்று சொல்லிக்கொண்டே. அடுப்பில் கடுகு வெடிக்கும் சப்தத்தைக் கேட்டு சமையலறைக்குப் போய்விட்டாள்.

* * * *

கும்பாபிஷேகத்திற்கு ஏராளமான ஜனங்கள்வந்திருந்தார்கள். ஊர்கொள்ளவில்லை கும்பல். நானும் என் நண்பனும் அங்குள்ள என் மாமா வீட்டில் தங்கினோம்.

எல்லோரும் தெருத் திண்ணையில் வெகுநேரம்வரையில் பேசிக்கொண்டிருந்தோம். கோயிலில் வெடி விழுந்தது. எல்லோரும் ஸ்வாமி தரிசனத்திற்கு எழுந்து கோயிலுக்குக் கிளம்பினோம். பாதி வழி போனோமோ இல்லையோ? திடீரென்று எனக்குச் சால்வை ஞாபகம் வந்துவிட்டது.

“அடேடே! சால்வையைத் தெருத் திண்ணையிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டோமே” என்றேன் நான்.

“இல்லை ராமு! நாம் வரும்போது திண்ணையில் ஒன்றுமில்லை. உன் மாமாவிடம் கொடுத்து உள்ளே வைக்கச் சொல்லியிருப்பாய்” என்றான் என் நண்பன் கிட்டு.

“உனக்கு ஞாபகம் இருக்கிறதா?” என்றேன்.

“என்னமோப்பா! எனக்கு அப்படித்தான் ஞாபகம்” என்று இழுத்துக்கொண்டே பதில் சொன்னான் கிட்டு.

“இல்லையப்பா! எனக்கு ஸம்சயமாய்த்தான் இருக்கிறது. எல்லாத்திற்கும் போய்ப்பார்த்துவிட்டு வந்துவிடுவோம்” என்றேன் நான்.

ஸ்வாமியாவது தர்சனமாவது சால்வைத் தகராறில் இருக்கும் பொழுது! உடனே இருவரும் வீட்டை நோக்கி நடந்தோம்.

பாதி வழி வந்தோம். எதிரே ஒருவர் வந்தார். அவரைப் பார்த்ததுதான் தாமதம். என் அடிவயிறு பகிரென்றது. ஆமாம்; அதே சால்வைதான். அதோ குறுக்குக் கரையில் கொஞ்சம் கிழிசல். முதுகுக்கு நேராக உள்ளங்கை அகலம் ஒரு பொத்தல். மூலையில் நெருப்புப் பிடித்து எரிந்து போன அடையாளம். அதே மட்டி மஞ்சள் கலர்! அவர் போர்த்திருக்கும் சால்வை என்னுடையதுதான். இதிற் சிறிதும் ஸம்சயமில்லை. பட்டப்பகலில் என்ன துடுக்கு? திருடினதுமில்லாமல் என் எதிரிலேயே போட்டுக்கொண்டு வந்திருக்கிறானே ஒரு சமயம் இவனுடையதுதானோ! சீ! என்ன முட்டாள் தனம்! கலர் மாத்


**ஜோதிஷ மகுடவர்த்தனர்**

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் ‘உலக சிரேஷ்டர்” என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதகக் குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர், N. சுப்பிரமணியம், நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்) வாலாஜாபாத், S. I. R. சென்னை



**நரைமயிரை அகற்றுங்கள்**



உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் **விவலேன் ஹேர் ஆயிலை** உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே **விவலேன்** எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.

**சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி** (மெடிகல் டிபார்ட்மெண்டு S. 15) **பவானிப்பூர், — கல்கத்தா**

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
**ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260,** சைனாபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
**தாதா & கம்பெனி,** மருந்து வியாபாரிகள், **52,** நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
**பரேக் பிரதர்ஸ்,** ஜம்மா மஸ்ஜித்



**வெண்குஷ்டம் பெருவியாதி**

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். சுவர்த்தக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக

KAMALA WORKS (S M.)
Panchpota—Bengal, India.



**G. கன்னையா கம்பெனி**

இரும்புப்பெட்டி வியாபாரம்.



137. பிராட்வே மதராஸ்

திரம் ஒன்றுயிருக்கலாம்; தொலைந்து போகட்டும். மற்ற மீதி அடையாளங்கள்! தத்ரூபம் அதே அடையாளங்கள்! இவன் சால்வையிலும் எப்படியிருக்க முடியும்? ஆகையால் சால்வை என்னுடையதுதான் இந்த ஸம்சயத்தை எப்படித் தீர்த்துக்கொள்வது? உடனே அவரை நோக்கி,

"ஸ்வாமி எவ்விடம்?" என்று வினவினேன். அவர் கொஞ்சம் வைதிகர்போலத் தோன்றியதால் கொஞ்சம் பரிபாஷையிலேயே ஸம்பாஷணையைத் துவக்கினேன்.

"கோயூர்'

"ஸ்வாமி நாமம்?"

சாம்பசிவம் என்பார்கள்.

"இந்த சால்வை ஸ்வாமிக்கு எங்காவது பகுமானமாகக் கிடைத்ததோ?" என்று சால்வையைத் தொட்டுக்கிழும் மேலும் என்னுடையது தானு என்று நன்ருக ஆராய்ந்து பார்த்துக்கொண்டே கேட்டேன்.

"பகுமானமா? எனக்குயார் ஸ்வாமி கொடுக்கறு? அதெல்லாம் படிச்சவாளுக்கு. இது வாங்கினதுதான்."

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை.

"என்? எதற்குக் கேட்கிறீர்கள்?" என்ருர் அவர்.

"ஒன்றுமில்லை; நன்ருக இருக்கிறதே என்று கேட்டேன்" என்றேன் நான்.

"ஸரி! நாழியாகிறது. நான் ஸன்னதிக்குப் போய் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அவர் அவ்விடத்தை விட்டுக் கிளம்பினுர்.

உடனே நான் என் நண்பனை நோக்கி இரகசியமாய், "கிட்டு! எனக்கு என்னவோ ஸம்சயமாய்த்தானப்பா இருக்கிறது. எல்லாத்திற்கும் பேர்வழியை விடாதே.

அவன் மேலே 'ஒரு கண்' இருக்கட்டும். இதற்குள் நான் வீட்டிற்குப் போய்ப் பார்த்துவிட்டு வாதுவிடுகிறேன்" என்று சொல்லி கிட்டுவை அவருடன் அனுப்பிவிட்டு வீட்டிற்குச் சென்றேன் நான்.

நாளுவது, "இது எதற்காகப் போட்ட முடிச்சு? ஞாபகத்துக்கு வரவில்லையே!" என்று முடிச்சை வைத்துக்கொண்டு திண்டாடுவேன். என் மாமாவோவென்ருல் அந்த வெட்கக்கேடுகூடக் கிடையாது. "போக்கிரிப் பயல்கள். யாரோ குறும்புக்கு முடிபோட்டுவிட்டுப் போய்விட்டாப்போலே யிருக்கிறது" என்று ஞாபகத்துக்காகப் போட்ட முடிச்சைப் பார்த்துவிட்டுச் சொல்வார். அவ்வளவு ஞாபகசக்தி அவருக்கு.

வீட்டிற்குச் சென்றதும் அவரை நோக்கி, "என்ன மாமா! தங்களிடம் என் சால்வையைக் கொடுத்து உள்ளே வைக்கச் சொன்னேனு?" என்று கேட்டேன்.

"ஞாபகமில்லையே. கொடுத்திருந்தால் உள்ளேதான் இருக்கும். எதற்கும் உள்ளே பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று உள் முழுவதும்தேடினுர். சால்வையைக்காணவில்லை.

"நாங்கள் போன பிறகு இங்கே யாராவது வந்தார்களா?" என்று கேட்டேன்.

"ஒத்தரா? ரெண்டு பேரா? எத்தனையோ பேர்கள் வந்தார்கள். எத்தனையோ பேர்கள் போனுர்கள். எந்தத் தடியன் தூக்கிக்கொண்டு போனுனோ?" என்ருர் அவர்.

"அந்தத் தடியன் எங்கும் போய்விடவில்லை வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே அவரையும் அழைத்துக் கொண்டு கோவிலை நோக்கி ஓடினேன்.

அந்தப் பெரிய கும்பலில் கிட்டுவைத் தேடிக் கண்டு பிடித்தேன். அவனருகில் அந்தப் பேர்வழியும் சால்வையை இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

"இவர் நம் வீட்டிற்கு வந்திருந்தாரா?" என்று மாமாவுக்கு அந்தப் பேர்வழியைச் சுட்டிக் காண்பித்துக் கேட்டேன்.

"ஆகா! நீ வருவதற்குக் கொஞ்சநேரத்துக்கு முன்னுல்தான் அங்கு வந்து தாகத்துக்கு மோர் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுவந்தார். அதோ இடுப்பில் கட்டிக்கொண்டிருக்கும் சால்வை உன்னுடையதா?" என்று கேட்டார் மாமா.

இனி என்ன ஸம்சயம் இருக்கிறது? "ஆமாம்" என்று தலையசைத்தேன்.

மாமா அவ்வளவு ஆத்திரக்காரர் என்பது எனக்கு அதுவரையில் தெரியாது. பரபரவென்று சென்ருர். வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. விர்ரென்று அவர் இடுப்பினின்றும் அவர் கட்டிக்கொண்டிருந்த சால்வையை அவிழ்த்தார். "இந்தாடா சால்வை. இனியாவது ஏமாருதே ஜாக்ரதை!" என்று சொல்லிக்கொண்டே சால்வையை என்மேல் வீசி எறிந்தார்.

நாங்களே ப்ரமித்துப்போய் விட்டோமே. அவரைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? சிறிது நேரம் வரை அவர் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். பிறகு ஸமாளித்துக்கொண்டு, "என்ன ஸ்வாமி! பயித்யம் கியித்யம் பிடித்துவிட்டதா என்ன?" என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே மாமாவைப் பார்த்துக் கேட்டார்.

"திருடினதுமில்லாமல் பேச்சும் ஒரு கேடா? பேசினுல் பல் உடைந்துவிடும். பத்திரம்!" என்று கர்ஜித்தார் மாமா.

"என்ன? என்னென்னமோ உளறுகிறீரே. திருடாம்! பல் உடைந்துவிடுமாம்! பேஷ்! கொஞ்சநேரத்துக்குமுன் வீட்டிற்கு வந்தேன். அப்பொழுது


இந்தியா கவர்ன்மெண்டில் ராஜபிருதுகளுடன் வைத்திய ரத்ன என்னும் அபூர்வ பட்டமும் மெடிகல் ஸனதும் பெற்ற

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரியாருடைய

**ஸித்த மகரத்வஜம்** (பலவிருத்தி டானிக்)



[புரொபஸர் ராமமூர்த்தியால் சர்டிபிகேட் செய்யப்பட்டது.]

இதில் தங்கம் முதலிய உயர்ந்த வஸ்துக்கள் சேர்ந்து இருப்பதால் முக்கியமாய் அங்கங்களையும், நரம்புகளையும் பலப்படுத்தி காமோத்தீபனத்தை விருத்தி செய்வதில் நிகரற்றது. அநேக காரணங்களால்பலத்தைக்கெடுத்துக் கொண்டவர்களுக்கு அத்தியாவசியமானது.

30 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூ. 7. டரீக்ஷிப்பதற்கு 5 மாத்திரைகள் ரூ. 1-4-0 வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி** (ரிஜிஸ்டர்ட்)

அழகு, குணம், ருசி, வாசனை, இவைகளை அளிப்பதில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் மேலானது. சென்னை ஹைகோர்ட்டில் உரிமை பெற்றது. டப்பி 1-க்கு 0-2-9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூ. 1-14-0. ஆனந்த பற்பசை ட்யூப் 1-க்கு அணு 8. வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

**இந்தியன் ஹெர்குலீஸ் புரோபெஸர் ராமமூர்த்தி, பிரதீயக்ஷ பீமஸேனன் அவர்கள் எழுதுகிறர்:—**

"பிரம்மஸ்ரீ வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரியார் அவர்கள் ஸம்ஸ்கிருத வித்தையில் அபாரமான சக்தியை அடைந்து பிரகாசிப்பதுடன் நமது ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தையும் நன்ருய்ப்படித்து சாஸ்திரத்தில் சொல்லிய பிரகாரம் சரீரத்திற்கு பலத்தை உண்டு பண்ணக்கூடிய ஒஷதிகளைச் சேகரித்து அவைகளைக் கொண்டு பூலோகத்தில் அனுதாவாய்த் தத்தளித்துக்கொண்டிருக்கும் மனிதர்களுடைய பலஹீனத்தை நிவர்த்தி செய்து ஜனங்களுக்கு சரீர புஷ்டியை உண்டு பண்ணுவதே மேற்படி சாஸ்திரிகளுக்கு ஜன்ம விருத்தியாய் அமைக்கப்பட்டு இருக்கிறபடியால் அவருக்கு இந்த யோக்கியதா பத்திரத்தை அனுப்புகிற விஷயத்தில் நான் மேன்மையான ஆனந்தத்தை அடைகிறேன். நரம்புகளுக்கு வலுவைக் கொடுக்கக்கூடிய இவருடைய டானிக்குகள் என் அனுபவத்தில் அத்தியந்தம் வீரியமுள்ளவைகளாய் இருக்கின்றன. இவ்விதமான இவருடைய காம்பீரியமுள்ள பிரயத்னங்கள் மேன்மேல் அபிவிருத்தியை அடையவேண்டும் என்று நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன. அவருடைய பல்பொடியையும் அனுபவத்தில் சிரேஷ்டமாக அறிந்திருக்கிறேன்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனும்

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி.**

**வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.**


நன்ருகத்தானே இருந்தீர்கள்! பைத்தியந்தான் பிடித்து விட்டது!" என்ருர் அவர்.

"மேலே பேசினுல் மண்டை கிழிந்து விடும். ஜாக்கிரதை" என்ருர் மாமா.

"ஓய்! நாக்கை அடக்கி வைத்துப் பேசும். பரபரவென்று வந்தீர். சால்வையைப் பிடுங்கினீர். அவரிடம் கொடுத்தீர். அத்துடன் நில்லாது திருடன் என்கிறீர். பல் உடைந்து விடும் என்கிறீர். என்ன தலைகால் ஒன்றும் தெரியவில்லையா என்ன?" என்று கோபமாய்ச் சொன்னுர் அவர்.

உடனே மாமா கையை ஓங்கினுர். பளாரென்று ஒரு ஓசை கேட்டது. அவருடைய தாடையில் மாமாவின் ஐந்து விரல்களும் அப்படியே பதிந்திருந்தன. இதுதான் அவருக்கு மாமா சொன்ன பதில்.

உடனே இருவருக்கும் கைகலந்தது. பளார், பளீர் என்ற சப்தங்கள் கிளம்பின. ஒருவரோடொருவர் கட்டிப்புறண்டார்கள். ஜனங்களெல்லாம் இவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். எங்கள் பாடு கலகலத்துப் போய்விட்டது.

அப்பொழுதுதான் அங்கு எங்கள் ஊர் சீமா வந்தான்.

"என்ன சோமு! சால்வையை ஊரில் வைத்து மறந்து வந்துவிட்டாயாமே? இந்தா! உன் மனைவி கொடுத்தனுப்பினுள்" என்று சொல்லிக்கொண்டே சீமா சால்வையை என்னிடம் கொடுத்தான்.

மாமாவுக்கு விஷயம் தெரிந்துவிட்டது. உடனே அவர் சண்டையை நிறுத்திவிட்டு என்னைப் பார்த்த பார்வை! இப்பொழுது நினைத்துக்கொண்டால்கூட அந்தக்கோரக்காட்சி என் மனக்கண்முன் வந்து தாண்டவமாடுகிறது. அந்தப் பேர்வழி என்ன செய்யப் போகிருரோவென்று பயந்தேன்.

பாவம்! அவர் ரொம்பவும் ஸாதுபோலிருக்கிறது. "நல்லவேளை! போலீஸில் மாட்டிக் கோர்ட்டுக்கும் வக்கீலுக்கும் பணத்தைக் கொடுக்கும்படிச் செய்யாமல் இந்த மட்டோடு விட்டீர்களே அதுவேபோதும்! சால்வையைப் பார்த்தீர்களே. அப்பொழுதே என்னைக் கேட்டிருக்கக்கூடாதா?" என்று சொல்லிவிட்டுச் சால்வையை வாங்கிப் பழையபடி இடுப்பில் கட்டிக்கொண்டு போய்விட்டார்.

* * * *

## கண்ணோட்டம்



ஸ்ரீமதி டி: இராமரத்தினம் அம்மாள், கிருஷ்ணகிரி. இவர் தர்மபுரி ஜில்லாபோர்டு மெம்பராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.



பம்பாயின் புதிய கவர்னர் மிஸ்டர் லாரென்ஸ் ரோஜர் லம்லி.



ஐக்கிய மலாய்நாட்டு நாட்டுக் கோட்டை செட்டியார்கள் வர்த்தக சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் அ. மு. மு. சோமசுந்தரம் செட்டியார்.



பிரபல ஐரோப்பிய! நடிகர் நார்கிஸ் என்பவரும் ஸ்ரீமதி பாய் மணிபாயும். மிஸ். நார்கிஸ் இந்திய சங்கீதம், இந்திய நாட்டியம் முதலியவற்றை ஸ்ரீமதி மணிபாயிடம் கற்றுவருகிறார்.



இந்திய ஸிவில் சர்விஸிலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்டு டாடா கம்பெனியில் உத்தியோகமேற்கும் ஸ்ரீமான் எஸ். கே. ஸின்ஹா.

## பிரமுகர்கள்



கோலாலம்பூரிலுள்ள நாட்டுக் கோட்டை செட்டியார்கள் வர்த்தக சஙக 7-வது ஆண்டுத் தலைவர் ஸ்ரீமான் மு. ராம. பெரிய கருப்பன் செட்டியார்.



இந்தியா கவர்ன்மெண்டு பொக்கிஷ இலாகா கூட்டுக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் கே. சஞ்சிவி ராவ்.



ஸ்ரீமதி வி. கோவிந்தம்மாள், ஹரூர். இவர் தர்மபுரி ஜில்லா போர்டு மெம்பராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.




தகப்பனுர்:—மருந்து சாப்பிடுவதற்காக இரண்டணுக் கொடுத்தேனே. அதை என்ன செய்தாய்?

சிறுவன்:—ஒரு அணுவுக்குச் சாகிலட் வாங்கினேன். மற்ெருரு ஒரு அணுவைத் தம்பியிடம் கொடுத்து மருந்தைச் சாப்பிடும்படி சொன்னேன்.

* * * *

மனேவி:—ஒரு ஸ்திரீயின் விரலுக்கு நஷ்ட ஈடாக 1000 ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாகப் பேப்பரில் போடப்பட்டிருக்கிறது.

கணவன்:—ஒரு சமயம் விரல் கணவன் கண்ணுக்குள் இருந்திருக்கலாம். அதனுல் தான் அவ்வளவு போலிருக்கிறது!

* * * *

பிரயாணி:—என்னுடைய நாய்க்கும் டிக்கட்டிற்குப் பணம் கொடுத்துவிடுகிறேன். நாயை எனக்குப் பக்கத்தில் உட்கார்த்திக் கொள்ளலாமல்லவா?

டிராம் கண்டக்டர்:—செய்யலாம். ஆனுல் பிரயாணிகள் உட்காருமிடங்களில் கால் வைக்கக்கூடாது.

* * * *

"ஸினிமா நடிகருக்கு மாதம் 5000 ரூபாய் சம்பளம்."

"5000, உம்! பிரதம மந்திரி சம்பளமாகிறதே அது!"

"பிரதம மந்திரி நடிக்க முடியாதல்லவா!"

* * * *

தான் சிறுவயதினள் என்று எப்பொழுதும் பெருமை யடித்துக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீ தன் சிநேகிதி ஒருத்திக்குத் தான் குழந்தையாக விருக்கையில் தாய் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டிருக்கும் பாவனையில் எடுத்த படத்தைக் காட்டி "20 வருஷங்களுக்கு முன் நான் இப்படித் தான் இருந்தேன்" என்றுள்.

சிநேகிதி:—சரி. இந்தக் குழந்தை யார்?

* * * *

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்:—சாமர்த்தியம் என்பதற்கு என்ன செய்வது?

இன்ஸ்பெக்டர்:—ரிவால்வரில் குண்டு இல்லாமலிருக்கையில் இருப்பதுபோல் பாவனை செய்து சுடுவது.

* * * *

மனேவி:—நேற்றிரவு தூங்கும்போது தாங்கள் பேசிக் கொண்டேயிருந்தீர்கள்.

கணவன்:—அப்பொழுது நான் என்ன சொன்னேன்.

மனேவி:—அநேகமாக என்னைப்பற்றிய வசைமொழியாகவே இருந்தது.

கணவன்:— அப்படியானுல் நான் தூங்கியிருக்கமாட்டேன்.

* * * *

முதலாளி:—அந்தப் பயில்வான் குமாஸ்தாவை வேலையிலிருந்து நீக்கியாய்விட்டதா?

மானேஜர்:—நோட்டீஸ் கொடுத்துவிட்டேன். நோட்டீஸ் பெற்றுக்கொண்டதற்கு அறிகுறியாகத்தான் தலையில் இந்தக்காயம் உண்டாயிற்று.

* * * *

மாஜிஸ்திரேட்:— இதுவரையில் ஒன்பது தரம் திருட்டுக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிருய். சென்ற தடவை உனக்கு எவ்வளவு கிடைத்தது.

குற்றவாளி:—ஒரு ரூபாய் இரண்டணு.

* * * *

முதல் நண்பன்:—டாக்டரைப் பார்த்தாயா? என்ன சொன்னுர்?

குடிகார நண்பன்:—காபி, டீ, புகையிலை, சுருட்டு முதலியவற்றை விட்டுவிடும்படியாகச் சொன்னுர்.

'சாராயம் குடிக்க வேண்டாமென்று சொல்லவில்லையா?'

"அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நானும் அவ்வித மடத்தனமான கேள்விகளைக் கேட்கவுமில்லை.

* * * *

"இன்று சாப்பாட்டில் மண் நிறையக் கலந்திருந்தது"

"குட்டிச் சுவர்களைச் சீர் திருத்த மண் அவசியமென்று தெரியாதா"?

* * * *


உயர்ந்த
வைரங்கள்
**T. R.**
**ஜோஷி & சன்ஸ்,**
**Diamond Merchants,**
38, ஏகாம்பரேசுவரர் அக்ராஹாரம்
பி. டி. மதராஸ்.




அமெரிக்காவில் சமீபத்தில் நடந்த வேலை நிறுத்தத்தில் வெற்றிகிடைக்கும்வரை க்ஷவரம் செய்துகொள்வதில்லையென்று ஒரு பகுதியினர் கட்டுப்பாடாகவிருந்தனர்.


**CONTRACEPTIVE.**

'Rahat' is an unfailing contraceptive, a three-day use of which insures lifelong relief from the misery of conception without in any way harming the physique or disturbing menstrual regularity. Guarantee form accompanies every order.

Price Rs. **5-8**; foreign, Shillings 10.

**Vilasvati:** excellent retentive tonic pills.

Price Re. **1-6**, foreign, Shillings **2-6**.

**Rajvati:** recontinues stopped menses, regularising monthly course too.

Price Rs. **5-8**, foreign, Shillings **10**.

**Dr. S. H. KHAN,**
S. Tapia Mansion, Erskin Road,
BOMBAY 3.



ஐரோப்பிய சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பிய ஸ்ரீமான் ஒய். எம். டன்டேகர் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் வரவேற்கப் பட்டார்.

# இந்திய வர்த்தமானம்

——:[ ]:——

**மேலர்கோட்லாவில் முஸ்லிம்கள் கிளர்ச்சி**

மேலர்கோட்லாவில் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் கிளர்ச்சி செய்து வருகின்றனர். போலீஸாருக்கு ராணுவத்தினர் உதவி செய்து வருகின்றனர். தற்போது நிலைமை பூரணமாகச் சமாளிக்கப் பட்டுவிட்டது. இரண்டு முறை ராணுவத்தினருக்கும் ஜனத்திரளுக்கும் சச்சரவு நடந்தது. தடிப் பிரயோகத்திற்குப் பின் ஜனங்கள் ராணுவத்தினரைத்தாக்க ஆத்திரத்துடன் வந்தார்கள். கலவரஞ் செய்பவர்களைத் தனியாகப் பிரிப்பதற்காக ராணுவம் முள் வேலிகளை அமைத்தது. ஸ்திரீகள் வீட்டுக்கூரைகள் மீது நின்று ராணுவத்தினர் மீது கற்களை எறிந்து தங்களது ஆடவர்களுக்கு உதவினர். இறுதியில் ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். எவருக்கும் காயமேற்படவில்லை. நிலைமை சமாளிக்கப்பட்டு அமைதி ஏற்படுத்தப்பட்டது.

*　*　*　*

**இடைக்கால மந்திரிகள்மீது நம்பிக்கையில்லை**

சென்னை இடைக்கால மந்திரிகள் மீது நம்பிக்கையில்லையென்று காங்கிரஸ்காரர்கள் தயார் செய்திருக்கும் மகஜரில் காங்கிரஸ் சட்ட சபை மெம்பர்கள் எல்லோரும் கையெழுத்திட்டுவிட்டார்கள். காங்கிரஸில் சேராத மெம்பர்களிலர்கூட அந்த மகஜரில் கையெழுத்துச் செய்திருக்கிறார்களென்று தெரியவருகிறது.

*　*　*　*

**சிவபெருமான் தரிசனம்**

டார்ஜீலிங்கில் சந்து மாரியென்றவிடத்தில் சிவபிரானின் விக்ரஹம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதான விவரம் இப்பொழுது ஒரு ஸ்தல வைத்தியரால் அறிவிக்கப்படுகிறது. ஒரு மனையில் அரை கட்ட வேண்டிச் சில கூலிகள் பூமியை வெட்டிவந்தனர். அப்பொழுது பெரிய கல்லு தட்டுப்படவே வெட்டிப் பார்த்ததில் சிவபெருமானின் விக்ரஹம் ஒன்று அகப்பட்டது. இந்த மனை ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயருடையது. கூலிகள் இதை அவர் மனைவிக்குத் தெரிவித்தனர். உபாத்தியாயர் மாலையில் வந்தவுடன் மனைவி விக்ரஹ கண்டெடுப்புபற்றி அவரிடம் அறிவித்தார். இந்தக் கடவுளுக்கு ஏற்ற கோவில் கட்டி பூஜை நடத்தத் தங்களுக்குச் சக்தியில்லாதது பற்றி அவர்கள் வருந்தி, விக்ரஹத்தைக் கங்கையில் போட்டுவிடுவதெனத் தீர்மானித்தனர். அவ்விதம் செய்யுமுன் ஒரு வயதான திபேத்வாசியிடம் யோசனை கேட்டனர். அவர் இந்த யோசனையை அங்கீகரித்து மறுதினம் அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கும் கடிதமொன்று கிடைக்குமென ஜோஸ்யத்தைக்கொண்டு அறிவித்தார்.

இரவு மனைவி அயர்ந்து தூங்கியபொழுது அவள் சொப்பனத்தில் அழகான சிறுபையன் அவள் முன் தோன்றினன். கங்கையின் பக்கத்தில் அந்தப் பையன் நிற்பது போல் காணப்பட்டது. என்னை விட்டுவிடு என்று அந்தப் பையன் மூன்று தடவைகள் இந்த ஸ்திரீயிடம் கூறுவதாகத் தோன்றிற்று. இதுவரையில் பேசமுடியாமலிருந்த ஸ்திரீ, "நீ போகக்கூடாதென" தூக்கத்தில் பதில் கூறினாள். இந்தப் பதில் கூறியவுடன் அந்தப் பையன் மறைந்துவிட்டான். இந்தப் பையன் அந்த அறையில் வைக்கப்பட்டிருந்த விக்ரஹத்திற்குள் மறைவதுபோல் அந்த ஸ்திரீக்கு சொப்பனத்தின் கடைசியில் தோன்றிற்று.

மறுநாட் காலை அந்த ஸ்திரீ தமது சொப்பன அனுபவத்தைக் கணவனிடம் அறிவித்தாள். விக்ரஹத்தைக் கங்கையில் எறிவதில்லையென உடனே அவர்கள் முடிவு செய்தனர்! விக்ரஹத்திற்கு பூஜை செய்யக் கணவன் ஏற்பாடு செய்தார். ஆனால், அந்த உபாத்தியாயர் பரம ஏழையாகையால், இதற்கு எப்படி ஏற்பாடு செய்வதென யோசித்துக்கொண்டிருந்தார்.

இப்படி அவர் யோசித்துக்கொண்டிருந்தபொழுதே அன்று தினம் ஒரு அமெரிக்க தம்பதிகள் எழுதிய கடிதமொன்று இவருக்குக் கிடைத்தது. டார்ஜீலிங்கில் தாங்கள் நிரந்தரமாகத் தங்கப் போவதாகவும் தங்களுக்கு அவர் வங்காளி பாஷை போதிக்க மாதம் ரூ. 60 கொடுத்து அவரைத் தங்களுக்கு உபாத்தியாயராக வைத்துக் கொள்ள விரும்புவதாகவும் அக்கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகவே, திபேத்வாஸியின் ஜோஸ்யம் பலித்துவிட்டது. உபாத்தியாயரின் செல்வக் கஷ்டமும் தீர்ந்தது. சிவபெருமானின் பூஜைக்கு எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

*　*　*　*

புத்துயிருடன் ஊக்கம்



விம்டோ கார்டியல் புகழ் பெற்றிருப்பதற்குக்காரணம் இதுதான். முதலில் அது விசேஷ புத்துயிரூட்டும் ருசி மிகுந்த பானம்—தவிர விம்டோ புதிய ஆரோக்கியம், புதிய ஊக்கம், புதிய ஜீவசக்தி இவற்றைத் தருகிறது! —விம்டோ, பானங்களில் மேலானது

VIMTO

கார்டியலுடன்

மற்ற பக்கங்களில்

மீட்சி (சிறு கதை) 2
கரும்பூதம் (புதிய தொடர்கதை) 4
தென்னிந்தியப் பிரமுகர்கள் 8
ஸங்கீதப்பகுதி 10
காணமற்போன சால்வை (ஹாஸ்யப்பகுதி) 13
கண்ணோட்டம்-பிரமுகர்கள 15
விநோதக்கொத்து 16
பிரபஞ்ச வர்த்தமானம் 23
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி 25
சர்வகலாசாலைகளும் கூட்டுக் கல்வியும் 27
நவநாகரீகம் 29
உத்தம ஊழியன் (அதிசய உண்மைக் கதை) 31
மகாபாரதம் 35
மதிப்பற்ற அரசன் (சிறுவர் பகுதி) 36
மரியாதைராமன் கதை 37
இரத்தம் சிந்தாமல் பட்டமேற்பில்லை 38

REGD. № 790
பெட்டி 1-க்கு ரூ. 1-0-0
T. P. LAL & Co. BOMBAY, 2.

"ZANDU"
KESARI JIVAN
THE IDEAL TONIC FOOD
SOLE AGENTS: DAMODER & Co.
78, CHINA BAZAAR ROAD MADRAS.

### பெண் தூக்கிச் செல்லப்பட்டாள்

சென்ற 23-ந்தேதி லாகூர் ஜில்லா கோர்ட்டில் ஒரு முஸ்லீம் பெண் போலீஸார் முன்பே பலாத்காரமாகத் தூக்கிச் செல்லப்பட்டாள்.

கணவனை விட்டுத் தனியாக வாழ்ந்துவரும் முஸ்ஸமத் கால்ஸிம் என்ற முஸ்லீம் பெண் அவள் தாயார்மீதும் அவளுடைய கள்ளக் காதலன் என்று கூறப்பட்ட ஒருவன்மீதும் கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்கில் சாக்ஷி கூறக் கோர்ட்டுக்கு வந்திருந்தாள். கோர்ட்டில் அவள் உட்கார்ந்திருக்கையில் ஒரு லாரி கோர்ட்டு காம்பவுண்டுக்குள் வந்தது. அதிலிருந்து நாலு பேர் வெளியில் குதித்துப் பெண்ணை அப்படியே பலாத்காரமாகத் தூக்கி லாரியில் வைத்துக்கொள்ள, லாரி வெகு வேகமாகச் சென்று கண்களுக்கு மறைந்துவிட்டது.

* * *

### ஸ்ரீமான் முத்துராமலிங்கத்தேவர் வழக்கு

சென்னை சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீமான் முத்துராமலிங்கத்தேவர்மீது கி. பு. கோ. 108-வது பிரிவுப்படித் துவேஷமுண்டுபண்ணத்தக்க பிரசங்கம் செய்ததாக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு ராமநாதபுரம் ஜாயிண்ட் மாஜிஸ்திரேட் ஸ்ரீமான் தேவர் 9 மாதத்திற்கு ரூ. 1000க்கு சொந்த ஜாமீனும் அதே தொகைக்கு இரு நபர் ஜாமீனும் கட்டவேண்டுமென்று உத்தரவிட்டார். ஸ்ரீமான் தேவர் ஜாமீன் கட்டிவிட்டார்.

* * * *

### காங்கிரஸ்-முஸ்லீம் ஒத்துழைப்பு

இது சம்பந்தமாகப் பம்பாயைச் சேர்ந்த பிரபல சுதேச பாஷா பத்திரிகையான 'ஜெய பாரத்'தின் ஆசிரியர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்குப் பின்கண்ட தந்தியை அனுப்பினார்:-

காங்கிரஸும் முஸ்லிம் லீகும் ஒத்துழைப்பது சம்பந்தமாக விவாதிக்க ஜனாப் ஜின்னாவை அழைத்தால் அவர் தங்களுடன் அதுபற்றி விவாதிப்பதற்குவரத் தயாராக இருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும்.

இதற்குப்பண்டித நேரு பின்கண்டவாறு பதிலனுப்பினார்:--

சுயேச்சை, புதிய அரசியல் நிராகரிப்பு, பொதுஜனங்கள் மேம்பாட்டிற்காக உழைத்தல் முதலியன காங்கிரஸ் முறையின் முக்கியாம்சங்களாகும். காங்கிரஸ் அதன்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த ஆதாரத்தைக் கொண்டு நான் எந்தப் பிரதிநிதியுடனும், தனிப்பட்ட நபருடனும், கோஷ்டியுடனும் ஒத்துழைக்கவும் விவாதங்கள் செய்யவும் தயார்.

* * * *

### ஸாப்ரூ, ஜேயகர் இங்கிலாந்துப் பிரயாணம்

ஸர் டேஜ்பகதூர் ஸாப்ரூ ஓய்வையுத்தேசித்து ஏப்ரல் 24-ந்தேதி இங்கிலாந்து சென்றார். அவர் லார்டு ஸெட்லண்டையும் மற்ற பிரிட்டிஷ் ராஜதந்திரிகளையும் கண்டு இந்தியாவின் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றி விவாதிப்பார்.

சமஷ்டி கோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் எம். ஆர். ஜயகரும் சமீபத்தில் இங்கிலாந்து செல்வார். தற்கால அரசியல் மாறுதல்களை உத்தேசித்து இவர்கள் பிரயாணத்தில் அரசியல் கோஷ்டியில் விசேஷக் கவனஞ் செலுத்தப்படுகிறது.

* * * *

### வயிற்றில் 18 கத்திகள்

வட இந்தியாவில் பல பட்டாள உத்தியோகஸ்தர்களுக்கு முன்பும் மகாராஜாக்களுக்கு முன்பும் ஜாலவித்தை காட்டி 15 வருஷகாலமாக ஏராளமாகப் பணம் சம்பாதித்த ஒருவருக்கு பம்பாய் செயிண்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரியில் வயிற்றில் ரண சிகிச்சை செய்யப்பட்டது. நோயாளியின் வயிற்றிலிருந்து 18 பேனாக்கத்திகள் எடுக்கப்பட்டன.

இந்த அதிசய ஜாலவித்தைக்காரர் ராவல்பிண்டியைச் சேர்ந்தவர். இவர் பேனாக் கத்திகளை அப்படியே பூரணமாக விழுங்கிவிடும் வித்தையைக் காட்டுவதில் கைதேர்ந்தவராம். சென்ற நான்கு மாதங்களாகத்தான் இவருடைய வித்தை பலிக்கவில்லை. விழுங்கிய கத்திகளை அப்புறப்படுத்த இவரால் இயலவில்லை. இவர் கத்திகளை வெளிப்படுத்திக்கொண்டுவிட முடியுமென்ற நம்பிக்கையுடன் இரண்டு இடங்களில் தமது வித்தையைக் காட்டினார். இதனால் இவரது வயிற்றில் 18 கத்திகள் சேர்ந்து போயினவேயன்றி, அவை எதையும் வெளிப்படுத்த முடியவில்லை. வயிற்றில் கனம் அதிகமாக ஏற்படவே, இவர் மர்தனில் ஒரு வைத்தியரைக் கலந்து ஆலோசித்தார். அவர் புகைப்படம் பிடித்து பம்பாய்க்கு ரண சிகிச்சைக்காக அனுப்பினார். செயிண்ட் ஜார்ஜ் ஆஸ்பத்திரியின் வைத்தியர் இவரது வயிற்றைக் கிழித்து 18-கத்திகளை எடுத்தார். இவற்றில் 11-கத்திகள் மரப்பிடிகளுடன் கூடிய மலிவான கினுசுக் கத்திகள். 5 கத்திகள் எஃகுக் கைப்பிடிகளைக் கொண்டவை. 2 கத்திகளின் மரக்கைப்பிடிகளை வயிற்றிலுள்ள ஆஸிடுகள் (திராவகம்) ஏறக்குறைய தின்றுவிட்டது. சர்ஜன் வேறிரண்டு கத்திகளின் எஃகுப் பக்கங்களையும், 5 எஃகுத் தகடுகளையும் (கத்தியின் மத்திய பாகங்களைப்போலிருக்கின்றன), 3 கத்தி அலகுகளையும் 2 எஃகுச் சாவிகளையும், 2 எஃகு வளையல்களையும் (கத்திகளை பெல்டில் மாட்டுவதற்காகப் பிடியிலுள்ள வளையங்கள்) சில சிறிய எஃகு ரிவெட்டுகளையும் வெளியே எடுத்தார். எஃகுத் தகடுகளையும் வயிற்றிலுள்ள திராவகங்கள் தின்று இருக்கின்றன. அலகுகளைச் சேர்ப்பதற்காகவுள்ள எஃகு லூப்புகள் வளைந்து கிடக்கக் காணப்பட்டன. இந்த ஜால வித்தைக்காரர் ரண சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்து வருகிறார்.

* * * *

### காந்திஜியின் யோசனையை ஏற்க முடியாது

உதவி இந்திய மந்திரி மிஸ்டர் பட்லர் காமன்ஸ் சபையில் பேசுகையில் இந்திய அரசியல் சட்டப்படியும் கவர்னர்களுக்கு விடுக்கப்பட்ட ஆக்ஞாபத்திரத்தின் படியும் அவர்களிடம் பார்லிமெண்டால் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை அவ்விரண்டையும் மீறுத முறையில் விட்டுக்கொடுக்க முடியுமா முடியாதா என்ற பிரச்னையை மத்தியஸ்த சபை முடிவு செய்யவேண்டுமென்ற யோசனையை சர்க்கார் ஏற்றுக் கொள்வதற்கில்லையென்று கூறிவிட்டு அவர் மேலும்பின்வருமாறு சொன்னார்:-

பார்லிமெண்டு எந்தக் காரியங்களுக்காக விசேஷாதிகாரங்கள் உபயோகிக்கப்படவேண்டுமென உத்தேசித்ததோ, அவைகளைத் தவிர வேறு காரியங்களுக்காக அவ்வதிகாரங்கள் பிரயோகிக்கப்படுவதைச் சர்க்கார் ஆதரிக்க மாட்டார்களென நான் தெளிவாக அறிவிக்கிறேன். மந்திரிகளுக்குப் பெருவாரியான அதிகாரங்கள் அளிக்கவேண்டுமென்பதே பார்லிமெண்டின் கருத்து. அவர்கள் நிறுவியுள்ள வேலைத் திட்டங்களை நிறைவேற்றிவைக்க இவ்வதிகாரங்களை அவர்கள் உபயோகிக்கவேண்டுமென்பதுதான் எங்கள் ஆவல். எனவே, கவர்னர்கள் தங்கள் சொந்தப் பொறுப்புகளைப் பற்றிக் குறுகிய எண்ணங்கொண்டோ பரந்த நோக்கின்றிச் சட்ட முறையில் அவற்றைப் பொருள்படுத்தியோ, மந்திரிகளின் அதிகாரங்களில் தலையிட வேண்டுமென்பது சர்க்காரின் கருத்தல்ல.

### நரசோர கிலி

எல்லைப்புற மாகாணத்தில் பன்னு ஜில்லாவில் அவரவர் அதிகார எல்லைக்குள் குடும்பத்துடன் வசிக்க வேண்டுமென்ற நிபந்தனை காரணமாக 93 கிராம உத்தியோகஸ்தர்கள் ராஜினாமாச் செய்துவிட்டனர். நரசோர கிலியே இதற்கு காரணம்.


**விலை ரூ. 1-4 தான்!**

**பாக்ஸ் & போல்டிங் காமிரா.**

ஆரம்பக்காரர்கள்கூட இக்காமிராவினால் ஒரு நொடியில் கார்டு சைஸ் படங்களெடுக்கலாம். வேலையற்றவர்கள் தினம் ரூ.5. சம்பாதிக்கலாம்.



**இலவசம்** ஒவ்வொரு காமிராவுடன் 1. டாக்ஸ் பிரிண்டிங் பேப்பர். 4 பிலிம்கள்; டெவலப்பிங் கெமிக்கல்ஸ் & சாமானிய உபயோகக் குறிப்புகள். விலைகள்: பாக்ஸ் காமிரா நெ. 2--ரூ. 1-4; நெ.1-(a) ரூ. 2—3. படத்திலுள்ள போல்டிங காமிரா ரூ.2; உயர்ந்தது ரூ.4-8. பிரத்யேக பிலிம்கள் டஜன் ரூ. 1; பிரிண்டிங பேப்பர் டஜன் 6 அணா. பாக்கிங் முதலியன 10 அணா.

Young India Watch Co.,
(Depot 30)
159/C, Machua Bz. St Calcutta.

**உயர்ந்த ரோமசங்காரி**




வேண்டா ரோமத்தை உடனே நீக்கி சருமத்தை மிருதுவாக்கி பாதுகாக்கின்றது. பெரிய குடும்பங்களால் உபயோகிக்கப்படுகின்றது.

பெரியடியூப் அணா 12; சிறிய டியூப் அணா 6
பெரிய பாட்டில் அணா 14
சிறிய பாட்டில் அணா 10

வி. பி. வேறு. எங்கும் விற்கப்படுகின்றது.

Agents: Shivlal & Co., Bombay, 2

**இது ஓர் ஆச்சரிய ஜோதிடம்!!!**

ஆண் பெண் சகல மதஸ்தர்களுக்கும் இல்வாழ்க்கை திறவுகோல் இதுவே! தங்கள் எண்ணத்தை எனக்கு தெரிவிக்காமலே ஜனன காலம் தேவை இல்லாது எனக்கு கடிதம் எழுதும் நேரம் எழுதவும். திரிகாலமும் தங்களுக்கு அறிவிக்க ரூ. 2-0-0. தங்கள் எண்ணத்தைத் தெரிவித்து 1 முதல் 5 கேள்விக்கு ரூ. 1-0-0. ராசி முதல் டிக்ரிவரை கணித்து ஒரு வருட பலன் எழுத ரூ. 5-0-0 இஷ்டார்த்த சித்தி ரக்ஷையும், மூலிகையுடன் தயார் செய்து அனுப்ப ரூ. 10-0-0 வி. பி. பிரத்தியேகம். ஶ்ரீ. முத்துவேல் முதலியார் கலைமகள் ஜோதிடம், தோடி வீதி, 48 நெ, திருப்பாபுலியூர் (தென் இந்தியா)



மிஸ் கிரேட்டா கார்ப்போ, ராபர்ட் டெய்லர் நடிக்கும் "காமில்" என்ற படத்திலிருந்து ஒரு காட்சி.



"பிரேம் லக்ஷ்ய" என்ற ஹிந்தி பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.



மன்னர் மகுடாபிஷேக விழாவின்போது நடைபெறவிருக்கும் நாட்டியத்தில் பல சீமாட்டிகள் புராதன உடைகளணிந்து புராதன நாட்டியங்கள் ஆடிக் காண்பிப்பர்.



"டென்னிஸ்



பிரபல அமெரிக்க விமானியான மிஸ் அமிலியா இயர்ஹார்ட் சமீபத்தில் உலக வலம் வர உத்தேசித்திருக்கிறார். அவர் அவரது சகாக்களுடன் காணப்படுகிறார்.



சர்வதேச ஒய். எம். ஸி. ஏ. காரிய

தில் ஷாங்காய்க்கு விஜயம்



"டென்னிஸ் ஆர்வம்."



ஸி. ஏ. காரியதரிசி மிஸ் ருத் உட்ஸ்மல் சமீபத்
கு விஜயம் செய்தபோது எடுத்தபடம்.



போபால் நவாபின் புத்திரி கௌஹர்-இ-தாஜ் அபிதா சுல்தான் தமது தகப்பனுருடன் இங்கிலாந்து சென்றிருக்கிருர். அங்கு இருவரும் பல போலோ ஆட்டங்களில் கலந்துகொள்வர். படத்தில் இருவரும் காணப்படுகின்றனர்.




சமீபத்தில் சிகாகோ (அமெரிக்கா)வில் மோட்டார் டிரைவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அதில் கலந்து கொள்ளாதவர்களை வேலை நிறுத்தம் செய்தவர்கள் பலாத்காரம் செய்து அவர்களது மோட்டார்களையும் கவிழ்த்து விட்டனர்.

# ஹிமயமலைக் காட்சிகள்



தாங்கர் பள்ளத்தாக்கில் வசிப்பவர்கள்.



தாங்கர் பள்ளத்தாக்கு.







ஸ்பிதி பள்ளத்தாக்கிலுள்ள ஒரு வீரன் அம்பு எய்கையில் எடுத்த படம். (நடுப்படம்) கீமுர் பிரதேசத்தில் வஸிப்பவர்கள் 'க்ரே' விழா என்ற பண்டிகையைக் கொண்டாடுகையில் எடுத்த படம். (கடைசிப்படம்) தங்கிபுட் பள்ளத்தாக்கில் மலை வாசிகள் செல்லும் காட்சி.







'கை' என்னும் பிரதேசத்திலுள்ள ஒரு சந்யாஸிகள் மடம். (நடுப் படம்) மடத்தின் வாயிலில் ஒருவர் மற்றொருவரை வரவேற்கும் காட்சி. (கடைசிப் படம்) ஹிமாலய வாஸி. இவர் மிகவும் பணக்காரரென்று கூறப்படுகிறது.



ஸ்பானியக் கலகக்காரர்களின் கப்பல்கள் சமீபத்தில் பிரிட்டிஷ் உணவுப் பொருள் கப்பல்களைத் தாக்க வந்தன. அப்பொழுது அவைகளின் உதவிக்கு எச். எம். எஸ். ஹுட் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் (படத்தில் காணப்படுவது) சென்றது. உடனே கலகக்காரர்கள் கப்பல்களும் ஒதுங்கிச் சென்றுவிட்டன.

நல்ல தினம்
நல்ல உடை!

அவரவர்கள் மரியாதைக்கும் மதிப்புக்கும் தக்க மாதிரியான உடை ஆடைகள் எப்பொழுதும் கௌரவத்தையளிக்கும். ஆகையால்தான் பிரபலஸ்தர்கள்எல்லாரும் புதுமாதிரியான உடை, ஆடை வாங்குவதற்கு வைட் ஷாப்பிற்கு வருகிறார்கள்.

விதம் விதமான பட்டு பட்டாடைகளில் அவர் அவர்கள் வேண்டுவதும் விரும்புவதும் எதுவோ அதெல்லாம் கிடைக்கக் கூடியது இந்த ஷாப்பில் தான்.

விலைகள் மிகவும் குறைவ

கேவல்ராம்ஸ்

9—13, ரட்டான் பஜார்,
சென்னை.

# பிரபஞ்ச வர்த்தமானம்

### மன்னர் மகுடாபிஷேகச் செலவு

மன்னர் மகுடாபிஷேகம் சம்பந்தமாகப் பொதுப்பணத்திலிருந்து 6,89,400 பவுன் செலவழிக்கப்படுமென காமன்ஸ் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

### விஷவாயுவைப் பிரயோகிககக் கூடாது

ஸ்பானிய யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் விஷவாயுவைப் பிரயோகிக்கக் கூடாதெனப் பிரிட்டிஷ் சர்க்கார் அவர்களுக்கு எச்சரித்திருக்கின்றனர்.

விஷவாயுவைப் பிரயோகிக்கும் உத்தேசம் தங்களுக்குச் சிறிதும் கிடையாதென ஸ்பானிய சர்க்கார் பதிலளித்திருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் ஜெனரல் பிராங்கோ இதுவரை எத்தகைய பதிலும் அனுப்பவில்லை.

* * * *

### ஜேர்மன்-ரஷ்யா ஒற்றுமை

"ஸண்டே கிரானிகள்" பத்திரிகையின் ராஜீய நிருபர் அப்பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—"ஜெர்மன் ராணுவத்தைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் ரஷ்ய ராணுவ அதிகாரிகளின் கூட்டுறவைப் பெற ரகசியமாக முயன்று வருகிறார்கள். மற்ற நாடுகளுடன் ராணுவக் கூட்டுறவு ஏற்படுத்திக்கொள்வதால் பிரயோசனமில்லையென்பதை ஜெர்மன் அதிகாரிகள் உணர்ந்திருப்பதே அவர்கள் தற்போதைய முயற்சிக்குக் காரணம். ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் கூட்டுறவு ஏற்படுவதன் மூலம் ஜெர்மனியின் சக்தி பெருகுமென ஹெர் ஹிட்லர் எதிர்பார்த்தார். ஆனால் ஸ்பெயினில் இத்தாலியத் துருப்புகள் சிதறடிக்கப்பட்டது கண்டு அவரது நம்பிக்கை குலைந்துவிட்டது. அங்காட்டிலுள்ள ரஷ்யத் துருப்புகளிடம் நவீன ஆயுதங்கள் இல்லையாயினும் அவை வெகு எளிதாக இத்தாலியத் துருப்புகளை முறியடித்து விட்டனவென ஆங்குள்ள ஜெர்மனி அதிகாரிகள் ஹிட்லருக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

சமீபத்தில் இத்தாலியின் ராணுவத்தைப் பார்வையிடச் சென்றிருந்த ஜெர்மன் ராணுவப் பிரதிநிதிக் கோஷ்டியினரும், இத்தாலியின் ராணுவ பலம் ஜெர்மனியர் எதிர்பார்த்ததுபோல் அவ்வளவு அதிகமாக இல்லையென ஜெர்மன் யுத்த மந்திரியிடம் தெரிவித்தார்கள்.

இதன்பேரில் ஜெர்மன் மந்திரி திடீரென ஏற்படக்கூடிய நெருக்கடியைச் சமாளிக்கத் தாம் முன்னர் தயாரித்திருந்த திட்டத்தை மாற்ற நேர்ந்தது.

பிறகு ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ரஷ்ய ராணுவ அதிகாரிகளுடன் ரகசியமாகக் கலந்து பேசினார்கள். இப்பேச்சுபற்றிப் பிறகு அவர்கள் ஹிட்லரிடம் தெரிவித்தனர்.

பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

டாக்டர் ஜம்மி வெங்கடாமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பிங்கட் வீதி—ரங்கூன்.

அவர் பிரபல ஜெர்மன் நிபுணரான லுடன்டிராப், யுத்த மந்திரி முதலியவர்களுடன் இதைக் குறித்துக் கலந்து பேசினர்.

ஜெர்மனி மேற்கு ஐரோப்பாவில் எந்த வல்லரசுகளுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டபோதிலும் அதன் கிழக்கு எல்லையிலுள்ள நாடு விரோதியாயிருக்கும் வரை ஜெர்மனிக்கு எப்பொழுதும் ஆபத்துதான் என ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ஹெர் ஹிட்லருக்கு எடுத்துக் காட்டியதாகத் தெரிகிறது. ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும்நெருங்கிய ராணுவக் கூட்டுறவு ஏற்படுமாயின், சோவியத்தைத் திரும்பட எதிர்க்கலாமென ஹிட்லர் தெரிவித்தாராம். எனினும், இறுதியாக அவர் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் கருத்தை அங்கீகரிக்கக் கூடும்.

* * * *

## ஸ்பெயின் பேரில் 100 இந்தியர்

ஸ்பெயினில் நடைபெறும் சுதந்திரத்திற்கு இந்திய மக்கள் உதவிபுரிய வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு வேண்டுகோள் வெளியிட்டிருக்கிறார்.

பண்டித நேரு தமது வேண்டுகோளில் அறிவிப்பதாவது:—ஸ்பெயின் ஜனங்களுக்காகவும் ஸ்பெயின் கவர்ன்மெண்டிற்காகவும் நமதுஇந்திய சகோதரர்கள் 100-பேர்கள் போல் சர்வதேசப் படையில் சேர்ந்து சண்டையிடுகின்றனரென்ற செய்தியை மிகுந்த பெருமையுடன் நாம் இப்பொழுதுதான் அறிந்திருக்கிறோம். நமது பழைய சகபாடியான டாக்டர் எம். அத்தல் காயம் பட்டவர்களுக்கு உதவி புரிய ஸ்பெயினுக்குச் சென்றிருப்பதாகவும் சமீபத்தில் எனக்குத் தெரியவந்தது. பில்போவில் ஸ்திரீகளும் குழந்தைகளும் உணவின்றிப்பட்டினிகிடக்கின்றனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பலமெல்லாம் இந்தக் கலகக்காரர்கள் முன் தலை வணங்குவதாகவிருக்கிறது. ஸ்பெயின் ஜனங்களுக்கு உதவியளிப்பதன் மூலம் நமக்கே நாம் உதவி செய்வதாகவும் நமது சுதந்திர இயக்கத்திற்கு உதவி செய்து கொண்டதாகவும் ஆகும்.

* * * *

## ரோம் பத்திரிகையின் சீற்றம்

அடிஸ் அபாபாவில் மகமதலி கம்பெனி மூடப்பட்டது சம்பந்தமாக இந்தியா சட்டசபையில் கேள்விகள் கேட்கப்பட்டதுபற்றி ரோமிலுள்ள "டிரிபியூன்" என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதியிருக்கிறது:—

"அந்தக் கம்பெனியின் முதலாளி செய்திருக்கும் குற்றத்திற்கு அவரைச் சுட்டுத்தள்ள வேண்டும். அவருடைய கடைகளில் ஏராளமான இயந்திர பீரங்கிகளும், ரேடியோக் கருவிகளும் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. இந்தியாவில் யாராவது இங்ஙனம் செய்திருந்தால் ஆங்கிலேய துரைகள் அவருடைய உயிரை வாங்கியிருப்பர்.

இந்தியா சட்டசபை தனது சொந்த அலுவல்களில் கவனம் செலுத்துமாக. அபிஸீனியாவை ஆள்வோர் நாங்கள். அங்கிருந்து யாரையும் வெளியேற்ற எங்களுக்கு உரிமையுண்டு. மகமதலிக்காகப் பரிந்து பேச வருவோர் உஷாராயிருக்கவேண்டும். ஏனெனில், அங்ஙனம் செய்வது அபாயகரமானது"

* * * *

## சத்தியமே ஜெயிக்கும்

தேநீர் புதிதாக வந்த ஒரு பானம் அல்ல. கிறிஸ்து பிறப்பதற்கு 2737 வருஷங்களுக்கு முன்பாகவே தேயிலை வந்துவிட்டதாக சீன சரித்திரம் சொல்லுகிறது. அந்த நூற்றுண்டில் ஷென்நங் என்பவரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு வைத்திய புஸ்தகத்தில் பின்வருமாறு காணப்படுகிறது:—

கபத்தினலோ, மார்புச் சளியினலோ, ஏற்பட்ட உஷ்ணத்தை அது தணிக்கிறது. தாகத்தைத் தணிக்கிறது. மனதுக்கு உற்சாகத்தையும், சந்தோஷத்தையுமளிக்கிறது. ஒயினைவிட இது சிறந்தது. ஏனெனில்மயக்கம் இது தருவதில்லை. ஜலத்தைவிடச் சிறந்தது; ஏனெனில் இத்துடன் வியாதி எதுவும் வருவதில்லை. கி. பி. 6-வது நூற்றுண்டில் தேயிலை சீனவில் பிரபலமடைந்துவிட்டதோடில்லாமல், ஜப்பானுக்கும் போய்விட்டது. இது ஜப்பானுக்கு வந்த கொஞ்ச காலத்துக்குள்ளாகவே இந்நாட்டு மக்கள் யாவரும் இதனுடைய நல்ல தன்மைகளைப் பாராட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

"ஜனங்கள் இதை ஒரு விலையுயர்ந்த மருந்தாகக் கருத வேண்டும். தலைவலியை நிச்சயம் போக்கடிக்கிறது. மகோதரத்தைக் கண்டிப்பதற்கு இது ராஜா" என்று 1653-ல் அலெக்ஸாண்டர் டிரோட்ஸ் பாதிரியார் சொன்னர்.

தேயிலையின் அற்புதமான குணங்களைப்பற்றி ஜனங்களுக்கு அதிகம் தெரியத் தெரிய, இந்நாட்டில் அதன் புகழும் அதிகமாய்க் கொண்டு வருகிறது. தேயிலையின் வளர்ச்சி சத்யத்தின் வளர்ச்சியைப் போன்றது. சத்யத்தைப் போல் இது ஜெயிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியத் தேயிலையை அருந்தி உண்மையை அறியுங்கள் என ஒரு விளம்பர அறிக்கை கூறுகிறது.


தென்னாட்டில்

சிரஞ்சீவி

கிருதிகளை

இயற்றிய

மகாபுருஷர்

தியாகராஜர்





காலஞ்சென்ற

எஸ். ஜி. கிட்டப்பா

கொலம்பியாவின்

கிட்டப்பா ரிகார்டுகள்

பூராவும் உங்களிட

மிருக்கிறதா?

LBE. 6 { எவரனி, பாகஙகள் 1 & 2 —நாதசிந்தாமணி

LBE. 14 { தீர்த்தமு, பாகஙகள் 1 & 2 —சுருட்டி

LBE. 42 { நீ பஜன காணாமிர்தமு —காம்போஜி; ராகசுத —மயூரத்வனி

LBE. 53 { அம்மா ராவம்மா, பாகங்கள் 1 & 2 —கல்யாணி

ORRS COLUMBIA & TALKIES Ltd.
MOUNT ROAD . . . . MADRAS.



வஜ்ர சரீரத்தைத் தருவது

NERVINUS
(WITH GOLD)
Your only Chance.



The Best Tonic of the Day

நர்வினஸ்

(தங்கம சேர்ந்தது)

சிறந்த பலவிருத்தி டானிக்

ஆண்மையும், ஊக்கமும் பெற இதுவே சிறந்த சாதனம்

பிரபல டாக்டர்கள் ஒருமிக்கப் புகழ்கிறார்கள்.

வெளிப்புறத்தில் கஸ்தூரி லினமெண்டேன் உபயோகித்தால் நீங்கள் புருஷ சக்தி ததும்பி நிற்பீர்கள். நர்வினஸ்-1 மாத உபயோகத்திற்கு புட்டி 1-க்கு ரு. 5; லினமெண்ட்-ரு. 2—8; இரண்டும் சேர்ந்து ரு. 7. வி. பி. சார்ஜ் தனி. ஆர்டர்களும் கடிதங்களும் ஆங்கிலத்திலேயே.

BEHAR CHEMICAL WORKS, BHAGALPUR

ஸ்டாக்கிஸ்டுகள்:

அப்பா & கம்பெனி & தாதா & கம்பெனி மதராஸ்.

# நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணுடி



அபிஸீனியாவில் சேவை செய்த ஆகாயப்படையைச் சேர்ந்தவர்களுக்குச் சமீபத்தில் ஸீனர் முஸோலினி பதக்கங்கள் அளித்தார். மேற்படி படையைச் சேர்ந்தவரும் தமது குமாரருமான ப்ரூனே முஸோலினிக்கு அவர் பதக்கமளித்தபோது எடுத்த படம.



மகாத்மா காந்தி ஹுட்லிக்கு விஜயம் செய்தபோது பெருமழையின் காரணமாக அவர் குமாரி கிராமத்திலுள்ள காதி ஆஸ்ரமத்திற்குச் சென்ருர்.



ஜப்பானிய அரசரின் சகோதரரான சிசிபு தமது மனைவியுடன் இங்கிலாந்து மன்னர் மகுடாபிஷேகத்திற்குத் தமது சகோதரர் பிரதிநிதியாகச் சென்றிருக்கிருர். அவர் மன்னர்பிரான் சகோதரர் கிளஸ்டர் பிரபுவால் லண்டனில் வரவேற்கப்பட்டார்.



பள்ளத்தூர் ஸர்க்கிள் தேர்தலில் வெற்றிபெற்ற ஸ்ரீமான் நாகப்ப செட்டியாருக்குச் சமீபத்தில் காரைக்குடியில் பாராட்டுதல் நடைபெற்றது.




## முக்கிய அறிவிப்பு.

அமிர்தாஞ்சன் டிப்போவின் படை மெழுகு

இதுவரையில்

ராஜா-ராணி, வியாபாரக் குறியுடன்விளங்கிய எமது வில்லியம் அண்டு கம்பெனியின் படை மெழுகு இப்பொழுது கீழ்க்கண்ட வகையில் மாற்றப்பட்டிருக்கிறது.

அமிர்தாஞ்சன் டிப்போவின் மூவர்ண 'உதய சூர்யன்'

மேற்படி தகவலையறியும்படி முக்கியமாக எமது வாடிக்கைக்காரர்களை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். வியாபாரக் குறியில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே தவிர எமது மருந்தின் தயாரிப்பில் எவ்வகை மாறுதலுமில்லையென்று உறுதி கூறுகிறோம்.

அமிர்தாஞ்சன் லிமிடெட் பம்பாய், மதராஸ், கல்கத்தா

ஸ்டாக் செய்பவர்கள்:—எ. பி. பரேக், சைனு பஜார் ரோட், மதராஸ்

ஷியாம் & கம்பெனி, பந்தர் தெரு, மதராஸ்.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)

"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்

இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager. Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

அபார சக்திவாய்ந்த டானிக்!

**S.K.M.**

Dr. N. V ஸ்ரீராமாச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும் :

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,

த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915-ஞு) 289, எஸ்பிளநேட் மதராஸ்.




10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.

187, சைனு பஜார் ரோட், ஜி. டி

மதறாஸ்



உங்கள்

குழந்தைக்கு

டோங்கரேயின்

பாலாம்ருதமும்

கொடுங்கள்.

டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?

1. டோங்கரேயின் பாலாம்ருதம் குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.

4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவிசெய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள்:

ஏ. பி. பரேக், 268, சைனு பஜார் ரோட்.


வே.

# சர்வகலாசாலைகளும் கூட்டுக் கல்வியும்

—— :[o]: ——

(கே. ராமனாதன்)

கூட்டுக் கல்விமுறை முதன் முதலாக மேனாடுகளில்தான் ஏற்பட்டதென்றும் நமது தேசத்துக்கு முற்றிலும் நவீனமென்றும் பலரது அபிப்பிராயம். சீர்திருத்தவாதிகள் "மூடக்கொள்கைகள், பெண்டிர் விடுதலை" எனப் பலவாறு சமூகத்தைச் சீரியதாயமைக்கப் பாடுபடுவதாகப் பறைசாற்றி வருகிறார்கள். ஒரு வகையில் அது நியாயமானதே. ஆனால் கூட்டுக் கல்வியை முதன் முறை நிறுவிய தனிப்பெருமை தமிழர்களுடையதே. தமிழன் என்ற முறையில் மொழிப்பற்றினாலோ போலிப்பெருமையினாலோ கூறுகின்றேனில்லை. பழங்கதைகள் கூறி ஏமாற்றும் விருப்புடையோனுமில்லை. ஆனால் கடைந்தெடுத்த உண்மையைக் கூறுகின்றேன். ஆராய்ச்சியாளர்கள் கண்பூக்க இடையறாது உழைத்துச் சிதலடித்துப்போன பழம் ஓலைச் சுவடிகளை நேர்மையுடன் ஆராய்ந்து கண்டு பிடித்த உண்மையையே கூற முற்பட்டுள்ளேன்.

பண்டைக்காலத்தில் அஸ்ஸிரியர், மைசனே, பாபிலோன் முதலிய இடங்களில் மலர்முடி தரித்தபூஜாரிணிகள் ஆண்மக்களோடொன்றாகக் கலாசாலைவழிபாடுகளில் கலந்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது. அது எத்துணை உண்மையென்பதுநமக்குத் தெரியாது. ஆனால் முதல் முதலில் நங்கையர் இலக்கியத் துறையில் ஆண்மக்களோடு கலந்து தொண்டாற்றியது தமிழ்நாட்டில்தான். இப்பொழுது எரணாகுளத்துக்குச் சுமார் இருபது மைல்களுக்கப்பால் உள்ள திருவாஞ்சிக்குளம் என்னும் ஊரில்தான் முதல் முதல் கூட்டுக்கல்விமுறை ஏற்பட்டது. அக்காலத்தில் அது வாஞ்சி எனவழைக்கப்பட்டது.

கி. பி. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்க நூல்களில் வாஞ்சியைப்பற்றிப் பலவிடங்களில் கூறப்பட்டுள்ளது. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் கதாநாயகனான கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மணிமேகலையென்னும் தெய்வீக ரமணி வாஞ்சியில் சுமார் பன்னிரண்டாண்டுகள் கலைபயின்றனள் எனவறிகிறோம். சோழசித்திரங்களினின்றும் தமிழர் நாகரீகம் என்னும் ஆராய்ச்சி நூல்களினின்றும் வாஞ்சியில் ஒரு பெரும் கலைபயில் கழகம் இருந்ததென்றும் அதில் பலவகையான கலைகளுக்கும் தனித்தனிப் பீடம் அமைந்திருந்ததென்றும் அறிகிறோம். வாஞ்சி சர்வகலாசாலையின் ஆதரவில் நிறுவப்பட்ட கல்லூரிகள் கூட்டுக்கல்விமுறை மட்டிலுமின்றி கல்லூரியிலேயே இருப்பிடமும் அமைந்தவைகளாய்த் திகழ்ந்தன.

"இந்தியாவின் இலக்கிய வளர்ச்சி அக்காலத்தில் இளம்பருவத்திலிருக்கவில்லை. ஆசியாவின் இலக்கிய வளர்ச்சியின் சிகரமாய் விளங்கிப்பண்டைய சர்வகலாசாலைகள் எல்லாவற்றினுடைய கல்வி முறையை வகுத்து உருவகப்படுத்திய சிறப்பு இந்தியாவுக்கே உரியதாகும். இக்காலத்தில் கனவிலும் நினைக்க முடியாத மகத்தான இலக்கியசேவையைப் பண்டை இந்தியா செய்திருந்தது" எனப் பிரபல சரித்திர ஆசிரியரான ஹேவல் நூலில் தெளிவாக எழுதியுள்ளார். சிற்பம் சித்திரம், கைத்தொழில்கள், கணிதம்,வானசாஸ்திரம்வைத்தியம் முதலிய பல கலைகளிலும் கல்லூரிகள் இருந்தன. நாளந்தா சர்வகலாசாலையில் நூற்றுக்குமேற்பட்ட வகுப்புகளில் வேதாந்தம், மதவிசாரம் முதலியவற்றில் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் காஞ்சி, தக்ஷீலம், சாரநாத், காசி முதலிய இடங்களிலும் சர்வகலாசாலைகள் இருந்தன.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ஹீவான் சுவாங் இவற்றை மிக அழகாக வர்ணித்திருக்கின்றார். "இவை ஆச்சரியமளிக்கும் மோகன வாசங்கள் சித்தரிக்கப்பட்ட தூண்களாலமைந்த விசாலமான கூடங்கள். அழகிய வர்ணந்தீட்டப்பட்ட மாடங்கள். சுற்றிலும் நீலவானில் நக்ஷத்திரங்கள் சிதறுண்டு கிடப்பது போல செந்தாமரை மலர்கள் செறிந்த பளிங்கன்ன நீர் பரப்பையுடைய தடாகங்கள்" எனக் கூறியுள்ளார். இயற்கை தேவியே கவிகளைச் சிருஷ்டிப்பவள். அவள் சகலாபரண அலங்கிருதையாய் கலைமகளோடு ஒன்றாய் வீற்றிருந்தாள் எனக் கூறின் மிகையாகாது. இன்று பெருமைபடுத்திக் கூறப்படும் அமெரிக்க, சிங்காரக் கட்டடங்கள் தோட்டங்கள் நிறைந்த கூட்டுக் கல்வி ஸ்தாபனங்கள்கூட இவற்றின் முன் தலைகுனிய வேண்டும்.

ஹாரூன் அல்ராஷீதும் காலிப்மாமூனும் பல கல்லூரிகள் ஸ்தாபிக்க முயன்றார்கள். சிரியாவிலிருந்த மிஷனரிகளையும் காஷ்மீரத்திலிருந்த ஹிந்து பண்டிதர்களையும் வரவழைத்து கிரீக் சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளிலுள்ள சிறந்த நூல்களை அராபியிலும் பெர்சியனிலும் மொழிபெயர்க்கச் செய்தார்கள். இஸ்லாமிய இலக்கியம் சிகரத்தையடைந்திருந்த அக்காலத்தில் அவர்களுக்கு டமாஸ்கஸ், பாக்தாத் இஸ்பஹான் முதலிய இடங்களில்மட்டுமின்றிச் செவில் கார்டோவா, சாலமான்கா முதலிய பட்டணங்களிலும் சர்வகலாசாலைகள் இருந்தன. ஆனால் இந்தச் சர்வ கலாசாலைகளில் பெண்மக்கள் பயில அனுமதியில்லையென்றும் மாதர் கல்வியே வளரவில்லையென்றும் ஆராய்ச்சியினின்றும் அறிகிறோம்.

மேனாட்டினருக்குள்ளே இத்தாலியர் தாம் முதல்முதல் மாதர் கல்வியின் அவசியத்தை உணர்ந்தவர்கள். பதினோராம் நூற்றாண்டில் ஆப்பிரிக்கா தேசத்து கான்ஸ்டண்டைன் சாலர்னோவில் வைத்திய சாஸ்திரத்தில் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியபொழுது நங்கையர் பலர் குழுமியிருந்தனர் என்வறிகிறோம். சாலர்னோதான் முதன் முதல் மேனாட்டில் சர்வகலாசாலைகளுக்கு விதை போட்டது. கீழ்நாடுகளின் கலைப் பெருக்கமே அதற்கு உயிரளித்தது.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது நாளந்தா சர்வகலாசாலை ஏற்பட்டுச் சுமார் 1200 ஆண்டுகளுக்குப் பின்னர் பாரிஸ் சர்வகலாசாலை காணப்பட்டது. பின்னர் ஏற்பட்ட ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் மற்றும் பல ஐரோப்பிய சர்வ கலாசாலைகள் யாவற்றுக்கும் இதுவே உதாரணமாகத் திகழ்ந்தது. ஆனால், அவை பண்டைய இந்திய சர்வகலாசாலைகளினின்றும் பெரும்பாலும் மாறுபட்டிருந்தன.

நாளந்தாவின் சம்பிரதாயமே வேறு. 700 வருஷங்களாக ஆண்டு கல்வி பயின்று சென்ற மாணவர்களிடையே ஒரு குற்றம்கூட ஏற்படவில்லை. மாசற்றுத் திகழ்ந்து வந்தார்கள். தனவந்தர்கள் மக்களன்றி, ஏழைக் குடியானவர்களின் மக்கள், தொழிலாளிகள், முரட்டு சுபாவமுள்ள மத்திய ஆசியமக்கள்கூடப் படித்து வந்தார்கள். கட்டுப்பாடும் ஒழுக்கமும் போற்றற்குரியதாயிருந்தது. ஆனால், மேனாடுகளில் அங்ஙனமிருக்கவில்லை. லத்தினில் சர்வகலாசாலையென்றால் கார்ப்பொரேஷன் என்று பொருள். அவை சுயநலங்களைப் பாதுகாக்கும் சிறு குழாங்களாகவே விளங்கின. 'கில்ட்' எனக் கூறப்படும் சிறு சங்கங்களாகவேயிருந்தன. ஸெர்வெண்டிஸ் கூறுவதுபோல் மாணவர்கள் கட்டுக்கடங்காது இச்சைப் பிரகாரம் திரிந்து வந்தார்கள்.

பரீக்ஷைகள் கிடையா. கவலையில்லை. முக்காலும் வெளிநாட்டினரேயிருந்துவந்தார்கள். மரியாதையைக் காப்பாற்ற வேண்டிய முறைமையில்லை. கண்ணியமே



மன்னர் முடிசூட்டு விழாவின்போது உபயோகிப்பதற்காக லண்டனுக்குப் படத்தில் காணப்படும் பெட்டிகளில் மாம்பழங்கள் அனுப்பப்பட்டன.

கிடையாது. குடியிலும், விலைமாதரோடுகளியாட்டங்களிலும், குஸ்தி, முதலியவற்றிலுமே காலத்தை வீணாக்கி வந்தார்கள். இவர்களிடத்து மடந்தையர்க்கு மட்டற்ற அச்சம். நேருக்கு நேர் பார்க்கவும் அஞ்சினார்கள். இன்னிலையில் ஒன்றாகவிருந்து கல்வி கற்பதெங்கனம்? மாதர் கல்வியையே மறந்துவிட்டார்கள்.

நிற்க, ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையைக் கவனிப்பாம். அதன் சரித்திரம் அறியாத விஷயமல்ல. ரசாயன சாஸ்திரியான பேகன் சிறையிலடைபட்டதும், மதத்தைச் சீர்திருத்த முயன்ற வைக்லிப் தூக்கிலிடப்பட்டதும் லாடிமர் கழுவிலேற்றப்பட்டதும் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை பிராடஸ்டண்ட் அதிருப்தியாளரும் கத்தோலிக்கரும் கல்விகற்க அனுமதிக்கப்படாது தவித்ததும் சமீபகாலத்தில்கூட அபேதவாதிகள் மீது இடப்பட்டுள்ள தடைகளும் இதன் பிற்போக்குத் தன்மையைப் பட்டவர்த்தனமாகக் காண்பிக்கின்றன. பெண் கல்விக்கு இங்கு இடமேது? திட்டமாக இல்லை.

கேம்பிரிட்ஜ் இதற்குச் சமமானதாகவேயிருந்தது. “மதபோதகர்களின் தீய ஆதிக்கத்தில் ஆக்ஸ்போர்டத்தனை மாட்டிக் கொள்ளவில்லை என ஜிப்பன் என்னும் பேராசிரியர் கூறுகிறார். இவ்விரு கலாசாலைகளும் மதபோதகர்கள் கையில் மடங்கள்போல விருந்து வந்தன. கல்வி பரிபாலன போர்டார் என்ற பெயரால் பணத்தை ஏப்பமிட்டு வந்தார்கள். கலையின் பிரகாசமே இல்லை. “ஆனால் பெரிய பண்டிதர்களும், வித்வான்களும் சரியான காலத்துக்கு வநது பொழுது போம்வரை நவீனங்களைப் படித்துவிட்டுச் சென்று கொண்டிருந்தார்கள்” என வேடிக்கையாகக் கூறப்படுகிறது.

இத்தகைய மந்தமான காலத்தில்தான் லண்டனில் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. இதனை பிராகாம் பிரபு, ஜெர்மி பெந்தாம், டேவிட் ஹ்யூம்முதலிய பெரியார்கள் கண்டார்கள். ஆரம்பத்திலிருந்தே ஆண் பெண் இருபாலரும் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டார்கள். காலத்திற்கேற்ப புதிய முறைகள் கையாளப்பட்டன. உலகின் பல பாகங்களிலிருந்து ஜாதி மத பேதமின்றிப் பல மாணவர்கள் வந்து கூடினார்கள். இன்றும் அது சர்வதேச கூட்டுறவின் சின்னமாக விளங்குகிறது. கூட்டுக் கல்வி சிறப்பாக நடைபெறத் தொடங்கியது. பின்னால் ஏற்பட்ட சர்வகலாசாலைகள் பலவும் இதனையே உதாரணமாகக் கொண்டன. மாதர்களுக்கும் படிப்பு பட்டம் முதலியன உண்டு.

பெண் கல்வி மாதர் விடுதலை இயக்கத்திற்கு அங்குரார்ப்பணமாயது. பெண் கல்வியென்னும் பெரும் புயல் முன்னர் ஆக்ஸ்போர்ட் தலை வணங்கியது. ஆனால், கேம்பிரிட்ஜ் புராதன சம்பிரதாயத்தைக் கைவிடவில்லை. பின்னால் 1880-82-ல் ஏற்பட்ட சட்டங்களால் கலை விருத்திக்குப் பெருத்த உற்சாகமும் உதவியும் ஏற்பட்டது.

இந்த வியாசம் முழுவதும் இந்தியாவையும் இங்கிலாந்தையும் பொருத்தே வரைந்துள்ளேன். நான் கூட்டுக்கல்வி முறையை விரும்புகிறவன். ஆனால் இருப்பிடங்களமைக்கப்பட்ட கல்லூரிகளை விரும்பவில்லை. இருப்பிடமும் கூட்டுக்கல்வியும் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்றவை. இக்காலத்துக்கு இரண்டும் சேர ஏற்றதல்ல.

கூட்டுக் கல்வியின் தாரதாரம் நன்மை தீமைகள் பெரியார்களால் நிச்சயிக்கப்பட வேண்டியதொரு பிரச்னை. எனது கொள்கைக்கு உடன்படினும் படாவிடினும் எனது ஒரு தலையான தீர்மானம் இதுவே. மணிமேகலைபோன்ற வனிதாரத்தினங்கள் கலைபயில் கழகங்களை அலங்கரித்து ஆண்மக்களோடு ஒன்றாய் கல்வி கற்றுக் கலைக்கே இனிமையும் பிரகாசமும் அளித்தல் வேண்டும். எல்லாத்துறையினும் முன்னேறிவரும் நம் சகோதரிகள் கலைமகள் சன்னிதானத்தில் சம உரிமையுடன் நின்று பாமாலை சூட்டவேண்டுமென்பது : எனது அவா! புதுமைப் பெண்மை நமக்குப் புதுமையன்று. தமிழ்நாடு ஆண் புலவரோடு நல்லிசை மெல்லியலார் பலரை ஒன்றாக அணிந்திருந்தது.

“தாதரென்ற நிலமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகக் கருதிப் பெண்ணறத்தினை யாண்மக்கள் வீரம் பேணுமாயின், வையம் புதுமைபுற்று யாவரும் அமரராய்த் திகழ்வது திண்ணம்.”

“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்.

“திமிர்ந்த ஞானச் செருக்கும்” கொண்டு அறந்திறம்பாது உலகில் பொன்றாப் புகழடைந்திலங்கிய ஔவை போன்ற கவியரசிகள் எத்தனைப் பேர் தோன்றுவரோ!


**சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்**

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பெல் பாகெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனும்

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.






ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.



ஸ்தாபிதம் 1910

5 வருஷ உத்திரவாதம். 800 ரூபா மதிப்புள்ளது.

**22 காரட் ரோல்டு கோல்டு தங்க ஒட்டியாணங்கள்**



விலைகள் சரசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பெனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினால் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியக்கூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ. 6-8--0; டை சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ. 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 3-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ 2-8-0; கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ. 2-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ. 1-8-0; கழுத்துச் செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0; கல்மாலை ரூ. 3-0-0. டாலருடன் ரூ. 3-8-0. வி. பி. சார்ஜ் வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனாபஜார்ரோடு, மதராஸ்.



கொலைனா - கொலைனாக்ஸ் - கொலைசெல்ப்

**கொலைனோஸ்**

வெள்ளை, வெட்டைக்கு

பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், புந்தர் தெரு, மதராஸ்

201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)





ஸ்தாபிதம் 1885.

ஐகோர்ட் ஜட்ஜ்களாலும் ஆபிஸர்களாலும் ஜமீந்தார்களாலும் உயர்தர உத்தியோகஸ்தர்களாலும் பிரபல தனவைசியர்களாலும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று கவர்ன்மெண்டு 26 ஜில்லாக்களுக்கும் போர்டு மூலமாய் சப்ளை செய்து கொண்டு வரப்பட்ட உறுதியான இரும்புப்பெட்டிகளும் நயமான இரும்பு பீரோக்களும் எங்களிடம் சரஸமான விலைக்குக் கிடைக்கும்



**பழ. மு. முத்தய்யா செட்டியார் & ஸன்ஸ்,**

இரும்புப் பெட்டி வியாபாரம்,

7, திருவொற்றியூர் ஐரோடு, பழைய வண்ணாரபேட்டை, மதராஸ்.

பிராஞ்சு ஆபீஸ்,—1/135. பிராட்வே, மதராஸ்.




## குமிழ் செருப்பு

(காசினி எழுதியது.)

* * * 'குமிழ் செருப்புகள் என்று ஒரு தினுசுச் செருப்புகள் விற்கிறதாமே? இவைகள் அதிக விலையும் இல்லை; இவைகளைப் போட்டுக்கொள்ளுவதினுல் சுமாருக்கு ஒரு அங்குல உயரம் அதிகமாகக் காணலாம் என்று சொல்லுகிருளே? இது போட்டுக்கொள்ளுவதற்கும் சௌகரியமாக இருக்குமாமே? இதன் விலை, விவரங்கள் எல்லாம் விஸ்தாரமாக எழுது' என்று நீ கேட்டிருக்கிருய்.

நான் முன்பு ஒரு தடவை இந்தச் செருப்புகளைப் பற்றி உனக்கு எழுதிய ஞாபகமாக இருக்கிறது. இந்தச் செருப்புகளின் விலை இரண்டரை ரூபாய்களில் இருந்து ஆறு, எழு ரூபாய்கள் வரையில் ரகத்திற்குத் தக்கபடி இருக்கிறது. இந்தச் செருப்புகள் தான் இப்பொழுது நாகூக்கான மிதி அடியாகக் கருதப்படுகின்றன. செருப்புகளுக்கு அதிக உயரமில்லாத குமிழ்கள் வைத்துக் காலில் சௌகரியமாக நிற்கும்படிக்கு வார்கள் வைத்துத் தைத்திருக்கும். செருப்பைப் போட்டுக்கொண்டிருக்கும்பொழுது குமிழ் இருப்பதனுல், ஆட்கள் சற்று உயரமாகவே காட்டுவார்கள். உனக்கு இந்த செருப்புச் சரிப்படும் என்று எனக்குத் தோன்றவில்லை. காலைவிட்டுச் செருப்பை எப்பொழுதும் கழற்ருமல் போட்டுக்கொள்ளுபவர்களுக்கே இது சரி.

### பட்டுப் புடவை

குறைந்த விலையில் பல அழகிய தினுசுகளில் சுதேசிப் புடவைகள் வந்திருக்கின்றன. அன்று ஒரு புடவை பார்த்தேன்; மிகவும் நேர்த்தியாக இருந்தது. புடவையின் விலை பதின்மூன்று ரூபாய்கள் தான்; புடவையின் நீளமும் ஆறுகஜம் தான். வெள்ளைப்பட்டில், நாலு விரல் அகலத்திற்கு ஆரஞ்சு நிறத்தில் கரை போட்டிருந்தது. புடவையின் நிறம் நல்ல வெள்ளையாக இருக்காமல், சற்றுப் பழுப்பு வர்ணமாக இருந்தது. கரை ஆரஞ்சு நிறமாக இருந்தது என்று சொன்னேன், இல்லையா? இதில் நெருக்கமாக வெள்ளைப் புள்ளிகள் போட்டிருந்தது. அதாவது கறுப்புப் புடவையில், வெள்ளைச் சுங்கடி போடுவதில்லையா, அப்படியே போட்டிருந்தது. உடலில், ஆங்காங்கே ஆரஞ்சு நிறச் சுங்கடிகளினுல், பெரிய, பெரிய 'டைமண்ட்' மாதிரியில் போட்டிருந்தது. இந்தச் சதுரங்கள்தான், அந்தப் புடவையை ஒருவித அலாதிச் சோபையுடன் விளங்கும்படிச் செய்தது. 'டைமண்ட்' சதுரங்கள், ஆரஞ்சு நிறச் சுங்கடி முனை வட்டங்களையும், ஒன்றுடன் ஒன்று பெரிய, பெரிய ஆரஞ்சு வர்ணப் பொட்டுகளினுல், அதாவது சுங்கடிகளினுல், பிணைத்திருந்தது. சதுரத்தில் உள்புறம் எல்லாம் சிறிய ஆரஞ்சுப் புள்ளிகளினுல் நிறப்பி இருந்தது. இதற்கு ஏற்றுப்போல், ஆரஞ்சு நிறத்தில் வெள்ளைச் சுங்கடிகள், போட்ட, சாண் அகலத் தலைப்பு மிகவும் நேர்த்தியாக இருந்தது. அதுவும், 'டைமண்ட்'—சதுரத்தின் நாலு மூலைகளிலும், நடுவிலும் வைக்கப்பட்டிருந்த பச்சை நிறப்பொட்டு, எவ்வளவோ நன்ருக இருந்



ஹரிஜன் பஸ்தியில் மகாத்மா தங்கியிருந்தவிடத்தில் அவரது பேத்தி ஸ்ரீமதி மனுவுக்கும், ஸ்ரீமான் சுரேந்திராவுக்கும் சென்ற 19-ந் தேதி விவாகம் நடைபெற்றது.

களினுல் போட்டிருந்தது. சதுரத்தின் நாலு மூலைகளுக்கு நாலு பெரிய வட்டங்கள். இந்த வட்டங்கள், சிறிய சிறிய, சுங்கடிகளினுல் போட்டிருந்தன. சதுரத்தின் நடுவிலும் இவ்வித வட்டம் ஒன்று. இந்த ஐந்து வட்டங்களின் நடுவிலும் பச்சை நிறத்தில் ஒரு சிறிய புள்ளி வைத்திருந்தது. இதிலிருந்து, கிரணங்களின்போல் ஐந்து மெல்லிய ஆரஞ்சு நிறக்கோடுகள் புறப்பட்டு வட்டத்தில் சுங்கடிகளுடன் கலந்திருந்தது. நாலுதது. புடவையின் விலை என்னமோ பதின்மூன்றுரூபாய்கள் தான். ஆனுல், இந்தப் புடவை பார்ப்பதற்கு எவ்வளவு நாகூக்காக இருந்ததென்ருல், இதைக் குழந்தைக்குச் சட்டைத்துணி வாங்கப்போயிருந்த இடத்தில் பார்த்த லேடி சின்னையாவின் மருமகள், சட்டைக்குத் துணி வாங்காமல், புடவையை வாங்கிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தாள். நான் முதலில் எழுதின மாதிரியில், இப்பொழுது மலிவான விலைக்கு இவ்வித சுதேசிப் பட்டுப் புடவைகள் அழகிய தினுசுகளில் கிடைக்கின்றன.

### புட்டாப் புடவை

புடவை என்றதும் நினைவு வருகிறது. போன வாரம்




**சருமச் சுத்திகரிப்பு எனக்கு விரைவில் முடிவதன் ரகஸியம்**

...டாகெட் & ராம்ஸ்டெல்

சிறந்த சுத்திகரிப்புத் தைலம்

விரைவிலும், பூரணமாகவும் சருமத்தி லுள்ள அசுத்தங்களைப் போக்கக்கூடிய திரவ ரூபமான சரக்கு வேண்டுமென கோரிவந்த ஸ்திரீகளுக்கு இதோ அது கிடைத்திருக்கிறது. டாகெட் & ராம்ஸ் டெல்லின் மேலான சுத்திகரிப்புத் தைலம் சருமத் துவாரங்களின் வழியே ஊடுருவிச் சென்று அசுத்தங்களை அகற்றுகிறது. சருமத்திற்கு மருதுவத் தன்மை ஏற்படுகிறது. டாகெட் & ராம்ஸ் டெல் சுத்திகரிப்பு தைலம் முக்கியமாக பிரயாணங்களுக்கு ஏற்றது அல்லது அவசரத்திற்குத் தகுந்தது. இந் நவீன சரும அழகு முறையைப் பரீட்சியுங்கள்.




D 58



சென்னை அட்வகேட் ஸ்ரீமான் ஆர். திருமலை தாதாச்சாரியார் குமாரி ஸ்ரீமதி ராஜலக்ஷ்மிக்கும் கரூர், மிராசுதார் ஸ்ரீமான் எ. கிருஷ்ணசாமி அய்யங்கார் குமாரன ஸ்ரீனிவாஸனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

லேடி சுந்தராசாரி தன் அண்ணா பெண்ணுக்கு ஒரு புடவை வாங்கினாள். என்னையும் புடவைக் கடைக்குத் தன்னுடன் கூட வரும்படிக் கூப்பிட்டாள். 'என் மருமாள் நாளைக்கு ஊருக்குப் போக வேண்டும் என்கிறாள். அவள் கலியாணமான பின், இப்பொழுதுதான் அத்தை ஆம் என்று வந்திருக்கிறாள். நானும் மூனு நாளகளாக அவளுக்கு என்ன 'பிரஸென்ட்' வாங்கலாம் என்று யோசித்துப் பார்த்தாய்விட்டது. ஏதாவது முப்பது, நாற்பது ரூபாய்களுக்குள் வாங்கலாம் என்று எண்ணுகிறேன். நல்ல புடவையாக ஒன்று வாங்க உத்தேசிக்கிறேன். வேறு ஒன்றும் சரியான படித் தோன்றவில்லை. நீங்களும் கூட வந்து நல்லதாக ஒன்று 'சூஸ்' பண்ணுங்கள்' என்றாள்.

கடை கடையாகப் போனோம். புடவை தினுசுகள் எத்தனையோ இருந்தன. இதற்கு ஒரு குறைச்சல் இல்லாவிட்டாலும், லேடி சுந்தராசாரிக்கு எதுவும் மனசுக்குப் பிடிக்கவில்லை. கடைசியில், எனக்கு இவளுடைய மருமாள் தனக்குப் புட்டாப் போட்ட புடவைகள் எதுவுமே இல்லை என்று சொன்னது நினைவு வந்தது. 'புட்டாப் போட்ட புடவை' ஒன்று வாங்குங்கோளேன். இப்பொழுது தான் நக்ஷத்திரம் மாதிரியில் சிறிய புட்டாக்கள் போட்ட புடவைகள்தான் பல மோஸ்தர்களில் கிடைக்கிறதே? இதைக் கட்டிக் கொள்ளுவதும் பாஷனைத்தானே இருக்கிறது?' என்றேன்.

'விலை?' என்றாள் லேடி சுந்தராசாரி. 'விலை எல்லாம் உங்கள் இஷ்டத்திற்குள் தான் இருக்கும், பாருங்கள்' என்றேன்.

முப்பத்தி ஐந்து ரூபாய்கள் என்று ஒரு புடவை வாங்கினாள். புடவை ஒரு தினுசு சாம்பல் நிறமாக இருந்தது. விபூதி நிறம் என்றால் பொருந்தும் என்று எண்ணுகிறேன். உடலில் சிறிய சரிகை நக்ஷத்திரங்கள், அதிக நெருக்கமாக இல்லாமலும், அதிக தூர தூரமாக இல்லாமலும் போட்டிருந்தது. கரைக்கு நாலு விரல் அகலத்திற்குச் சரிகைப் பூ வேலை செய்திருந்தது. தலைப்பிற்கும் இவ்விதம் சுமாருக்கு அரை முழம் அகலத்திற்கு சரிகை வேலை செய்திருந்தது. ஆரஞ்சு, நீலம், பச்சை, ஷாம்பேன் முதலிய பல வர்ணங்களில் முப்பத்தி-நான்கில் இருந்து ஐம்பது ரூபாய்களுக்குள் இவ்விதப் புடவைகளில் எத்தனையோ தினுசுகள் இருந்தன. லேடி சுந்தராசாரி சொன்ன மாதிரியில், 'அப்படியே அள்ளிக் கொண்டு வந்துவிட மாட்டோமா'? என்று இருந்தது. ஆனால் எல்லாம் ஆறு கஜம் புடவைகள் தான். நாசூக்காக உபயோகிப்பவர்கள் இடத்தில் நன்றாக உழைக்கவும் செய்யும். பட்டு மிகவும் நைசாக இல்லாவிட்டாலும், மொட, மொட வென்று இல்லாமல், வழவழப்பாகவும், உறுதியாகவுமே இருந்தது. நீர் சலவை நன்றாகத் தாங்கக் கூடியது. மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

* * * *


GRATIs & POST FREE!

1. POCKET CALENDAR, 1937.
2. THE ART OF PERFUMERY.
3. HOW TO ENJOY MARRIED LIFE.

Kindly apply at once:

S. PAUL & Co., Dept., S. W.

4, Hospital St. Dharamtola, Calcutta.





கூந்தல் மட்டுமெல்லாமல், அழகிய சுருண்ட முன் நெற்றி மயிரையும், காதோரங்களிலும், புறங்கழுத்திலுமுள்ள ஸூக்ஷ்மமான கேசராசிகளையும் வளரச் செய்வதால் கேசவர்த்தினி, மனம் கவரும் ஸௌந்தர்யத்தை மாதர் முகத்துக்குத் தருகிறது. கூந்தல் அழகுக்கும் முக அழகுக்கும் ஒருங்கே காரணமாவது

**கேசவர்த்தினி**

ஒன்றே.

மாத உபயோகத்துக்கும் போதமான புட்டி விலை அணா 12.

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்:— தென் இந்திய ரஸாயன சாலை.

மயிலாப்பூர், சென்னை.



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

**கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்**

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.



ஆராய்ச்சி பூர்வமான

**நவீன மருந்துகள்**

மேத்தாஸ் ஜுர மிக்சர்—8 அணா. ஆயிரக்கணக்கானவர்கள் நற்சாட்சி தந்திருக்கின்றனர்; பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆரோக்கிய ஐச்வர்யத்தைப் பெற்று வாழ்கின்றனர்.

**கே. எஸ். மேத்தா & கம்பனி,**

பிரபல மருந்து வியாபாரிகள்,

234, சைனா பஜார், மதராஸ்.



உலகப் பிரசித்தி பெற்ற

ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்

நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத் தூளை

உபயோகியுங்கள்

TRADE MARK

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்: ஆர். முகம் அண்டு கம்பேனி, நெ. 5, ஓல்டு ஜெயில் தெரு, மதராஸ்.



நஞ்சன்கூடு பல்பொடி ப்பாக்டெரியின்

**கூடஸாயில்**

சிறந்த ஸ்நானத் தைலம்

அணா 3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ். ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்)



**ரஞ்சிதமான துணிமணிகள்**

எம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. எல்லாம் மனதிற்கு உகந்த ரகங்கள்; வந்து பாருங்கள்; வேண்டியதை மகிழ்வுடன் தெரிந்தெடுங்கள்

**என். வி. பாலுசாமி ஐயர் & ஸன்,**

—மூலைக் கடை—

நைனியப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

**அதிசய உண்மைக் கதைகள்**

# உத்தம ஊழியன்

(ஸ்ரீமான். எஸ். ரங்கராஜ ஐயங்கார், எம். ஏ., பி. எல்.)

பிரான்ஸ் தேச சரித்திரத்தில் பரிச்சயமுள்ளவர்கள் ஸல்பிப் பிரபுவை அறிவார்கள். சீர்கேடாயிருந்த அரசாங்க இலாகாவையும் பொக்கிஷ இலாகாவையும் திருத்தி நல்ல நிலைக்குக் கொண்டுவந்த அம் மந்திரியின் சேவையைப் பிரெஞ்சு மன்னன் பெரிதும் பாராட்டினான். அவனுக்கு ஏராளமான நிலங்களும், பொருள்களும் அரசனால் பரிசாக வழங்கப்பட்டன. அவற்றில் பெரும்பான்மை அவன் மக்களுக்குக் கிடைத்தன. எனினும் அவன் தருமத்தை மறக்கவில்லை. அனாதைப் பிள்ளைகளின் சம்ரக்ஷணைக்காக அவனால் ஒரு நிதி ஒதுக்கிவைக்கப்பட்டது.

பல ஆண்டுகள் கடந்தன. ஸல்பியின் மக்கள் தலைமுறை தலைமுறையாய் அவனது ஸொத்துக்களை அனுபவித்து வந்தனர். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல மந்திரியால் சம்பாதிக்கப்பட்ட ஏராளமான ஸொத்துக்கள் குடும்பத்தை விட்டு நழுவலாயின. இதற்குக் காரணங்கள் பல. மந்திரியின் சந்ததியாருக்குத் தங்கள் ஸ்திதிகளைப் பரிபாலிக்கத் திறமையில்லை. கடனின்றிக் குடித்தனம் செய்ய அவர்களுக்கு வல்லமையில்லை. செலவுகளைக் குறைக்கவும் வரும்படிகளை அதிகரிக்கவும் அவர்களுக்குத் தெரியவில்லை.

பல தலைமுறைகளுக்குப் பிறகு ஸல்பியின் குடும்பம் ஆண் ஸந்ததியற்று விட்டது. அவனது ஆண் சந்ததியின் கடைசி வார்சான மாக்ஸிமிலியன் என்ற பெண் ஆபஸ்பெயின் என்ற பிரபுவை மணஞ் செய்துகொண்டாள். கடனும் செலவாலும் குன்றிய அவளது ஸ்திதிகளை அவளது வார்ஸுகள் அனுபவிக்கலாயினர்.

ஆண்டு செல்லச் செல்ல நிலைமை சீர்கேடுற்றதேயன்றி வேறல்ல. முடிவில் கடன்காரர்களுக்குப் பதில் சொல்ல முடியாத ஆபஸ்பெயின் பிரபு ஸல்பியின் அழகிய குடும்ப மாளிகையையும் அதைச் சுற்றியுள்ள நிலங்களையும் விற்றுவிட்டான். அவசியமான கடன்களை அடைத்தபின் அவன் மிகுதியுள்ள பணத்தைக் கொண்டு தனக்கும் தன் மகனுக்கும் தன்னிடம் பல வருடங்களாக உழைத்த அலெக்ஸாண்டர் மார்டின் என்ற வேலைக்காரனுக்கும் உபகாரச் சம்பளங்கள் வழங்கினான். சில வருடங்கள் கழித்து ஆபஸ் பெயின் பிரபு இறந்துபோனான்.

மார்டின் என்பவன் உத்தமமான வேலைக்காரன். ஆபஸ்பெயின் பிரபுவின் உப்பை உண்டவன். பிரபுவின் செலவால் அவன் தச்சுவேலை கற்றுக்கொண்டவன். ஆனால் அவன் தொழில் செய்யவில்லை. பிரபுவுடன் அவன் 35 வருடங்களாய் வேலைக்காரனாய் இருந்தான். அவனுடைய ஊழியத்தையும் விசுவாசத்தையும் மெச்சியே பிரபு அவனுக்கு ஒரு உபகாரச் சம்பளத்தை வைத்துவிட்டு இறந்தார்.

ஆனால் பிரபுவின் கடன்காரர்கள் சும்மா இருக்கவில்லை. அவர் இறந்தபின் அவர்கள் அவனால் வைக்கப்பட்ட உபகாரச் சம்பளங்களைத் தங்கள்கடன்களுக்காகக் கைப்பற்றலாயினர். பிரபு தன் மகனுக்கும் தன் வேலைக்காரனான மார்டினுக்கும் வைத்த உபகாரச் சம்பளங்கள் அவர்களது வசம் வந்துவிட்டன.




மன்னர்பிரான் 6-வது ஜார்ஜ் உருவத்துடன் முதன் முதலாக உபயோகத்திற்கு வந்திருக்கும் ஒரு பென்னி நாணயங்கள்.

என்ன செய்வான் மார்டின்? அவனது உழைப்பின் பலனை விதி அவனை அனுபவிக்க விடவில்லை. எனினும் அவன் வாய் திறக்கவில்லை. தன் குடும்பத்துடன் அவன் தன் கிராமத்திற்குச் சென்றான். தச்சுவேலை செய்து அன்றாடம் கிடைப்பதைக்கொண்டு ஜீவனம் நடத்தி வந்தான். சிறிய குடிசை, எளிய உணவு, நாடோறும் உழைப்பு, சொல்பக் கூலி—இவையே அவனது தின வாழ்க்கையின் சின்னங்கள்.

மாதங்கள் பல சென்றன. ஒருநாள்—1830-ம் வருடம் ஜூன் மாதம் 6-ந்தேதி காலை மார்டின் தனது குடிசையில் வேலை செய்துகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு கனவான் தனது மூன்று குழந்தைகளுடன் அவனுக்குக் காக்ஷியளித்தார்.

அக்கனவான் வேறு யாருமில்லை. மார்டினது பழைய யஜமானனது குமாரனே. கடன்காரர்கள் அவனது சொத்துக்களையும் கைப்பற்றிக்கொண்டனர். அவனுக்கு ஜீவனம் நடத்த வழி தெரியவில்லை. இந்த லக்ஷணத்தில் இரண்டு சிறு பெண்களையும் ஒரு ஆண் குழந்தையையும் விட்டுவிட்டு அவன் மனைவி இறந்துவிட்டாள்.

அன்னியநாடு செல்ல விரும்பிய பிரபுவுக்குக் குழந்தைகளை என்ன செய்வது என்பது தெரியவில்லை. பெண்கள் இருவருக்கும் முறையே ஐந்து, நான்கு பிராயங்கள்தான் ஆயின. கடைசிக் குழந்தை னாயிக்கு ஒரு வயது நிரம்பவில்லை. அவற்றைத் தன்னுடன் எப்படி அழைத்துச் சென்று பராமரிப்பது என்று பிரபு தயங்கினான்.

முடிவில் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. "அப்படித்தான் செய்ய வேண்டும். வேறு வழியில்லை" என்று தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டான். தன் மக்களுடன் மார்டினது குடிசைக்கு வந்து சேர்ந்தான்.

தனது சின்ன யஜமானனையும் குழந்தைகளையும் பொங்கிய அன்புடன் வரவேற்றான் மார்டின். "இவ்வேழை வேலைக்காரனது குடிசை உங்கள் வரவால் மிகவும் பாக்கியம் பெற்றது" என்று கூறி அவன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்.

பிரபு, "மார்டின் நான் ஒரு முக்கியமான விஷயமாய் உன்னிடம் வந்திருக்கிறேன். நான் ஒரு முக்கியமான அலுவலாய் அயல்நாடு போக வேண்டியிருக்கிறது. தாயற்ற என் குழந்தைகளை உன்னிடம் விட்டுவிட்டுப் போகலாம் என்று உத்தேசிக்கிறேன். எனக்கு நம்பிக்கையுள்ளவன் வேறுயாருமில்லை. உன் அபிப்பிராயம் என்ன?" என்று வினவினான்.

மார்டின் சற்றும் தயங்கவில்லை. "தங்கள் சித்தம் என் பாக்கியம். நானும் என் குடும்பத்தாரும் தங்கள் அன்னத்தை உண்டவர்கள். தங்கள் குழந்தைகளை நாங்கள் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பராமரிக்கிறோம். தாங்கள் கவலையற்று பிரயாணம் செய்யலாம்" என்றான்.

பிரபு குழந்தைகளை இப்படி மார்டினிடம் ஒப்படைத்துவிட்டு மறைந்தான். அவன் திரும்பி வரமாட்டான் என்றும் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு தன்னைவிட்டு அக


## PASSEO MATRIC

பம்பாயிலிருந்து மிஸ்டர்.......... எழுதுவதாவது: "நான் மெட்ரீக் பரீக்ஷையில் தேறினேன்; இதற்கு தங்கள் "மூலிகை"யே காரணம். சீனியர் காம்பிரிட்ஜ் பரீட்சைக்காக ஒன்று அனுப்பவும்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரண், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0. 2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ. 3-8-0 3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. வியாதிகள்:—முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. பரீக்ஷைகள்:-எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-0-0.

தபால் சார்ஜ் தனி. அணா 8.

**BIJOYA LODGE, (S.W.)**

P. O. SALKIA    HOWRAH

லாது என்பதும் மார்டினுக்குத் தெரியும். எனினும் அவன் அதைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டான்.

மார்டினுக்கு மூன்று குழந்தைகள். அவர்களில் மூத்தவள் கூலி வேலை செய்து வந்தாள். மார்டின் மனைவியும் ஏதோ சம்பாதித்துப் பணம் கொண்டு வந்தாள். அவர்கள் ஸம்பாதித்த பணத்தில் பெரும்பான்மை இளம் பிரபுவையும் அவனது சகோதரிகளையும் பராமரிப்பதில் செலவாயிற்று. மார்டினும் அவன் குடும்பத்தாரும் தங்கள் குடிசையில் இருந்த குழந்தைகளின் அந்தஸ்தை மறக்கவேயில்லை. அவைகளை யஜமான ஸ்தானத்தில் வைத்து தங்களை ஊழியர்களாகவே கருதிவந்தனர். குழந்தைகளுக்குத் தனி மேஜை, தனி சாப்பாடு, தனி படுக்கை; தங்களுக்கு வேறு சாப்பாடு, வேறு படுக்கை. இப்படிக் குழந்தைகள் கூடுமானவரையில் தரித்திரத்தின் கொடுமையை அனுபவிக்காதபடி செய்தனர் மார்டினும் அவனது வீட்டாரும்.

இப்படி ஆறு வருடங்கள் சென்றன. குழந்தைகளைக் கைவிட்டுச் சென்ற பிரபு அயல் நாட்டில் இறந்துவிட்டான் என்ற தகவல் கிராமத்துக்கு எட்டியது. கீர்த்திபெற்ற மந்திரி ஸல்பிப் பிரபுவின் கடைசி வார்சுகளான மூன்று அநாதைக்குழந்தைகள் ஒருவ ஏழைத் தச்சன் வீட்டில் வளர்ந்து வரும் சங்கதி அக்கம்பக்கமெங்கும் பரவலாயிற்று. அருகாமையிலுள்ள தயாளுவான ஒரு சீமாட்டி இரண்டு பெண்களையும் தான் வளர்த்துவருவதாக ஒப்புக் கொண்டாள். மார்ட்டினது உள்ளம் பூரித்தது. "ஸல்பிப் பிரபுவின் சந்ததியாராகிய இப்பெண்கள் ஒரு உயர் கும்பத்தை அலங்கரிக்க வேண்டியவர்கள். அவர்களது அந்தஸ்தை உணர்ந்து அவர்களுக்குத் தகுந்த போஷணைசெய்ய முன்வந்த சீமாட்டியை நான் என்றும் மறக்கமாட்டேன்" என்று மார்ட்டின் அவளை வாழ்த்தினான். இரு பெண்களும்சீமாட்டியால் அன்புடன் போஷிக்கப்பட்டனர். அவர்களது பிறப்புக்குத் தகுந்த பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

அவர்களது தம்பி லூயிக்கு அப்பொழுது ஒன்பது வயதாயிற்று. அவனுக்கு வித்யாப்யாஸம் செய்யவேண்டியது அவசியமாயிற்று. அதைப் பற்றி மார்ட்டின் சிந்தனை செய்தான்.

அந்த ஸந்தர்ப்பத்தில் பையனுக்குச் சரியானபடி பொருளுதவி கிட்டியது. அவனது குடும்பத்தின் முதல்வனான ஸல்பிப் பிரபுவால் வைக்கப்பட்ட தருமநிதியிலிருந்து அவனுக்கு உபகாரச்சம்பளம் கிடைத்தது. ஸல்பியால் தன் வார்சுகளுக்குக் கொடுக்கப்பட்ட ஏராளமான சொத்துக்கள் அழிந்துவிட்டன. என்றாலும் அவனது தருமசொத்து நிலைபெற்றிருந்தபடியால் அது அவனது கடைசி சந்ததியாய் எஞ்சிய அநாதைப் பிள்ளைக்குக் கை கொடுத்து உதவியது. தருமம் தலைகாக்கும் என்னும் பழமொழிக்கு இதைவிட வேறு சிறந்த அத்தாக்ஷி என்ன வேண்டும்?

இது தவிர அக்காலத்தில் அரசு செலுத்திய மன்னன் லூயி பிலிப் என்பவனும் அந்தச் சிறுவனுக்கு உபகாரச் சம்பளம் வழங்கினான். மார்டினது ஒப்பற்ற ஊழியமும் சேவகமும் எல்லோராலும் பாராட்டப்பட்டன. அகாடமி என்ற அறிஞர் சபையால் அவனுக்கு ஒரு பரிசு அளிக்கப்பட்டது. அவ்விழாவின்பொழுது மார்டினையும் லூயியையும் நோக்கி, சபையின் தலைவர் பின் வருமாறு மொழிந்தார்:—

"மார்டின்! உன் வேலை முடிந்துவிட்டது. யோக்கியமானவர்களின் நன் மதிப்பை நீ நன்கு பெற்றிருக்கிறாய். இக்காலத்தில் மிகவும் அரிதாகக் காணப்படும் குணங்களை நீ புலப்படுத்தியிருக்கிறாய். அவை என்னவெனில் நன்றியறிதல், பக்தி, விசுவாஸம் என்பவையே. உன்னுடைய உத்தம குணத்துக்காக இந்த சபை உனக்கு 3000 பிராங்கு பரிசு அளிக்கிறது. லூயி! ஆழ்ந்த கருத்துடைய இப்பரிசளிப்பைக் கவனிக்கும் உனது இளமனத்தில் இது நன்கு பதிந்து பயனையளிக்கட்டும். வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகும் உன்னை எல்லோரும் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். உலகத்திலுள்ள பேறுகளில் முதன்மையானது தனது தேசத்தாரால் கொண்டாடப்படுபவரே என்பதை நீ அறிந்துகொள். தன்னாலே சித்திக்கக்கூடும் அப்பேற்றை—மற்றவர்களால் கவர முடியாத அப்பேற்றை—அடைய வேண்டுமென்று நீ கடவுளைப் பிரார்த்தனை செய். உத்தம ரத்தம் உன் உடம்பில் இருக்கிறது என்பதை நாளடைவில் நீ அறிந்து கொள்வாய். ஆனால் இதை மட்டும் மறக்காதே. அது என்னவெனில் மார்ட்டினுக்குச் சமமாக ஒப்பிடக்கூடும் உத்தமன் உன் முன்னோர்களில் வேண்டுமென்றால்—அவன் ஸல்பிப் பிரபுவேயன்றி வேறு யாருமல்ல. உனது பெருமை பெற்ற அம்மூதாதையின் கீர்த்திக்கு பங்கம் வராமல் நீ முன்னுக்கு வரவேண்டும். உன்னை சம்ரக்ஷித்த உத்தமனை மறக்காதே. கடவுள் உன்னைக் காப்பாராக."

---

**பத்மராஜு**
விலை ரூபா 1—8—0
சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

## உங்கள் பற்களுக்கும் ஈறுகளுக்குமான சிறந்த டூத் பேஸ்ட்

எந்தப் பல் பசையானாலும் சரி—அதன் விலை எவ்வளவானாலும் சரி, அதன் புகழ் எவ்வளவு உயர்ந்ததாயினும்சரி—"நீம் டூத் பேஸ்ட்"டைவிட வேறு எதுவும் உங்கள் பற்களைப் பத்திரமாகச் சுத்தி செய்யாது; ஈறுகளைப் பாதுகாக்காது. இவ்வளவு தூரம் நாம் புகழ்ந்து பேசுவதற்குக் காரணம் யாதெனில் "நீம் டூத் பேஸ்ட்" ஒன்றில்தான் வேப்பங்குச்சி (நீம்)யின் சத்து பூராவும் அடங்கியிருக்கிறது; நம் தேசத்தில பற்களைச் சுத்தப் படுத்தவும், பயரியாவைத் தடுக்கவும் ஈறுகளைக் கெட்டிப் படுத்தவும் வேப்பங்குச்சி உபயோகப்பட்டு வருகிறது.

இன்றே "நீம் டூத் பேஸ்ட்" டியூப் ஒன்றை வாங்கி பற்களையும் ஈறுகளையும் கவனியுங்கள்.



'Neem' TOOTH-PASTE

பவுடர் வேண்டுமானால் மார்கோப்ரில் நீம் பல் பவுடரை உபயோகிக்கவும்
கல்கத்தா கெமிக்கல்
J.N.C

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

## ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய ஸீல்களும் இருக்கிறதெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்"செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents: M. R. V AIYER & Co, 49, பந்தர் தெரு, மதராஸ்.

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!
புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூலகளைப் படித்து
ஆனந்த மடையுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) | ரூ. | 2—8—0 |
| 2. | வசனங்கள் (6-பாகங்கள்) | ,, | 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | ,, | 0—8—0 |
| 4. | பகவத்கீதை | ,, | 0—8—0 |
| 5. | கட்டுரைகள் பகுதி 1 தத்துவம் | , | 0--10--0 |
| | ,, ,, 2 மாதர் | | 0—8—0 |
| | ,, ,, 3 கலைகள் | ,, | 0—8—0 |
| | ,, ,, 4 சமுகம் | , | 0--12--0 |

**6. Bharathi and his works**
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ராவ் ஸஹஸ்ரபுத்தே என்பாரும் படித்தார். இவரிடம் வேதாந்த பாடம் படித்தபிறகு, தமக்குக் குருதக்ஷிணை சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஆவல் இருப்பதாக ஸஹஸ்ரபுத்தே தெரிவித்தார். அதற்கு இவர் தமக்குப் புருஷப்ரஜை இராததால் பணத்தில் ஆசை கிடையாது என்றும் நித்ய கர்மாவாகவும் ஸம்ஸ்காரமாகவும் ஸ்ருதிகளால் கோஷிக்கப்பட்ட ஸோமயாகததைச் செய்ய இயன்ற ஸஹாயம் புரிந்தால் அதுவே உத்தமமான குருதக்ஷிணையாகும் என்பதாகப் பதிலளித்தார். இதற்கு அந்தத் தாசில்தார் பரம சந்தோஷத்துடன் ஒப்பினூர். 1907-ல் ஸ்ரீ சச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதி ஸ்வாமிகளின் பரமானுக்ரஹத்தையும் ஸ்ரீ நாராயண ராவ் ஸஹாயத்தையும் கொண்டு தாராவாடா ஜில்லாவைச் சார்ந்த கதக் என்னுமூரில் ஸ்ரீகுடேஸ்வர ஸ்வாமி தேவாலயத்தின் ப்ராகாரத்தில் இவர் ஸோம யாகத்தை விமரிசையாக நடத்தினூர். யாகம் முடிவான பிறகு கிரமமாக அக்னிஹோத்ரம், தர்ச பூர்ணமாசம் இவைகளையும் செய்துவந்தார். யாகம் செய்த கொஞ்சமாத காலத்திற்குள்ளாக இவருக்கு ஒரு புத்திரன் பிறந்தான். இந்த சிசுவிற்கு ஒரு வயது பூர்த்தியாவதற்குள் இவரது பத்னியார் காலமானூர். ஆயினும் இவர் மீண்டும் விவாகம் செய்து கொள்ளாமல், பால்ய குடும்பத்தை எப்படியாவது சம்ரக்ஷிக்க வேண்டும் என்ற நோக்கத்தை மேற்கொண்டார்; தவிர பரலோக சாதனத்திற்கான மார்க்கத்திலும் இவர் கருத்துகொண்டு வந்தார். இதற்காகவும், லித்தி முதலிய கிரந்தங்களை வாசிக்கவும் 1911-ல் இவர் சிருங்கேரி மகா ஸன்னிதானத்தை வந்தடைந்தார். இந்த சமயத்தில் தக்ஷிண யாத்ரைகளிலிருந்து திரும்பிய ஜகத் குருக்களுக்கும் அத்வைத வித்யையை வளர்க்க வேண்டும் என்ற அபிப்பிராயம் இருந்து வந்தது. ஆனால் அவர்கள் சீக்கிரத்தில் விதேக கைவல்யத்தை யடையவே, இவருக்குப் பரம துக்கம் சம்பவித்தது. ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளுக்குப் பின்பு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளுக்குப் பட்டமளிக்கப்பட்டது. இவரும் விசேஷ பண்டிதராக விருந்தவர்; இந்த ஸ்வாமிகள் இன்றும் சிருங்கேரி பட்டத்தை அலங்கரித்து வருபவர். இவருக்கு வேதாந்த கிரந்தங்களையும் தர்க்க சாஸ்திரத்தில் மேல் கிரந்தஙகளையும் வியாஸங்கம் செய்யத்தகுதியானவர் என நம் சாஸ்திரிகள் நியமிக்கப்பட்டார். ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளுக்குப் பாடம் சொல்லிவைக்கும் பாக்யம் இவருக்கு ஏற்பட்டதினூலேயே இவருடைய பெருமையும் யோக்யதையும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. மூன்று வருஷகாலத்திற்குள் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கும் நிகரற்ற பாண்டித்யம் ஏற்பட்டுவிட்டது.

### பிருதுகள்

1915-ல் காசியில் நடந்த அகில பாரத வித்வத் மண்டலத்திற்கு ஸ்ரீ மடாதிகாரிகளால் இவர் அனுப்பப்பட்டார். அங்குள்ளவர்கள் இவரது பாண்டித்யத்தை மெச்சி இவருக்கு "வித்யாவாசஸ்பதி" என்ற பிருதத்தை அளித்தனர். இப்போது இவர் அங்குள்ள திவ்ய க்ஷேத்திரங்களுக்கும் யாத்திரை செய்தார். பிறகு சிருங்கேரியிலேயே இவர் ஆஸ்தான பண்டிதராக விருந்தார். 1916-ல் ஸ்ரீசாரதாம்பிகா ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றது. அச்சமயம் கூடிய மகா வித்வத் சபையில் "நியாயபஞ்சானன" என்ற பிருதத்தையும் இரண்டு தோடா சால்வைகளையும் கொடுத்து ஸ்ரீமஹாஸ்வாமிகள் இவரைக் கௌரவித்தார். இதே சமயம் கும்பாபிஷேகத்திற்காக வந்திருந்த மைசூர் மஹாராஜாவின் பேட்டியும் இவருக்குக் கிடைத்தது. இவரது பாண்டித்யத்தையும் குணங்களையும் மெச்சி மஹாராஜா இவரை ஆஸ்தான மகா வித்வானாக நியமித்துக்கொண்டார்.

### மஹாமஹோபாத்யாயர் பட்டம்

1915-ல் மைசூர் மஹாராஜா சம்ஸ்கிருத பாடசாலை வேதாந்த சாஸ்திர பிரதான ஆசிரியராக மஹாமஹோபாத்யாய வெள்ளூர் சுப்ரமண்ய சாஸ்திரிகள் நியமிக்கப்பட்டபோது, அவருக்குப் பதிலாக பெங்களூர் சங்கர மடத்தில் வேதாநத பிரதான உபாத்யாயராகவும் வித்யா வாசஸ்பதி சாஸ்திரிகளை ஸ்ரீ மடாதிபதிகள் நியமித்தனர். இங்கு 8 வருஷ காலம் இவர் வேதாந்த பாடம் சொல்லி வந்தார். இவரிடம் அநேகம் பிரபலஸ்தர்களும் பாஷ்யம் முதலான கிரந்தங்களைப் படிக்கலாயினர். அடிக்கடி மத சம்பந்தமாகவும் இவர் உபந்யாஸங்கள் செய்து வந்தார். இவரது உபந்யாஸங்கள் பலரையும் ஆகர்ஷித்து வந்ததாகும். ஒரு சமயம் இவர் மைசூர் பாடசாலையில் உபந்யாஸம் செய்தார்; அங்கு அப்போது அரண்மனை அதிகாரிகள் வந்திருந்தனர். ஆனந்தமுற்ற அவர்கள் இதைப் பற்றி மஹாராஜாவுக்குத் தெரிவித்தனர். மறுநாள் மஹாராஜா இவரை அரண்மனைக்கு வரவழைத்து இவரது உபந்யாஸத்தைச் சொல்லச் சொல்லிக் கேட்டுப் பரம த்ருப்தியை




### வேர்க்கூர், கோடைக்கட்டி

இவற்றிற்கு உங்கள் சருமத்தின்மீது ஜாம்-பெக் தடவுங்கள்

வெயில் கொடுமையால் எவ்வளவோ பேர்கள் எவ்வளவோ விதமாகக் கஷ்டப்படுகிறார்கள். வேர்க்கூர், கோடைக்கட்டி முதலியவற்றின் உபத்திரவம் சகிக்கமுடியாதது. ஜாம்-பெக் மூலிகை மெழுகு எல்லாச் சருமக் கோளாறுகளையும் ஒழித்துவிடும். ஜாம்-பெக் சருமத்திற்குக் குளிர்ச்சியும், உல்லாசமும், மிருதுத்தன்மையும் அளிக்கிறது. எரிச்சலை அடக்குகிறது. சருமத்திற்கு ஆரோக்கியமூட்டுகிறது. தூக்கத்திலேயே குணப்படுத்திவிடும். நமைச்சல், சொறி, சிரங்கு, வண்ணாரப்புண், இவற்றிற்கும் ஜாம்-பெக் இணையற்றது. ஒரு பெட்டியைப் பரீட்சியுங்கள். எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் கிடைக்கும்.




ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது.

# ஜாம்பெக்

Zam-Buk



அத்தர் அரசன்

## ஆட்டோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)



OTTO DILBAHAR.

சுகந்த வாசனையைத் தரும் அரிய மலர்களிலிருந்து தயாரிக்கப்படுவது. 2 அணு ஸ்டாம்பனுப்பினூல் சாம்பில் கிடைக்கும்.

இதையே உபயோகியுங்கள்.

விலை:—$\frac{1}{4}$ அவுன்ஸ் புட்டி ரூ. 1 4; 1 டிராம் புட்டி 12 அணு; வி. பி. சார்ஜ் தனி.

மொத்த ஏஜண்டுகள் :

The Anglo Indian Drug & Chemical Co BOMBAY. 2



## குமாரசஞ்சீவினி

ரிஜிஸ்டர்ட்

குழந்தைகளின்

## ஈரல்-குலை-ஜுரக்கட்டி

வியாதிகளுக்கு

நிகரற்ற குணமுடையது

வைத்தியர். அண்ணாமலை முதலியார்

வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை.

அடைந்தார். 1922-ல் தமது நவராத்திரி தர்பார் சமயத்தில் மஹாராஜா இவருக்கு "வித்யாநிதி" என்ற பிருதத்தை விலையுயர்ந்த தோடாக்கள் சால்வைகளுடன் அளித்துக் கௌரவித்தார். 1923-ல் இந்த வித்யாநிதியான சாஸ்திரிகளுக்கு இந்தியா கவர்ன்மெண்டாரால் "மஹாமஹோபாத்யாயர்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. மஹாமஹோபாத்யாய விருபாக்ஷ சாஸ்திரிகளின் கீர்த்தியும் பெருமையும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

1926-ல் மஹாமஹோபாத்யாய பஞ்சாபகேச சாஸ்திரிகள் மைசூர் மஹாராஜா சம்ஸ்கிருத பாடசாலையின் அத்வைத ப்ரதானோபாத்யாய ஸ்தானத்திலிருந்து விலகவே, இவர் அந்த ஸ்தானத்திற்கு அரண்மனை அதிகாரிகளின் நிர்ப்பந்தமான வேண்டுகோளுக்கிணங்கி, ஸ்ரீமடாதிபதிகளால் அனுப்பப்பட்டார். இங்கும் அநேக லௌகிகர்கள் இவரிடம் படித்தனர். மஹாராஜாவும் அடிக்கடி இவரை வரவழைத்து இவரிடம் விஷயங்களை விசாரிப்பது வழக்கம். 1931-ல் இவருக்கு ஆஸ்தான தர்மாதிகாரி பதவியும் அளிக்கப்பட்டது. எவ்வளவு கௌரவம் கிடைத்தபோதிலும் இப்பெரியார் கர்வத்தை அறியாமலிருந்து வந்தார்.

துரீயாஸ்ரம ஸ்வீகாரம்

மைசூர் சமஸ்தானத்தில் துங்கைபத்ரை நதிகள் கூடுமிடத்தில் கூடலி என்னுமொரு க்ஷேத்திரமிருக்கிறது. இங்கு பல காலமாக ஒரு மடம் இருந்து வருகிறது. இது சிருங்கேரி மடத்தின் கிளை மடமாகும். இங்கு அநேக மஹான்கள் இருந்துள்ளனர். இதற்கு ஆஸ்தி இருந்தபோதிலும் சுமார் 50,000 ரூபாய்கள் கடன் இருந்து வந்தது. 1932ல் கூடலி மடாதிபதிகள் மடாதிபத்யத்தை வேறு ஒருவருக்கு அளித்து தாம் ஆத்மா ராமராகவிருக்க விரும்புவதாக மஹாராஜாவிடம் தெரியப்படுத்தினார். ஆகவே அவ்வருஷம் (ஆங்கிரஸ வருஷம் ஆஷாட சுத்த தசமியன்று) நம் மஹாமஹோபாத்யாய விருபாக்ஷ சாஸ்திரிகள் மஹாராஜாவின் விருப்பத்திற்கும் கூடலிஸ்வாமியின் ஆக்ஞைக்கும் இணங்கி, கூடலி ஸ்வாமிகளிடமிருந்து ஸந்யாஸம் பெற்றார். இதுபரியந்தம் மஹாமஹோபாத்யாய வித்யா வாசஸ்பதி, வித்யாநிதி ...யாய பஞ்சானன ஆஸ்தான தர்மாதிகாரி ஆஸ்தான மகா வித்வான் என வழங்கப்பட்டுவந்த நமது சாஸ்திரிகள், ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ...த்யாதி பிருதாங்கித ஸ்ரீ ஸ்ரீ ...த்யாபிநவானுகேஸ்வர ஸ்வாமிகளாக வ்யவஹரிக்கப்பட்டார்.

அந்தியகாலம்

துரீயாஸ்ரமத்தை ஸ்வீகரித்த பின்பு இப்பெரியார் யாத்ரா மார்க்கமாகப் புறப்படலானார். ஸ்ரீ மஹாராஜாவின் விருப்பப்படி மைசூருக்கும் போய் அங்கு ஸகல மரியாதைகளுடனும் வரவேற்கப்பட்டார். இவரிடம் கீதா முதலிய கிரந்தங்களை வாசிப்பதற்காக இன்னும் சில காலம் இவரை மைசூரில் தங்கும்படி மஹாராஜா செய்தார். இவரும் மூன்று வருஷகாலம் மைசூரிலிருந்து மஹாராஜாவுக்கும் இன்னும் பலருக்கும் வேதாந்த பாடம் சொல்லிவந்தார். தவிர மஹாராஜாவின் ஸஹாயத்தினால் மடத்திற்கு ஏற்பட்ட கடனைத் தீர்த்து வைத்து அதற்கு ஆர்த்திகபலத்தை இவர் உண்டு பண்ணினார். இவருக்கு 1936-ம் வருஷாரம்பத்தில் சிறிது தேக அசௌகர்யம் ஏற்பட்டது. 1936-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 10-ம் தேதியன்று காலை இவர்கள் பாஞ்ச பௌதிகமான தேகத்தின் அபிமானத்தைத் துறந்து கைவல்யமடைந்தார். மஹாராஜா முதலாக யாவரும் இதனால் அளவற்ற துக்கமடைந்தனர். இந்தஸ்வாமிகள் சித்தியடைந்ததும் இவரது சரீரம் சகல ராஜமரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. இவர் ஞாபகார்த்தமாகவும் அனுக்ரஹ லாபத்திற்காகவும் சமாதியில் ஒரு சுந்தரமான மந்திரம், ஸ்ரீ மஹாராஜா சம்ஸ்கிருத பாடசாலையின் ஆவரணத்தில் அரண்மனைச் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. நித்ய பூஜா நைவேத்தியத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளும் அரண்மனையிலிருந்தே செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ விருபாக்ஷ சாஸ்திரிகள் தரித்ர குடும்பத்தில் பிறந்து கஷ்டப்பட்டு, வியாஸங்கம் செய்து தமது திறமையாலும் ஜன்மாந்தர பாக்யத்தினாலும் கிருதார்த்தத்தை யடைந்தவர். இவருக்குக் கர்வமே கிடையாது. 1931-ல் காசியில் நடந்த அகில பாரத வர்ணாஸ்ரம சங்க நடவடிக்கைகளிலும் இவர் கலந்துகொண்டவர். கர்மானுஷ்டானத்தில் விசேஷ சிரத்தை பூண்டவர். பிரதி ஸோமவாரமும் என்ன தொந்திரவுகள் நேர்ந்த போதிலும் ஏகாதச வார ருத்ராபிஷேகம் செய்து வந்தார். வேதாத்யயனம் செய்பவர்களிடம் இவர் ப்ரீதி கொண்டவர். கோபமில்லாமல் சகல சத்குணங்களுக்கும் இவர் இருப்பிடமாக விருந்தார். எப்பேர்ப்பட்ட கடின பாகத்தையும் இவர் எளிதில் போதிப்பார். பக்ஷபாதமின்றி விஷயங்களை எடுத்துச் சொல்லுவார். மைசூர் சமஸ்தானத்தில் பிரசித்த பண்டிதராக விருந்த ராமா சாஸ்திரிகள் எழுதிய "சத கோடி" என்கிற கிரந்தத்திற்கு இவர் "குல்யா" என்ற உரையை எழுதியுள்ளார்.


# 1000 ரூபாய் கஜானா பைகள்.

சர்க்கார் கஜானுக்களிலிருந்து நாம் பெறும் தொகைகளை வெள்ளி நாணயங்களாகப் பெற்றுக்கொள்ளும்போது, அவைகள் சர்க்கார் முத்திரை தரிக்கப்பட்ட பைகளில் கொடுக்கப்பட்டால் அவைகளை எண்ணவோ அல்லது பரிசோதித்துப் பார்க்கவோ அவசியமிராது. ஏனென்றால், எண்ணிக்கை குறையாமலும், நாணயங்கள் பழுதற்றவைகளாயுமிருப்பது நிச்சயம். அவ்வாறே ஸ்டேன்ஸ்"T. S. & Co., Ltd." முத்திரை போடப்பட்ட துணிப்பைகளில் காப்பிக்கொட்டை வாங்குவீர்களேயானால் முதல்தரமான அசல் நீலகிரிச் சரக்கையே பெறுவீர்கள். இதர சாமான்யமான காப்பிக் கொட்டையால் இந்தப்பைகள் நிறப்பப்படுவதில்லை. சாயமேற்றின காப்பியில் நாங்கள் வியாபாரம் செய்வதுமில்லை. 3, 5, 7 பவுன் பைகளில் கிடைக்கும்.

பைகளின் பேரிலுள்ள

S & Co.

என்கிற வியாபாரக் குறியையும் கவனித்து வாங்கவும். போலிச் சரக்குகளை ஒப்புக்கொள்ளாதீர்கள்.

டி. ஸ்டேன்ஸ் & கோ.,

கோயமுத்தூர்.





## தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்குக் கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது!

நாகரீகத்திற்கேற்ற நானுவிதக் கலர் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய்க் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,

77, சைனா பஜார் ரோட், மதராஸ்



## உங்கள் கூந்தலுக்கு கருமையும் மினுமினுப்பும் அளிக்கும் கூந்தல் தைலம் இதோ இருக்கிறது.

உங்கள் கூந்தல் அழகுடனிருக்கவேண்டாமா? அப்படியாயின் ப்ரிங்கால் உபயோகிக்கத் தொடங்குங்கள். கூந்தலுக்கும், தலைக்கும் விசேஷ நன்மையூட்டுவதில் பிரக்யாதி பெற்று விளங்கும் ஆயுர்வேத




முறை தயாரிப்பான கூந்தல் தைலம் இதுவே. பிரிங்கராஜ் முதலிய மூலிகைகள் வேர்களின் சாரத்தைக் கொண்டு சாஸ்திரோக்தமாகத் தயாரிக்கப்படுவது. கூந்தலுக்கும் தலைக்கும் நன்மையூட்டுவதில் இம்மூலிகைகள் சிறந்தவை. பால்யநரை, செம்பட்டை முதலியன ஏற்படக்கூடிய மருந்து தினுசுகளின் கலப்பே கிடையாது. பிரிங்கால் மேலான கூந்தல் தைலம் மட்டுமன்றி சிரசுக்குக் குளிர்ச்சியூட்டுவதில் நிகரற்றது; உச்சந்தலையிலும், உள்ளங்கை, உள்ளங்கால்களிலும் தேய்த்து ஸ்நானம் செய்தால் தேக உஷ்ணம் பூராவும் அகன்று உடல் குளிர்ந்திருக்கும்.

தைலம் நன்றாக இருக்கிறதா என்பதைப் பரீட்சிக்கவேண்டுமானால் கீழ்க்கண்டவர்களுக்கெழுதி சாம்பிள் புட்டி பெறலாம்.

கல்கத்தா கெமிக்கல் கம்பெனி, லிமிடெட்.

10, தம்பு செட்டி தெரு, மதராஸ்.

மஹாபாரதம் - அநுசாஸன பர்வம்

# உயிர் விடுவதிலேற்படும் துயரம்

## புழு-கிருஷ்ணத்வைபாயனர் சம்பாஷணை

—:[○]:—

யுதிஷ்டிரர், "உயிரை விடுவதென்பது மனிதர்களுக்குத் துயரமாகவிருக்கிறது. செல்வமிருந்தாலும் இல்லாவிட்டாலும் சுகமிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஸம்ஸாரத்தில் பிறந்து பிராணிகள் சுகமாயிருப்பது எப்படி? அதன் காரணம் என்ன?" என்று கேட்க, பீஷ்மர் பின்வருமாறு பதிலளித்தார்:—முன்னொரு காலத்தில் பிரம்ம நிஷ்டரான கிருஷ்ண த்வைபாயன ரிஷி வண்டிப்பாதையில் விரைவாக ஓடும் ஒரு புழுவைக்கண்டார். எல்லாப் பிராணிகளின் நடையையும் சப்தத்தையும் அறிந்த அவர் புழுவைக் கண்டு, "புழுவே! நீ பயந்து வேகமாகச் செல்கிறாய். உன் இருப்பிடம் எங்கே? உனக்கு யாரிடத்தில் பயமுண்டாகியிருக்கிறது?" என்று கேட்டார்.

அதற்குப் புழு, "வண்டிக் கூட்டத்தின் ஓசையைக் கேட்டு எனக்குப் பயமுண்டாயிற்று. அது என்னைக் கொன்றுவிடுமென்று விலகிப் போகிறேன். புழுப் பிறப்பாகிய என்னைப் போன்றவன் அதைத் தாங்க முடியாது. ஆகையால் இந்தக் கொடிய பயத்தினின்று விலகிப் போகிறேன். பிராணிகளுக்கு மரணம் கஷ்டமன்றோ. உயிர் வாழ்க்கை மிக அரிது. ஆதலால் இந்தப் பயத்திலிருந்து விலகி ஓடுகிறேன்" என்று சொல்லிற்று.

ரிஷி புழுவைப் பார்த்து, "உனக்கு சுகமேது? விலங்கு ஜாதியிலிருக்கும் உனக்கு மரணமே சுகமென்று நினைக்கிறேன். சப்தம், ஸ்பரிசம், ரஸம், கந்தம் இவற்றையும் அளவற்ற அநேக சுகங்களையும் நீ அறியாய். உனக்கு மரணமே நலம்" என்று சொன்னார். அதற்குப் புழுவானது சொல்லியதாவது:—

ஜீவன் எல்லாத் தேகங்களிலும் பற்றுள்ளதாயிருக்கிறது. இந்தத் தேகத்திலும் எனக்கு சுகமிருப்பதை நான் உணருகிறேன். ஆகையால் பிழைத்திருக்க விரும்புகிறேன். மனிதர்களுக்கும் விலங்கு ஜாதிகளுக்கும் சுகத்திற்குரிய விஷயங்கள் வேறு வேறாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நான் மானிட ஜாதியில் மிகுந்த தனமுள்ள சூத்ரனாகப் பிறந்து பிராம்மணரைப் பகைத்தும் கொடியவனாகவும், லோபியாகவும், வட்டியினால் ஜீவிப்பனாகவும் இருந்தேன். அயலார் சொத்தை எடுத்துக்கொள்வதிலேயே எப்பொழுதும் ஊக்கம் வைத்திருந்தேன். எனக்கே வேண்டிய பொறுமையினால் வேலைக்காரர்களையும் விருந்தினர்களையும்விட்டுப்புசித்தேன். தேவதைகளுக்காகவும் பித்ருக்களுக்காகவும் சிரத்தையோடு ஒரு காரியமும் நான் செய்ததில்லை. அன்னங்கேட்டவருக்கு அன்னம் கொடுத்ததில்லை. கொடுத்த அன்னத்தையும் பிடுங்கிக் கொண்டேன். இராக்காலத்தில் பயந்து என் வீட்டிற்கு வந்து சரணாகதி செய்தவர்களையும் நிஷ்காரணமாக அபயம் கொடாமல் தள்ளிவிட்டேன். அடலானுடைய சுகத்தைக் கண்டால் ஸகிக்க மாட்டேன். பிறர் நன்மைபெறக் கருதேன். கிழவியான தாயையும் ஒரு தரம் ஒரு அதிதி தற்செயலாய் என் வீட்டிற்கு வந்தபோது பூஜித்தேன். அதனால் பூர்வ ஜன்மஞாபகம் என்னை விடாமலிருக்கிறது. அந்த நற்கருமங்களால்தான் நான் சுகத்தில் விருப்பம் வைத்திருக்கிறேன்.

பிறகு ரிஷி பின்வருமாறு சொன்னார்:—நீ திர்யக் ஜாதியிலிருந்தும் நல்ல கர்மத்தினால் பூர்வ ஜன்ம ஞானம் தவறாமலிருக்கிறாய். நான் என் தவ வன்மையினால் பார்ப்பதனாலேயே உன்னைக் காப்பாற்றுகிறேன். தவவன்மைக்கு மேலான வன்மை வேறு ஒன்றுமில்லை. நீ செய்த பாவங்களினால் நீ புழுவாகவிருப்பது எனக்குத் தெரியும். கர்ம பூமியில் செய்த கர்மத்தின்பலனையே தேவர்களாகவும் விலங்குகளாகவுமிருந்து அனுபவிக்கின்றனர். உனக்கு இஷ்டமிருந்தால் மனுஷ்ய ஜன்மத்தில் சிறந்த தர்ம பலனை அடையலாம். உனக்கு விருப்பமிருந்தால் வரிசையாகப் பிராம்மணத்தன்மையையும் கொடுப்பேன்.

புழுவும் அதன்படி விரும்பியது. ரிஷியும் படிப்படியாகப் புழுவுக்கு பிராம்மண ஜன்மத்தையும் அளித்தார். ரிஷியானவர் அவ்விதம் மாறிய பிராம்மணனைப்பார்த்து, "பணத்தையே முக்கியமாகக் கொண்டவனும் கொடியவனும் பிறர் சொத்தை அபகரிப்பவனுமாகிய சூத்ரனாயிருந்த உனக்கு இப்போது என் தரிசனம் கிடைத்தது. அதுதான் நீ முன் செய்த புண்ணியம். திர்யக் ஜாதியிற் பிறந்திருந்தபோதிலும் என்னை நீ பூஜித்ததனாலும் புண்ணியமுண்டாகியிருக்கிறது. நீ எவ்வகையிலும் துயரப்பட வேண்டாம். அவனவன் தர்மத்திற்கும் ஆசாரத்திற்கும் தக்கபடி புண்ணியம் செய்தவன் நல்ல ஜன்மங்களிலும் பாபஞ் செய்தவன் கெட்ட ஜன்மங்களிலும் பிறக்கின்றனர். ஆகையால் மரணத்திற்குப் பயந்து எவ்வகையிலும் துயரப்படாதே. தர்மமென்னும் லாபத்திற்குமேற்பட்டது ஒன்றுமில்லை. தர்மம்தான் உத்தமம் என்று சொன்னார். முடிவில் பிராம்மணன் ப்ரம்மலோகத்தையும் அடைந்தான்.

பீஷ்மரும் இக்கதையைச் சொல்லி புண்ணிய க்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் யுத்தத்தில் கொல்லப்பட்ட க்ஷத்திரிய ஸ்ரேஷ்டர்கள் புண்ணிய கதியையே அடைந்திருக்கின்றனர் என்று யுதிஷ்டிரருக்குச் சொன்னார்.


மருவுகள், பருவுகள்
முதலிய தோல் வியாதிகள்
ஸ்திரீகளின் அழகைக்
கெடுக்கின்றன.

தெளிவும், மிருதுவும், மேன்மையுமான தோல் அதிக மனோகரமானதென்று ஒவ்வொரு ஸ்திரீக்கும் தெரியும். இந்தகாரணத்தினாலேதான் ஆயிரக்கணக்கானவர்கள் குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) உபயோகிக்கிறார்கள். குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) தினந்தோறும் உபயோகித்தால் அது தோலைச் சுத்தமாக்குவதுமல்லாமல் அழுக்கைநீக்கி, வேர்க்குரு பருவுகள் முதலிய அவலக்ஷணங்களை போகச் செய்யும்.




இந்த செழிப்புள்ள நோய் தடுக்கும் நுரை நல்ல வாசனையாயும், உல்லாசமாயுமிருப்பதுமன்றி திரேகமுழுதற்கும் சவுக்கியத்தைக் கொடுக்கும். உனக்கு கரப்பானாவது மற்ற எந்த தோல்நோய்களினாலாவது கஷ்டம் வந்தால் குடிகூரா தைலத்தை (Cuticura Ointment), சோப்புக்கட்டியால் கழுவுமுன் உபயோகிக்கவேண்டும். அது தோலைத் தேற்றி ஆற்றி தெளிவாக்குகிறது.

குடிகூரா சோப்புக்கட்டி
CUTICURA SOAP

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.






சவரன்மாத்து தங்க நகைகளும் முதல் தரமான வைரங்களும் அசல்வெள்ளி சாமான்களும்
உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?

வீகம்ஸி சபீல்தாஸ் & சன்ஸ்.
50 வருஷங்களாய் பிரக்யாதிபெற்றவர்கள்
112, சைனா பஜார் ரோட்டு　　மதராஸ்

சிறுவர் பகுதி

# மதியற்ற அரசன்

——:[○]:——

(கே. எஸ். ஆர்.)

முன் ஒரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் தன் சபையில் அநேக மந்திரிமார்களை யும், புத்தியில் சிறந்த வல்லோர்களையும் வைத்துப் போஷித்துவந் தான். அவனிடம் எப்பொழுதும் இரு மந்திரி கள் தக்க சமயத்தில் "மந் திரிக்கழகு வரும்பொருளு ரைத்தல்" என்பதற்கு இணங்க இருந்து வந்த னர். அவர்களிருவரும் மிகவும் புத்திசாலிகள். அவர்களில் ஒருவன் பெயர் கலாவல்லபன். இவன் எதையும் யோசித் துச் சொல்லும் குண முடையவன். மற்றவ னாகிய சத்தியசீலன் கேட் டதற்கு யோசியாமல் பதில் கூறும் தன்மை யுடையவன்.

அரசன் அடிக்கடி இரு வர் புத்தி சாதுர்யத்தை யும் பரிசோதிப்பான். அவர்கள் சொல்லும் உண்மையான மறு மொழியைக் கேட்டு அக மகிழ்வான். ஒரு நாள் அரசன் தன் வழக்கம் போல் இருவரையும் நோக்கி, "மந்திரிகளே! அரசனை ஒருவன் காலால் உதைத்தால் அவனுக்குத் தகுந்த தண்டனை யாது?" என்று கேட்டான்.

இதைக் கேட்ட சத்ய சீலன், "அரசே! அப் பேர்ப்பட்ட சண்டாளனை



...றுமனே விடுதல் ...து. அவனைத் தூக் ... அவனது கால் ... துண்டித்து விடுத ... தகுந்த தண்டனை" ...வ கூறினன்.

இதைக் கேட்ட அர சன் மிகவும் மகிழ்ந்து கலாவல்லபனை நோக்கி, பதில் உரைக்கும்படி கூறி னன்.

கலாவல்லபன் "வேந் தர்வேந்தே! அப்பேர்ப் பட்டவர்கள் மிகவும்உத்த மர். அவர்கள் கால்களால் உதைபடல் மிகவும் சிறந் ததேயாகும். ஆதலால், அக்கால்களுக்கு தங்க பாதரக்ஷைகளைச் சூட்டிக் கண்கொண்டு கண்டு மகிழ வேண்டும்" என்றான்.

இவ்வார்த்தையின் பொருளைத் தெரிந்து கொள்ளாத அரசன் கோ பம் கொண்டு கலாவல்ல பனைச் சிறையிலிடும்படிக் கட்டளையிட்டான். காவ லரும் சிறையிலிட்டனர்.

அரசன் ஒருநாள் தன் குழந்தையுடன் அந்தப் புரத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அச் சமயம் குழந்தை மிகவும் சந்தோஷம் கொண்டு சிரித்தது; கால்களை மேலே தூக்கி "விண், விண்" என்று உதைத்



தது. இவ்வுதையைக் கண்ட அரசன் உடனே தன் இரு மந்திரிகளையும் நினைத்துக்கொண்டான். கலாவல்லபனைச் சிறையி லிட்டதற்காக மிகவும் மனம் வருந்தினன்.

உடனே அரசன் எழு ந்து நேராகச் சிறைச்சா லைக்குச் சென்றான்; சிறை யினின்று கலாவல்லபனை விடுவித்தான்; அவனை நோக்கி, அவன் கூறி யதை விளக்கிக் கூறும்படி கேட்டான்.

"அரசே! தங்களுக்குக் கீழ் எவ்வளவோ சிற்றர சர்களும், சேவகர்களும், சேனைகளுமிருக்கின்றன. தங்கள் அரண்மனை வாயிலை இரவு முழுதும் காவலர்கள் இமைகூட மூடாமல் காவல் காக்கின் றனர். இப்படியிருப்ப தால், உங்களுடைய பகை வன் ஒருவனும் அரண் மனைக்குள் வரமுடியாது. சண்டை செய்ய நேரிடும் போதும் அவன் அநேக வீரர், குதிரைப்படை முத லிய படைகளைத் தாண்டி வந்து, உங்களைக் காலால் எட்டி உதையான். ஆத லால், குழந்தைகளே தங்க ளுடைய ஆனந்தத்தைக் காட்டக் கால்களால் உதை க்கும். இதுகொண்டே தான் நான் அவ்வாறு கூறினேன்" என்று கலாவல்லபன் கூறினன்.

அரசன் தனக்குள் ளேயே யோசித்தான். "என்மீது பட்ட காலை வெட்டிவிட வேண்டும் என்று சத்யசீலன் சொல் லியபடிக் கேட்டால் என் அன்புள்ள புத்திரனின் கால்கள் போய்விடும். ஆத லால், அது தகுந்த பதில் அன்று. கலாவல்லப னின் பதிலே சிறந்த பதில்" என்று கூறிக் கொண்டு சத்தியசீலனைக் கூப்பிட்டு, அவனது பதில் தக்கது அன்று என்று கூறி அவனைச் சிறையிலிட்டான்.

கலாவல்லபனைத் துதி செய்தான். வெகுமதிகள் பலவற்றை அளித்தான். அன்று முதல் அரசன் யாதொரு காரியம் செய்ய வேண்டுமென்று நினைத் தாலும் கலாவல்லபனு டன் யோசித்த பின்பே காரியத்தைச் செய்து வந் தான்.

* * * *


அசல் புளூ ஜாகர்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE) நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப்சந்த

175. சைனு பஜார் மதராஸ்.

மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட்ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மி டம் கிடைக்கும். எல்லோரை யும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி, செக்ரிடரி

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்வி களுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணு. ஜாதக விவரம் அல் லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம், திருத்தணி, S. இந்தியா.

சிறந்த கூந்தல் ஆகாரம்

தேகத்திற்கு நல்லுணவு அவசியமல்லவா? அதுபோல் கூந்தலுக் கும் நல்ல ஆகாரம் அவசியம். எனவே உலகப் புகழ் வாய்ந்த

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்ட்)

உபயோகியுங்கள்.



கூந்தலை வளர்க்கக்கூடிய பல மூலிகைகளா லானது. பொடுகைப்போக்கி, தலைமயிர் உதிர் வதைத் தடுக்கும். மூளைக்குக் குளிர்ச்சி தரும். துல்லிய மணம். விலை புட்டி 1-க்கு ரூ. 1; 3 புட்டிகள் ரூ. 2-10. வி. பி. செலவு தனி. தபால் செலவுக்காக ½ அணு ஸ்டாம்பனுப்பினுல் சாம்பில் கிடைக்கும். மொத்த ஏஜண்டுகள்:

The Anglo Indian Drug & Chemical Co, BOMBAY, 2



10,000 விராகன்
(1)
உன் தகப்பனார் எனக்கு இஷ்டமானதைக் கொடு என்றார் இந்தத் தொகைதான்
என் தகப்பனார் உன்னிடம் கொடுத்த பொருளைக் கொடு
1000
9000
(2)
என் தகப்பனார் கொடுத்த பொருளை என்னிடம் தர மறுக்கிறான்
(3)
உன் பேச்சின் படியே உனக்கு இஷ்டமான 9000 விராகனை இந்தப் பையனிடம் கொடு
எனக்கு இஷ்டமானதை இவனுக்குக் கொடுக்கும்படி இவன் தகப்பனார் சொன்னார்
9000
(4)
K.R.SARMA

...யவற்
... என்றும்
... தர்சனத்தைப் பரவச் செய்யலாம் என்றும் எண்ணியே கர்நாடகத்துக்குச் சென்றார்.

அக்காலத்தில் கர்நாடகத்தை ஆண்டு வந்தவன் விருபாக்ஷன் என்னும் விஜயநகரத்து அரசன். அவன் கிழக்கு, தெற்கு, மேற்குக் கடற்கரைகளுக்கு அதிபனாகக் கர்நாடகத்தை ஆண்டு வந்தான்.

## ராமாயணம் கேட்டு பேய்கள் முக்தியடைந்தது

அவன் தந்தை இறந்ததும் இராஜ்யத்தை முறைமையால் அடைந்தான். ஆயினும் அவனுடைய தாயாதிகளும் உறவினர்களும் அதைப்பொறுமல் அவனைக்கொன்று விடுவதற்குச் சூழ்ச்சி செய்தார்கள். இதையறிந்த விருபாக்ஷன் தன் உயிரைக் காத்துக்கொள்வதற்காக நாட்டைத்துறந்து சிறிது காலம் ஒளிந்துகொண்டிருந்தான். பிறகு தனக்குத் துணையாக ஒரு பெரும் படை திரட்டிக்கொண்டு வந்து விஜயநகரத்தை அடைந்து தனக்கு விரோதமாக இருந்த உறவினர்களை வளைத்து இரவோடு இரவாக அவர்களைப்படுக்கையிலேயே கொன்று சிங்காதனத்தை அடைந்தான். துர்மரணம் அடைந்த அவன் உறவினர்கள் பிசாசுகளாக மாறி அவனை இம்சிக்க ஆரம்பித்தார்கள். அப்பிசாசுகள் அக்கம் பக்கத் அட்டகாசம் செய்துவக்

... அறி... அவற்றை மனிதர்களாகவே மதித்தார். அவை அவரை நன்கு வரவேற்று உபசரித்தன. அந்தணர் இராமாயண வித்பத்தி உள்ளவர் என்பதையறிந்தவுடன் அவரை அந்த நூலை வாசித்துப் பொருள் கூறும்படி ஆஞ்ஞாபித்துத் தினம் ஒன்றுக்கு ஒரு நிஷ்கம் வீதம் பொன்னும் அளித்தன. பட்டாபிஷேக தினத்தன்று அவருக்குப்பலவிதமான வெகுமதிகளைக் கொடுத்து அவற்றின் பூர்வ விருத்தாந்தங்களையும் கூறின. ராமாயணத்தைக் கேட்ட பலத்தினால் அவை பைசாசத் தன்மை நீங்கி நற்கதியடைந்தன. அத்துடன் நகரத்துக்கும் அவற்றின் தொந்தரவு நீங்கியது.

இதையறிந்த அரசன் விருபாக்ஷன் தன்னால் துர்மரணம் அடைந்தவர்களே நற்கதியைப்பெற்ற பொழுது தனக்கும் நற்கதி ஏற்படாதாவென்று எண்ணி அவ்வந்தணரை வரவழைத்துத் தனக்கும் இராமாயண உபதேசம் செய்யும்படி வேண்டிக்கொண்டான். அவரும் அங்ஙனமே அரசன் சபையில் இராமாயணத்தை வாசித்துப் பொருள் கூறி, அவனைச் சந்தோஷிக்கச் செய்தார். பட்டாபிஷேக தினத்தன்று அரசன் அந்தணருக்குக் கனகாபிஷேகம் செய்து வைத்தான். அத்துடன் தானும் விஷ்ணு பக்தனாக மாறினான். அரசனைப் பின்பற்றி நாட்டு மக்களும் வைஷ்ணவ தர்மத்தை ஆதரிக்கத் தலைப்பட்டார்கள்.

... நகர அரசர்களுக்கு ராஜ குருவாக விளங்கிய தாதாசாரியர்களின் வமிசத்தைப்பற்றிக் கூறும் வைஷ்ணவ நூல். இது மதக் கிரந்தமானதாலும், சம்பிரதாயத்தை ஒட்டிக் காவிய ரூபமாக எழுதப்பட்டிருப்பதாலும் செய்திகள் மிகைப்படக் கூறப்பட்டிருப்பது உண்மையே. ஆயினும் சரித்திர ஆதாரங்கள் பொதுவாக இக்கதையை உறுதியாக்குகின்றன.

## விஜயநகர சாம்ராஜ்யம்-ரத்தம் சிந்தாமல் பட்டமேற்பேயில்லை

இந்த விருபாக்ஷன் விஜயநகரத்தை ஆண்டுவந்த பிரவுடதேவராயர் என்றும் பிரதாபதேவராயர் என்றும் வழங்கப்பெறும் இரண்டாம் தேவராயருடைய மகன். இவனுடைய தாயார் பெயர் சித்தலதேவி என்பதாகும். தேவராயருக்குப் பொன்னலாதேவி என்னும் மற்றொரு தேவியிடம் பிறந்த மல்லிகார்ஜுனன் என்னும் மகனும் உண்டு. மல்லி

... பிறகு அவ... போட்டியில்லாமல் பட...த்தை அடைந்தான் என்ப... அதன் சரித்திரத்திலேயே கிடையாது. அநேகமாக ஒவ்வொரு அரசனும் பல சூழ்ச்சிகள் செய்தும் இரத்தம் சிந்தியுமே பட்டத்தைப் பெற்றிருக்கிறான். அவ்விதமே மல்லிகார்ஜுனன் இளவரசனாகச் சிறிது காலம் மதிக்கப்பட்டு வந்தாலும் தேவராயர் இறந்தவுடன் விருபாக்ஷன் அரச சிங்காதனம் ஏறினான். ஆயினும் அவன் ஒரு வருஷத்துக்கு மேலாக அரசனாக இருக்க முடியவில்லை. மல்லிகார்ஜுனனுக்குப் பலம் அதிகரிக்கவே விருபாக்ஷன் நாட்டைத் துறந்து ஓடிச் சுமார் பத்தொன்பது வருஷங்கள் மறைந்து வாழ்ந்தான்.

விஜய நகரத்து மன்னர்கள் தெலுங்கு தேசங்களில் தங்கள் ஆதிக்கத்தைப் பரவச்செய்வதைத் தடுப்பதற்காக அக்காலத்திலிருந்த பாமனி ஸுல்தானும் ஒரிஸா தேசத்துக் கஜபதியும் ஓர் ஒப்பந்தம் செய்து


வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.

கொண்டு இருவரும் சேர்ந்து மல்லிகார்ஜுனனைத் தாக்கினார்கள். ஆயினும் போரில் முறியடிக்கப்பட்டார்கள். சிறிது காலத்திற்கெல்லாம் பாமனி சுல்தான் இறந்துவிட்டதாலும் அதற்குப் பிறகு அவன் நாட்டில் உள்நாட்டுக்கலகங்கள் ஏற்பட்டதாலும் அவர்கள் கர்நாடகத்தைப்பற்றி நினைக்க முடியவில்லை. கஜபதிமட்டில் தனியாக மறுபடியும் ஒரு தடவை தொண்டைமண்டலத்தைத் தாக்கினான்.

இங்ஙனம் தன் ராஜ்யத்தின் எல்லைப்புற மாகாணங்களில் பிறர் புகாவண்ணம் மல்லிகார்ஜுனன் போர் நிகழ்த்திச் சளைத்திருக்கும் சமயம் விருபாக்ஷன் உள்ளே புகுந்து தன் சகோதரனையும் அவனைச் சார்ந்தவர்களையும் வென்று சிங்காதனத்தைக் கைப்பற்றினான்.

இந்த சமயத்தில் விருபாக்ஷனுக்கு உதவி செய்தவன் பின்னால் அவனுக்குப் பிரதம மந்திரியாக இருந்த சாளுவ நரஸிம்ஹனே என்று தெரிகின்றது. மல்லிகார்ஜுனன் ஆண்டு வந்த காலத்திலே சாளுவ நரஸிம்ஹன் பெனுகொண்டா ராஜ்யத்தின் மண்டலேச்வரனாக இருந்தான். அவன் பலம் அதிகரித்து வந்தது என்பதும் அதைக் கண்டு மல்லிகார்ஜுனன் பயப்பட்டான் என்பதும் சாஸனங்களினின்றும் தெரியவருகின்றன. அரசன் மண்டலாதிபதியை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றியும் அவன் பலம் அதிகரித்தே வந்தது. கடைசியில் விருபாக்ஷன் பட்டம் கட்டப்பெற்றவுடன் நரஸிம்ஹன் முதல் மந்திரியாக ஆனான். அன்றி, சிறிது சிறிதாக இராஜாங்கத்தைத் தன் வசமாக்கிக் கொண்டு "விருபாக்ஷ மஹாராயர் பிருதிவீ ராஜ்யம் செய்யும் காலத்தில், நரஸிம்ஹராயவுடையார் பாலனஞ் செய்து வந்தார்" என்று சாஸனங்களிற் குறிப்பிடும்படியான செல்வாக்கை அடைந்தான்.

### ஸாம்ராஜ்யம் வலியிழந்தது

இரண்டாம் தடவையாக ராஜ்யத்தை யடைந்த பிறகு விருபாக்ஷன் சுமார் இருபது வருஷங்கள் அரசு செலுத்தியிருக்கிறான். ஆயினும் அவன் காலத்தில் ஸாம்ராஜ்யம் வலியிழந்துவிட்டது.

விஜயநகர மன்னர்கள் மதுரையில் ஆண்டுவந்த ஸுல்தான்களை வென்று பாண்டிய சோழ மண்டலங்களையும் தங்கள் ஸாம்ராஜ்யத்தில் சேர்த்து மண்டலேச்வரர்களைக் கொண்டு ஆண்டு வந்தார்கள். விருபாக்ஷன்பட்டத்துக்குவந்த சமயத்தில் மத்திய அரசாங்கம் வலிகுன்றி இருந்தபடியால், பாண்டிய தேசாதிபதி வெளிக்கிளம்பித் தன் சுயேச்சையை நிலை நிறுத்தினான். ஸமர கோலாகலன் என்று புகழ்ப்பெறும் புவனைக வீரன் பாண்டி மண்டலத்தைத் தன் வசமாக்கிக் கொண்டதல்லாமல், தொண்டை நாட்டின் மேலும் தண்டு எடுத்து வந்து காஞ்சிபுரத்தைக் கைப்பற்றினான்.

விஜயநகரம் பாமனி முதலிய நாடுகளுக்கு வேண்டிய குதிரைகளை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வியாபாரம் செய்து வந்தவர்கள் மேலைக் கடற்கரையோரத்தில் உள்ள பட்கல் என்னும் இடத்தில் வசித்துவந்த முகம்மதியர்களே. அவர்கள் விருபாக்ஷனுக்குக் குதிரைகளை விற்க மறுத்து எல்லாக் குதிரைகளையும் பாமனி ஸுல்தானுக்கே விற்றுவிட்டார்கள். அதனால் கோபம் கொண்ட மன்னன் பட்கல்மேல் தண்டு எடுத்துச் சென்று பல முகம்மதியர்களை (பதினாயிரம் என்று கூறுவர் ஒரு ஆசிரியர்) வதை செய்தான். எஞ்சியவர்கள் நாட்டை விடுத்துக் கோபகா பட்டினத்துக்கு ஓடிக் கடற்




## ஊக்கம் குறைந்தவர்க்கு வாலிப ஆரோக்கியம்

வாலிப வலுவை அழியாமல் காப்பதும், யௌவன இன்பங்களை அனுபவிப்பதும் ரொம்பவும் சுலபம். தேக உருப்புகளுக்கு ஏற்படும் சோர்வுதான் பலவீனம்; வேறொன்றுமில்லை.

ஆகவே உருப்புகளுக்கு வலுவூட்டினால் பலவீனம் மறைந்தோடுகிறது. புதிய வாழ்வைத் தரும் ஸனடோஜன் ஜீவசத்து மிகுந்த உலோக ஆகாரம்; இதைத் தேகம் உடனே கிரகித்துக்கொள்கிறது; உடனே வலுவும், வாலிபமும் ஏற்படுகின்றன.

உங்கள் தேகத்தில் மீண்டும் யௌவனமும், வலுவும் ததும்பி நிற்கவேண்டுமானால் உங்கள் மண வாழ்க்கையை இன்பகரமாகக் கழிக்கவேண்டுமானால் இன்றே ஸனடோஜன் சாப்பிட ஆரம்பியுங்கள்.

"அதில் சிற்றின்ப விளையாட்டால் ஏற்படும் நரம்பு மெலிவு ஆண்மைத்தனமின்மை இவற்றிற்கு ஸனடோஜன் நம்பிக்கை வாய்ந்த, நிச்சயமான நிவாரணி. சரேலென்று ஊக்கமேற்பட்டு, உடனே அழிவதுபோலல்லாமல் ஸனடோஜன் நிலையான பலனைத் தருவதில் இணையற்று விளங்குகிறது."

என்கிறார் "இண்டியன் மேடிகல் வோர்ல்ட்" என்னும் சஞ்சிகையில் டாக்டர் ஏ. கே. என்பவர்.




# SANATOGEN

உண்மையான டானிக் உணவு.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

கைபடாமல் தயாரிக்கப்படுவது; மத பூர்வமான ஆட்சேபிக்கக்கூடிய எந்தச் சாக்குமில்லை.

ஒரு குடி ...த்திக்கொண் ...வே பிற்காலத் ...கியர்களுக்குத் ...க அமைந்த ...டினம் ஆகும். ...தானும் குதிரை ...நக்கு உதவி செய் ... கக கோவா பக்கத் ...ள்ள நாடுகளைக் கைப் ... தன் வசமாக்கிக் ...டான். அதைத் திரும் ... பெற விரூபாக்ஷன் மிக ...றும் கூடவில்லை.

...வனுடைய ஆட்சியின் மத் ...ல் நாட்டில் ஒரு கொடிய ...ஞ்சம் வந்து மக்களை வாட்டி யது. ஆந்திர தேசத்து மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். பாமினி ராஜ்யத்துக் குடிகள் அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளம்பிக் கொண்டபள்ளியில் இருந்த முகம்மதிய கவர்னரைக் கொலை செய்துவிட்டார்கள். இந்த சமயத்தை எதிர்பார்த்திருந்த கஜபதியும், விரூபாக்ஷனும் தெலுங்கு தேசத்தைத் தங்கள் தங்கள் வசமாக்கிக் கொள்ள இதுவே சமயம் எனக் கருதிப் படை திரட்டிப் புறப்பட்டார்கள். கவர்னரைக்கொன்ற குடிகளைத் தண்டிக்கவேண்டி பாமினி ஸுல்தானும் பெரும் படையுடன் வந்தான். இதையறிந்த கஜபதி தன்னாட்டுக்குத் திரும்பிச் சென்றான். விரூபாக்ஷன் மந்திரியும் காரிய கர்த்தாவுமான சாளுவ நரஸிம்ஹராயர் மட்டில் ஸுல்தானை ராஜமஹேந்திரபுரத்தில் எதிர்த்துப் போர் செய்தான். ராயர் தோற்றுப் போகவே, ஸுல்தான் நாட்டுக்குள் புகுந்து சில இடங்களைச் சூறையாடிச் சென்றான்.

இவ்விதமாக விரூபாக்ஷன் காலத்தில் சாம்ராஜ்யம் பல பகுதிகளை இழந்தது. மந்திரியாகவும் தண்டநாயகனாகவும் இருந்த சாளுவ நரஸிம்ஹன் மிகுந்த சாமர்த்தியசாலியே. அவன் பல போர்கள் நிகழ்த்தி வெற்றிகொண்டதுடன், பிற்காலத்தில் காசியில் மகுடாபிஷேகம் செய்துகொண்டான் என்றும் கூறப்படுகின்றது. ஆயினும் மன்னன் அவனுக்கு உதவியாக இராஜாங்கக் காரியங்களைக் கவனிக்காமல் சிற்றின்பப் பிரியனாக இருந்ததே ஸாம்ராஜ்யம் வலியிழந்ததற்குக் காரணம் என்று தெரிய வருகின்றது.

சரித்திர :வரலாறு

இம்மன்னனுடைய அந்திய காலத்தைப்பற்றி — நுநிஸ் என்னும் ஐரோப்பியர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"அவ்வரசன் (விரூபாக்ஷன்) ஆண்டு வந்த காலத்தில், தான் சதா மதுபானம்செய்து சந்தோஷித்தும் பெண்மக்களைத் தவிர மற்றொன்றையும் கருதாமல் சிற்றின்பம் நுகர்ந்...ம் வந்தானேயன்றி, தன்னு...டைய படைத் தலைவர்களை ...சா குடி மக்களையோ பார்த்த ...ிக்க... வனேயல்ல. அதனால் சிறிது காலத்திற்கெல்லாம் அவன் முன்னோர் தேடி வைத்துப் போன எல்லாவற்றையும் இழந்தான். நாட்டுப் பெரு மக்கள் அரசன் குணத்தையும் வாழ்க்கையையும் கண்டு வெறுத்துத் தங்கள் ஆதிக்கத்திலிருந்த நாடுகளைக் கைக்கொண்டு அரசனுக்கு விரோதமாகக் கிளம்பினார்கள். அவன் காலத்திலேயே, கோவா, சாவுல், தபுல், முதலிய நாடுகளை ஸாம்ராஜ்யம் இழந்தது. அரசன் வெறிகொண்டு பல தண்ட நாயகர்களைக் கொலை செய்தான். ஒரு நாள் இரவு தன்னைக் கொல்வதற்காகத் தன்னுடையபடைத் தலைவன் ஒருவன் தன் படுக்கையறைக்குள் நுழைந்ததாகக் கனவு கண்டதற்காக மறுநாள் காலையில் அவனை வரவழைத்துத் தான் கனவு கண்ட செய்தியை அவனிடம் கூறி அந்தக் குற்றத்துக்காக அரசன் அவனைக் கொன்று விட்டான். அரசனுக்கு வயது வந்த பிள்ளைகள் இருவர் இருந்தார்கள். தங்கள் தந்தையின் அகிருத்யங்களையும் அதனால் நாட்டின் பலபாகங்களை இழந்ததையும் எண்ணி வருத்தப்பட்டுத் தந்தையைக் கொன்று விடுவதே நலம் என்று முடிவு செய்தார்கள். அதே விதமாக மூத்தவனான அரசிளங்குமரன் அரசனைக் கொன்றுவிட்டான்."

இப்படி எழுதப்பட்டது இது நிகழ்ந்ததாகக் கூறப்படுவதற்குச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஆகும். இதன் உண்மையை அறிவதற்கு வேறு ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. எனினும், இதை முற்றிலும் தள்ளி விடுவதற்கில்லை. விரூபாக்ஷன் இறந்து ஒரு வருஷத்திற்குள்ளாக சாளுவ நரஸிம்ஹன் சக்கரவர்த்தியாக முடி சூட்டப்பெற்றான்.

நுநிஸ் எழுதியிருப்பதினாலும், விரூபாக்ஷன் குரூர சித்தம் கொண்டவன் என்றும் நாட்டு மக்கள் அவனை விரும்பவில்லை என்றும் கருதலாம். இவனுடைய குரூர நடத்தையைப் பிரபந்நாமிருதமும் ஒருவாறு தெரிவிக்கின்றது என்றே கொள்ளலாம்.

ஆயினும் இவன் வித்வத் ஸம்பன்னன் என்றே தெரிய வருகிறது. இவன் பல வித்துவான்களை ஆதரித்துவந்தான். இவன் காலத்தில் வீர சைவர்கள் பலர் பண்டிதர்களாக விளங்கிக் கன்னட மொழியில் அநேக நூற்களை எழுதியிருக்கிறார்கள். வடமொழி நூற்களும் சில எழுதப்பட்டுள்ளன. இவன காலத்தில்தான் கர்நாடக ஸாம்ராஜ்யத்தில் வைஷ்ணவ மதம் பிரபலமடையத் தலைப்பட்டது. விரூபாக்ஷனுக்கு முந்தி ஆண்ட மன்னர்கள் யாவரும் சைவர்களாகவே விளங்கினார்கள். ஆனால் இவனுக்குப் பின்னால் வந்த மன்னர்களிற் பெரும்பாலோர் விஷ்ணு பக்தர்கள். இங்ஙனம் மாறியதற்குக் காரணம் இவன் விஷ்ணு பக்தனாகத் திரும்பியதேயாகும்.


கறப்புகள் தொந்தரவேன் ?
பிளிட் பவுடர் தூவுங்கள்.


புகழ்பெற்ற பிளிட் காரரின் தயாரிப்பு.
D 9o P




ஸ்ரீ கஸ்தூரி கோரோஜன மாத்திரை
"பாலக்ஸ்" பேதி மாத்திரை
"யூனிகான்" டானிக்
14, ஸசா அவுஸ், மாடுங்கா, பம்பாய்



NO MORE
GREY HAIR


வெள்ளையாயிருக்கும் கூந்தலை இயற்கை அழகுடனிருக்கச் செய்யுங்கள்—கேஷ்கலா கூந்தலுக்குப புதிய அழகைக் கொடுக்கும்—கேஷ்கலாவையே உபயோகித்து உண்மையை உணர்வீர்.
KESHKALA
RESTORES NATURAL TINT
Obtainable from:—
அப்பா & கம்பெனி, சைனுபஜார் ரோட், மசராஸ். வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ். டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, டெங்களூர் சிடி & கண்டேன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ட-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.
Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No.(M)5506. Bombay 14.



தாது புஷ்டியைக் கொடுப்பதில் சிறந்தது


சி.எம்.சாமி
மன்மதக் குளிகை

இது உடலுக்கு வலுவைக்கொடுத்து ஆண்மையை அதிகப்படுத்தி இரத்த விருத்தியையும் வீரியவிருத்தியையும் திடகாத்திரத்தையும் தரும்.
20 குளிகை ரூ 2/-
பிராஞ்சு:—1/54. அருணசலநாயகன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

# தேயிலை பானத்தால்



## உங்களது தேகாரோக்கியத்தைப் பாதுகாருங்கள்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இது சாதாரணமாக சொல்வதாயினும் எவ்வளவு உண்மை. நாட்தோறும் சில கோப்பை தேத்தண்ணீர் அருந்துவது ஒரு பெரிய செலவல்ல. அது செய்வது ஒரு வியாதிக்கு மருந்தாகவுமல்ல. இந்திய சீதோஷ்ணத்தின் கொடிய தாபத்தினின்றும் நீக்கி ஆரோக்கியத்தை அளிப்பதற்கு ஒரு ஸகாயமாகும். புஷ்டியானதும் சுறுசுறுப்பூட்டுவதுமான இந்திய தேயிலையை அருந்துங்கள்.



### தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்திய தேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

**இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் — இந்திய தேயிலை**

IK 40

# மேக நோய்......

நிச்சய
நிவாரணி

முதலில் உங்கள் வியாதி மேக நோய்தானா என்பதை நன்கு பரிசோதித்து நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த நிச்சயம் ஏற்பட்டதும், 'என்ன செய்யலாம்' என்று பலாது யோசனைகளைக் கேட்டு மனத்தைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

அடுத்தபடியாக அதைர்யமும் வேண்டாம்; அவகாசத்தையும் வீணாக்க வேண்டாம்; அலட்சியம் துளி கூட வேண்டாம்.

அல்லது கண்ட மருந்துகளைச் சாப்பிட்டு ஏற்கனவே உள்ள அவஸ்தையை அதிகமாக்கிக் கொள்ளாதீர்கள்.

உங்களுக்கருகிலுள்ள மருந்து ஷாப்புக்குப் போங்கள்; 'கோபெய்சான்' என்று சொல்லி வாங்கிக்கொள்ளுங்கள்.

பிறகு அதில் கண்டுள்ள முறைப்படி ஒழுங்காய் சாப்பிட ஆரம்பியுங்கள்.

சிறிது காலத்திற்குள் வியாதி நிருவது நிச்சயம்.

# கோபெய்சான்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

மொத்த ஏஜண்டுகள்: சவுத் இண்டியன் மர்க்கன்டைல் கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press Mount Road, Madras-*Editor* C. R. Srinivasan, B.A.